படைப்பு

ஊற்று: 2 | நதி: 9 | ஜனவரி 2020 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



"இனி நான் கவிதையில் எடுக்கப்போகும் அவதாரம் என்ன என்று எனக்கே தெரியாது"

- கவிஞர் **இந்திரன்** அவர்களோடு ஒரு நேர்காணல்



நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு..
– கடிதங்கள்



சங்கப் பொங்கல் தொட்டு சமத்துவப் பொங்கல் வரை
– ஸ்ரீகா



பஷீரின் கடைசிக் கிடாய்
– அ.கரீம்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி :9 | ஜனவரி 2020

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தமிழ் தாசன் இரவிக்குமார்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு – 607002
admin@padaippu.com
9489375575



நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.


## உள்ளே...


- **தலையங்கம்** – பக். 04
- **“இனி நான் கவிதையில் எடுக்கப்போகும் அவதாரம் என்ன என்று எனக்கே தெரியாது”**
  – கவிஞர் இந்திரன் அவர்களோடு ஒரு நேர்காணல் – பக். 05
- **சங்கப் பொங்கல் தொட்டு சமத்துவப் பொங்கல் வரை**
  – ஸ்ரீகா – பக். 12
- **உலக சினிமா ஒரு பார்வை**
  – கவிஜி – பக். 15
- **நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு..**
  – கடிதங்கள் – பக். 18
- **படைப்பு குழுமப் புத்தக வெளியீட்டு விழா**
  – வரலட்சுமி சேசா – பக். 23
- **ஓரான் பாமுக்**
  – தா. ஜோ. ஜூலியஸ் – பக். 29
- **தேநீர் சாலை**
  – கரிகாலன் – பக். 36
- **மொழியாளர் அ.அய்யாசாமி**
  – முகம்மது பாட்சா – பக். 40
- **தமிழும் அறிவியலும் என்னிரு கண்கள்..**
  – ராம்கி சுருளியப்பன் – பக். 42
- **கீழடி - தமிழின் தாய்மடி**
  – கடையநல்லூர் பென்ஸி – பக். 44
- **வறட்சிக்கு நீரூற்றும் கவிதைகள்**
  – ஸ்ரீகா – பக். 57

- **திரைப்பாடல்களில் இலக்கியம்**
  – சுசித்ரா – பக். 63


## சிறுகதைகள்


- **கனாக் கண்டேனடி தோழி!**
  – பிரேமபிரபா – பக். 32
- **பஷீரின் கடைசிக் கிடாய்**
  – அ.கரீம் – பக். 50
- **கருத்தம்மாள்**
  – பொ.திராவிடமணி – பக். 61


## கவிதைகள்


- **ஊர்மிளை**
  – அழ.ரஜினிகாந்தன் – பக். 25
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 16**
  – ஜின்னா அஸ்மி – பக். 49
- **படைப்புலகம்**
  – ஜே.ஜே.அனிட்டா, ப.தனஞ்ஜெயன், துரை. நந்தகுமார் – பக். 59






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' இருபத்தொன்றாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

கடிதங்கள்.. உணர்வினைச் சுமந்துசெல்லும் தூதுவர்கள். உடனே செய்தி அனுப்பி உடனே பதிலையும் விருப்பக்குறியையும் எதிர்பார்த்துத் தவிக்கும் இந்தத் தலைமுறையினர் புரிந்துகொள்ள முடியாத வித்தை அது.

கால இடைவெளி எவ்வளவு இருந்தாலும் உணர்வு இடைவெளி இல்லாமல் கடிதங்கள் தொடர்ந்த காலங்கள் அவை. எளிய மனிதர்கள்கூட தங்களுக்கான மொழியைச் செதுக்கி அனுப்புவார்கள். சிறு அட்டையில் தங்கள் வாழ்க்கையை வரைந்தவர்கள் அவர்கள். என்றோ சந்திக்கும் உறவுகளை எல்லாம் வாரந்தோறுமோ மாதந்தோறுமோ வந்துகொண்டிருந்த கடிதங்கள்தாம் இணைத்தபடியிருந்தன. முக்கியமான செய்தி என்றாலும்கூட சில நாட்கள் காத்திருக்கும் மனப்பக்குவமும் வாய்த்திருந்தது அன்று. பலர் வீட்டின் பொக்கிஷ அறையில் இன்றும் சில கடிதங்கள் தேங்கியிருக்கும்.

தூதுக்கு ஓலைகொடுத்தல், சீட்டுக்கவி என்று கடித இலக்கியத்திற்கு ஆதியான ஆதாரங்களும் உண்டு. தற்போது கல்விக்கூடங்களில் பாடதிட்டத்தில் கடிதம் எழுதுவதையும் சேர்த்திருக்கின்றனர். அலுவலகக் கடிதங்களுடன் தனிப்பட்ட கடிதங்களும் எழுத பயிற்சிகள் உண்டு.

கற்றுத் தெளிவதில்லை கடிதக்கலை. உள்ளுக்குள் கூரேற்றி எறியப்படும் அம்பு அது.

கடிதங்கள் இலக்கியமாகும் தருணம் அழகு. எந்த ஒரு கடிதமும் யாரோ ஒருவருக்கு இலக்கியம்தான். எனினும் அனைவருக்கும் இலக்கியமாக ஏற்றுக்கொள்ளும் கடிதங்களுக்கென்று கலைநுட்பங்கள் உண்டு. அது பொருண்மை அளவில் ஒரு வரலாற்றைப் பதியச் செய்யும். வடிவ ஒழுங்குடன் வடிக்கப்பட்டிருக்கும்.

எழுதும் முறை அறிந்த காலத்திலிருந்தே கடிதம் வழியிலான கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்திருக்கக்கூடிய சூழலில் நீடித்த வரலாற்றைப் பெற்றிருக்கிறது கடித இலக்கியம்.

தமிழ்ப் பரப்பில் அறிவுரையும் அனுபவமும் கலந்து படைக்கப்பட்ட கடிதங்களைத் தாண்டி அரசியலுக்கும் அது ஓர் ஆயுதமானது. திராவிட இயக்க அரசியல் கடிதங்கள்வழி தொண்டர்களிடம் நெருக்கமாகியது. இத்தனைச் சிறப்பான கடித உறவு இரு இலக்கியவாதிகளுக்கு இடையில் நடந்தால்.. அவ்விரு இலக்கியவாதிகளும் தமிழின் தவிர்க்க முடியாத நவீன இலக்கியவாதிகளாக இருந்தால்.. இருவருமே வெவ்வேறு மாநிலங்களில் வேறுபட்ட படைப்புச்சூழலில் வாழ்ந்தால்.. வாழ்வின் கணிக்க முடியாத சூழலில் இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதலாய் உரையாடியிருந்தால்.. ஒருவர்மீதான மற்றவரின் படைப்பு மதிப்பு மிக அதிகமாக உருப்பெற்றிருந்தால்.. தமிழ்ப்பரப்பின் இலக்கியச் சூழல் குறித்து இருவரும் தீவிரமாக விவாதித்துக்கொண்டால்.. அது இலக்கியப் பெருஞ்செல்வம் அல்லவா..!

அச்செல்வம் கிடைத்திருக்கிறது நம் தகவிற்கு.

படைப்பாளர்கள் நகுலன் மற்றும் விக்ரமாதித்யன் இடையே நடந்த கடிதப் பரிமாற்றத்தில் நகுலன் எழுதிய கடிதங்கள் சென்ற இதழ் தொடங்கி வெளியாகிவருகிறது. கடிதங்களைப் பிரசுரிக்க அனுமதி அளித்த கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களுக்குத் தகவின் நன்றி.

இந்த இதழில் கலை விமர்சகர் இந்திரனுடனான நேர்காணல் இடம் பெற்றுள்ளது. மேலும் நூல் விமர்சனம், பொங்கல் விழா குறித்தகட்டுரை, தொடர்கள், அனுபவங்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

**– ஆசிரியர்**

• கவிஜி



# "இனி நான் கவிதையில் எடுக்கப்போகும் அவதாரம் என்ன என்று எனக்கே தெரியாது"

## - கவிஞர் இந்திரன் அவர்களோடு ஒரு நேர்காணல்

"ஒவ்வொரு சொல்லும் ஒரு கடல்" என்று சொல்லும் எழுத்தாளர் இந்திரன் தன் இதயத் துடிப்புகளால் புத்தகங்களை நிறைக்கிறவர். மனித குலத்தின்மீது மாறாத அன்பு எனும் பதாகையின் கீழ் எழுத்தை வாழ்பவர். அலைஅலையாய்ப் பேசக்கூடியவர். கடற்கரைச் சுவடுகள் அவர் சொற்களில் தடம் பதிக்கும்.. அவர் கண்ட பாண்டிச்சேரிக் கடலின் அதிகாலை தவம் மாதிரி. கலைவிமர்சகர்.. கவிஞர்.. மொழிபெயர்ப்பாளர்.. ஓவியர்.. ஆய்வாளர்.. எழுத்தாளர்.. இதழாசிரியர் என்று இவருக்குப் பல முகங்கள். பலதரப்பட்ட கண்காட்சி ஒருங்கிணைப்புகள், கருத்தரங்குகள், ஆய்வுகள், முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் என்று தமிழுக்கு இவர் ஆற்றிய அற்புதங்கள் நிறைய. இலக்கியம், அரசியல், நவீனம்,கவிதை, மொழிபெயர்ப்பு என்று அவரிடம் பேசியதிலிருந்து...

**இராசேந்திரன் இந்திரன் ஆன கதையைக் கவிதையாய்ச் சொல்லுங்களேன்...?**

ஒருவர் முதன்முதலாக அறிமுகம் ஆகும்போது அவரது முழுப் பெயர் சொல்லி அழைக்கிறோம். பழகப்பழக அவரது முழுப்பெயர் அரைப் பெயராகவும் காற்பெயராகவும் குறுகி விடுகிறபோது அவரோடு பாசமும், நெருக்கமும் அதிகமாகிவிடுகிறதல்லவா? அதுபோல்தான் இராசேந்திரன் இந்திரன் ஆன கதையும்.. இளமையில் "ஞானம்பாடி" என்ற பெயரில் எழுதிவந்தேன். அதே பெயரில் 1972இல் "திருவடி மலர்கள்" எனும் மரபுக் கவிதைத் தொகுதியை வெளியிட்டேன். வளர வளர நாம் என்ன பெரிதாக ஞானத்தைப் பாடிவிட்டோம் என்று மனசில் படத் தொடங்கிவிட்டது. 1976இல் நான்

மும்பை சென்று வாழத் தொடங்கினேன். எண்பதுகளில் டைம்ஸ் ஆஃப் இந்தியாவில் ஆங்கிலத்தில் கலை பற்றிய கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். அப்போது இராசேந்திரன் எனும் என் இயற்பெயரைச் சுருக்கி "இந்திரன்" எனும் பெயரைப் பயன்படுத்தத் தொடங்கினேன்.



**கலை விமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், ஓவியர், ஆய்வாளர், எழுத்தாளர், தொகுப்பாசிரியர்.. என்று ஏன் இத்தனைபேரைச் சுமக்கிறீர்கள்....?**

மண் ஒரு பானையாக இருக்கிறது. அதே நேரத்தில் ஒரு சிற்பமாகவும் இருக்கிறது. ஒரு சுவராகவும், மரத்தின் வேர் பரப்பும் ஆதாரமாகவும் ஒரே நேரத்தில் மண் இருக்கிறது. அது போலத்தான் இதுவும். எழுத்தாளன் என்பவன் ஓர் சமூக மனிதன். அவன் சமூக வளர்ச்சிக்கான அனைத்திலும் ஈடுபட வேண்டியது அவசியமாகிப்போகிறது.

**இலக்கியப் படைப்பு என்பது ஒரு தனி மனிதச் செயல்பாடா அல்லது சமூகச் செயல்பாடா?**

மொழி என்பதே தனிமனிதனின் தயாரிப்பு அல்ல. தனி மனிதனுக்காகச் சமூகம் ஒன்று சேர்ந்து காலம் காலமாக வடிவமைத்துக் கொடுத்த ஒரு கருவிதான் மொழி. அப்படியிருக்கும்போது சமூகம் கொடுத்த மொழியை வைத்து எழுதப்படும் இலக்கியம் மட்டும் எப்படி தனிமனிதச் செயல்பாடாகும்? (சிரிக்கிறார்).

கடவுள் தன் பேச்சுத் துணைக்காக மனிதனைப் படைத்தான் என்பது ஒரு ஆப்பிரிக்க நம்பிக்கை. நான் தனியாக இல்லை என்று எனக்கு நானே ஊர்ஜிதப்படுத்துவதற்காகவே நான் எழுதுகிறேன். அதே நேரத்தில் ஜனசமுத்திரத்தில் நான் ஒரு துளி. வார்த்தைகளைச் சுவாசிக்கையில் நான் அதிகம் வாழ்வதாகத் தெரிகிறது. என்னைச் சுற்றி இருப்பவர்களை நான் அதிகம் நேசிப்பதாய்த் தெரிகிறது. அதனால் எழுதுகிறேன். எழுத்து என்பது தனிமனிதனின் மனம் எனும் கண்ணுக்குப் புலப்படாத பனிமலைச் சிகரத்தில் ஊற்றெடுத்துக் கங்கையாகச் சமூகத்தை நோக்கிப் பாய்ந்து வாழ்க்கை வயலைச் செழிப்பாக்கும் ஒரு செயல்பாடு. தனிமனிதனாக நான் எழுதும் என் எழுத்து மற்றவர்களால் வாசிக்கப்படுகிறபோது

அது ஒரு சமூகச் செயல்பாடாக விகசிப்படைகிறது. எழுத்து என்பது ஒரு சமூக இயக்கம் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

**ஒரு படைப்பைப் பொதுவெளியில் வைத்துவிட்ட பிறகு அதை ஓர் எழுத்தாளன் அணுகுவதற்கும் ஒரு வாசகன் அணுகுவதற்கும் இடையே உள்ள மையத்தை விளக்க முடியுமா? மையங்களற்று வலது இடது இல்லை என்பதுதானே விதி...!**

எனக்குள் ஒரு வாசகன் இருக்கிறான். அவனைச் சந்தோஷப்படுத்த நான் எழுதுகிறேன் என்பது உண்மைதான். ஆனால் அவன் முதல் வாசகன் அவ்வளவே. அதன் பிறகு என் எழுத்தைப் படிக்க எனக்கு வெளியே ஒரு வாசகன் காத்திருக்கிறான். சொல்லப்போனால் என் படைப்பில் நானே நினைத்துப் பார்த்திராத பல அர்த்த உற்பத்திகளைச் செய்து என் படைப்பை முழுமையும் மேன்மையும் அடையச் செய்வது எனக்கு வெளியே இருக்கும் வாசகன்தான்.

எழுத்து என்பது சமூகத்தால் முழுசாக அங்கீகரிக்கப்பட்ட தனக்குத்தானே பேசிக் கொள்ளும் ஒரு சீசோபிரேனியா என்றார் ஒரு எழுத்தாளர். வாசகன் இல்லாமல் எழுத்தாளன் இல்லை. யாருமற்ற தீவு ஒன்றில் தன்னந்தனியான குழந்தையாக வளர்கிறான் ஒருவன் என்றால் அவனுக்கு மொழி என்பதும், எழுத்து என்பதுமே தேவையில்லை. ஒரு படைப்பைப் பொது வெளியில் வைக்கிறவரைதான் அது அந்த எழுத்தாளனுக்குச் சொந்தம். எழுத்து பொது வெளியில் வைக்கப்பட்டவுடன் எழுத்தாளன் என்பவன் மறைந்துவிடுகிறான். அதிகாரம் வாசகனின் கைக்கு மாறிவிடுகிறது. இதனைத்தான் ரோலண்ட் பார்த் (Roland Barthes) எனும் பிரெஞ்சு இலக்கியவாதி "ஆசிரியனின் மரணம்" எனும் கோட்பாடாக முன்வைத்தார்.

**உங்களது கவிதைப் பயணம் மிகவும் நீண்டது. மரபுக் கவிதையின் பல்வேறு பாவினங்களில் எழுதி நவீனக் கவிதைகளைக் கடந்து தற்போது எதிர்கவிதையில் வந்து நிற்கிறீர்கள். உங்கள் கவிதைப் பயணம் குறித்துச் சொல்லுங்கள்?**

சுருக்கமாகச் சொல்வதெனில் கவிதை என்பது எல்லாக் காலத்திலும் ஒன்றுதான். அது குளிர்காலத்தில் கம்பளிச் சட்டை அணிந்து கொள்கிறது. மழைக்காலத்தில் மழைக் கோட்டு போட்டுக்கொள்கிறது. வெயில்காலத்தில் சட்டையைக் கழற்றிவிடுகிறது. என் கவிதையும் இதைத்தான் ஒவ்வொரு காலகட்டத்திலும் செய்து வந்திருக்கிறது. என் கவிதையில் பல்வேறு சொல்முறைகளையும் வடிவ உத்திகளையும் நான் பரிசோதனை செய்துகொண்டே இருக்கிறேன்.

இளமையில் வள்ளலாரிடம், பாரதியாரிடம் என்னை இழந்தேன். அறுசீர் விருத்தத்திலிருந்து காவடிச் சிந்து வரை பல்வேறு ஓசையோடு கூடிய கவிதைகள் எழுதினேன். வானொலிக்கு இசைப்பாடல்களும் எழுதினேன். சில எனது "திருவடி மலர்கள்" தொகுதியாக 1972இல் வெளிவந்தது. மும்பைக்குப் போன பிறகு ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கிவிட்டேன். நிசிம் எசிகீல், கமலாதாஸ், பிரிட்டீஷ் நந்தி தொடர்பு கிடைத்தது. என் ஆங்கிலக் கவிதைகளின் தொகுதி SYLLABLES OF SILENCE 1982இல் வெளிவந்தது. பிறகு தமிழில் எழுதுவதே குறைந்துவிட்டது. மும்பையில் நாஞ்சில் நாடன், ஞான.ராஜசேகரன், கலைக்கூத்தன், ஞானபானு போன்றவர்களின் நட்பினால் மீண்டும் தமிழில் எழுதும் ஆசை எனக்குத் தோன்றியது.. 1983இல் மும்பையிலிருந்து சிவகங்கைக்கு மாற்றலாகி வந்த பின் அங்கு வாழ்ந்த கவிஞர் மீராவின் நட்பு கிடைத்தது. இவர் மூலமாக ரகுமான், சிற்பி, மேத்தா, தமிழன்பன், இன்குலாப் ஆகியோருடன் நெருங்கிப் பழகியபோது மரபில் நன்கு கவிதை எழுதத் தெரிந்த இவர்களே புதுக்கவிதை எழுதும்போது நாம் ஏன் புதுக்கவிதை எழுதக்கூடாது என்று தோன்றியது. கவிஞர் மீரா பாரதி நூற்றாண்டு விழாவில் "நவகவிதை வரிசை" என்ற பெயரில் பலரது முதல் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டார். அப்போது கல்யாண்ஜி, விக்கிரமாதித்தன், வண்ணதாசன், கோ.ராஜாராம் போன்றவர்களின் முதல் கவிதைத் தொகுதிகளுடன் எனது "அந்நியன்" நவீனக் கவிதைகளின் முதல் தொகுதியும் வெளிவந்தது. ஒரு நவீனக் கவியாகப் புதுப்பிறவி எடுத்ததின் எல்லாப் புகழும் கவிஞர் மீராவுக்கே. பிறகு 1991இல் எழுதிய "முப்பட்டை நகரம்" தொகுதியில் ஜெர்மானிய எக்ஸ்பிரஷனிச பாதிப்பால் பல கவிதைகள் எழுதினேன். இவை நகுலன், சுஜாதா, வைரமுத்து ஆகியோரால் கவனம் குவிக்கப் பட்டன. 1994இல் சாம்பல் வார்த்தைகள்

நெடுங்கவிதை வெளியிட்டேன். 2003இல் “மின்துகள் பரப்பு” தொகுதியில் புத்தகத் தயாரிப்பிலும் கவிதைப் பரிசோதனையிலும் பல புதிய முயற்சிகளைச் செய்தேன். பிறகு கொதுலோப் பிரெஞ்சு கரீபியன் தீவுக்கு “ரைட்டர்ஸ் ரெசிடென்சி”க்குச் சென்றபோது “மிக அருகில் கடல்” நூல் எழுதினேன். அது பிரெஞ்சிலும், மலையாளத்திலும் புத்தகமாக வெளிவருகிறது. அண்மையில் “மேசை மேல் பூனை” எனும் எதிர் கவிதைத் தொகுதி கொண்டு வந்தேன். இனி நான் கவிதையில் எடுக்கப்போகும் அவதாரம் என்ன என்று எனக்கே தெரியாது. அது காலத்தின் கையில்தான் இருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் எப்போதும் நான் கவனத்தில் கொள்கிறேன். நான் எதை எழுதினாலும் அது ஒரு பச்சைக் காய்கறி போல பிரஷ்ஷாக இருக்கிறதா என்று டெஸ்ட் பண்ணிப் பார்த்துக்கொண்டே இருப்பேன்..

**அது என்ன பிரெஷ்னஸ் டெஸ்ட்?– கொஞ்சம் விவரித்தால்.... எங்களுக்கும் உபயோகமாக இருக்கும்...!**

மும்பையில் இந்தோ ஆங்கிலக் கவியான நிசிம் எசிகீல் எனக்குக் கொடுத்த அறிவுரை அது. நிசிம் எசிகீலை வாரத்தில் இருமுறை அவரது கல்லூரி சாப்பாட்டு நேரத்தில் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். FRESHNESS TEST செய்து பார்த்து ஒரு கவிதை பிரெஷ்ஷாக இல்லையென்றால் அதைக் தூக்கி எறிந்துவிட வேண்டுமெனச் சொல்லுவார். இன்றைக்கும் நான் ஒரு கவிதை எழுதினால் அது மற்றவர்கள் எழுதும் கவிதைகளிலிருந்து வித்தியாசமாக இருக்கிறதா என்று பார்ப்பேன். இளம் எழுத்தாளர்களுக்கு நான் சொல்வது கொஞ்சம் கடுமையாகத்தான் இருக்கும். ஆனால் என்னைப் பொறுத்தவரையிலும் எதை எழுதினாலும் ஒரே பார்முலாதான் - DIFFER OR DIE - வித்தியாசப்படு அல்லது செத்துப் போ.

**படைப்பு காரணமாக எப்போதும் எதையாவது சுமந்துகொண்டே அலையும் வெற்று மனநிலை அல்லது ஒரு படைப்பாளியின் மனநிலை அற்றுப் படைப்பின் காரணியாக எப்போதாவது இருந்திருக்கிறீர்களா...!**

எப்போதும் செயல்பட்டுக்கொண்டே இருந்திருக்கிறேன். ஒவ்வொரு எழுத்தாளனும், கவிஞரும் தொடர்ந்து செயல்படுவதுதான் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். ஒரு கம்பியை ஸ்பிரிங் சுருளாகச் சுற்றிக்கொண்டே வர வேண்டும். அதை விட்டுவிட்டால் ஸ்பிரிங் சுருள் மீண்டும் சாதாரணக் கம்பியாகி விடும். மிக அருமையாக எழுதும் இளம் எழுத்தாளர்கள் ஒரு படைப்பைச் செய்துவிட்டு நீண்ட இடைவெளி விட்டு விடுவதைப் பார்க்கிறபோது இப்படி திறமை வைத்திருப்பவர் இப்படி இடைவெளி விடுகிறாரே என வருந்துவேன்.

**இலக்கிய ஆளுமைகள் பலரைத் தன் கடற்கரையில் கொண்டிருந்த பாண்டிச்சேரி உங்களையும் மிக அற்புதமாகச் செதுக்கி இருக்கிறது என்பதை அசை போட்டிருக்கீர்களா...? பாண்டிச்சேரியின் இலக்கிய இயல்பு உங்கள் இலக்கியத்துக்குப் பக்கபலமாக இருந்திருக்கிறது என்பதை எப்படி பார்க்கிறீர்கள்?**

பாண்டிச்சேரிதான் எனது எலும்புகளையும் சதையையும் இலக்கிய ஆன்மாவையும் கட்டமைத்து இருக்கிறது என்று நான் நம்புகிறேன். பாண்டிச்சேரியின் கடலோரத்து மருத்துவமனையில் நான் பிறந்தபோது கடல் குமுறும் ஓசைதான் என் காதில் விழுந்த முதல் ஓசை. இன்றைக்கும் கடல்தான் எனது இதயத்தின் வால்வுகளின் ரத்த ஓட்டமாக இருக்கிறது. பாண்டிச்சேரியில் ஒயிட் டவுன் என்று அழைக்கப்படும் பகுதியில் அரவிந்தோ ஆசிரமத்துக்கும், மணக்குள விநாயகர் கோயிலுக்கும் மூன்று தெரு தள்ளி இருந்த பெல்கோம் வீதி 12ஆம் எண் வீட்டில்தான் எங்களின் குடுமபம் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தது. ஆசிரமத்து வீதிகளில் சைக்கிள் ஓட்டப் பழகினேன். பாரதியாரின் வீட்டுத் திண்ணையில் நண்பர்களோடு விளையாடி இருக்கிறேன். இந்த வீட்டில் வாழ்ந்த எனது அம்மாவின் அம்மா ஆதிலட்சுமி பாட்டி பாரதியாரின் சீடரில் முக்கியமானவரான ரா. கனகலிங்கம் அவர்களைக் குடும்பத்தோடு வைத்துக் காப்பாற்றினார். கவி பாரதிதாசனாரின் குயில் பத்திரிக்கையில் ஒரு விளம்பரம் வந்திருப்பதைத் தன் ஆய்வில் கண்டு பிடித்திருக்கிறார்.. சென்னைப் பல்கலைக்கழகத்



தமிழ்த்துறைத்தலைவர் ய. மணிகண்டன். குயில் பத்திரிக்கையில் எங்கள் வீட்டு முகவரி போட்டு பாரதிதாசனார் பெயரில் நிதி உதவியை அனுப்புமாறு கோரிக்கை வைத்திருக்கிறார் பாரதிதாசனார். எனக்கு சுமார் இருபத்தைந்து வயது இருக்கும்போது என் அத்தை மகனும் இலக்கிய ஆசானுமான ப. இராஜேஸ்வரனுடன் சுத்தானந்த பாரதியை நான் அடிக்கடி சந்தித்து இருக்கிறேன். சுத்தானந்த பாரதியாரின் பாதிப்பில் நான் எழுதிய இசைப் பாடல்கள் சென்னை வானொலியில் மெல்லிசைப் பகுதியில் ஒலிபரப்பாகியிருக்கின்றன.

**உலகத்தின் திரட்சி இலக்கியத்தின் வாயிலாகவே கட்டமைக்கப்பட்டதற்குச் சாட்சி நீங்கள் மொழிபெயர்த்துக் கொடுத்த புத்தகங்களே. அப்படி காலத்தின் தேவைக்காக நெய்யப்படும் மொழிபெயர்ப்பில் இருக்கும் சவால்களைக் கூறுங்களேன்...! உங்கள் முதல் மொழிபெயர்ப்பு "அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்" நிகழ்ந்தது பற்றியும்.. உங்களுக்குச் சாகித்திய அகாதமி விருது பெற்றுத் தந்த "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" பற்றியும் சொல்லுங்களேன்?**

எனக்குப் பத்தொன்பது வயதிருக்கும்போது சென்னை அமெரிக்கன் லைப்ரரியில் The Black Book என்று ஒரு புத்தகம் பார்த்தேன். மொத்தப் புத்தகமும் கருப்புத் தாளில் அச்சிடப்பட்டு இருந்தது. அது ஒரு பெரிய எதிர்ப்புக் குரல். ஆப்பிரிக்கக் கவிதைகளும், ஆஃப்ரோ அமெரிக்கக் கவிதைகளும் அதிலே இருந்தன. கருப்பு இலக்கியத்தோட என்னுடைய முதல் அறிமுகம் இப்படித்தான். எஸ்ரா பவுண்டு, டி.எஸ்.எலியட்

போன்றவர்களின் கவிதைகளைப் படித்த எனக்கு லாங்க்ஸ்டன் ஹ்யூக்ஸ் எழுதிய கருப்பு இயேசுநாதர் கவிதை ரொம்பப் பிடித்தது. அதைப் படிச்ச உடனே என் தலை மேல யாரோ ஒரு நெருப்புச் சட்டியைத் தூக்கி வைத்ததுபோல உணர்ந்தேன். அதுக்குப் பிறகு கருப்பு எழுத்தாளர்களைத் தேடித் தேடிப் படிச்சேன். லாங்க்ஸ்டன் ஹ்யூக்ஸ், கவுன்ட்டி கல்லன், லீ ராய் ஜோன்ஸ், பால் லாரன்ஸ் டன்பர், மாயாஏஞ்சலோவா என்று கருப்பு அமெரிக்கக் கவிதைகளில் ஏதோ மாயாஜாலம் இருப்பது போல எனக்குத் தெரிஞ்சது. கவிதைகளின் எதிர் - கலாசாரக் குரலும், புதிய கலை உத்திகளும் ஒரு பத்தொன்பது வயது இளைஞனைப் பைத்திய மாக்கின.. எனக்கு என்ன பெரிய ஆச்சரியம் என்றால் அமெரிக்கன் லைப்ரரியிலே எந்த வரிசையிலே எஸ்ரா பவுண்டு, டி.எஸ்.எலியட் புத்தகங்கள் எல்லாம் இருந்ததோ, அதே வரிசையில்தான் இந்த ஆப்பிரிக்க - அமெரிக்கக் கவிஞர்களும் இருந்தார்கள். இந்த டி.எஸ்.எலியட்டை, எஸ்ரா பவுண்டை மொழி பெயர்த்து வெளியிட்ட சிறு பத்திரிக்கைத் தீவிர இலக்கியவாதிகள் அவற்றிற்குப் பக்கத்துப் புத்தகமாக இருந்த இந்தக் கருப்புக் கவிஞர்களை ஏன் மொழிபெயர்க்காமல் விட்டுவிட்டார்கள் என்பது எனக்குப் புரியாத புதிராக இருந்தது. நான் அந்தக் கருப்புக் கவிதைகளை மொழி பெயர்த்து வைத்துக்கொண்டேன். அப்போது கூகுள் இல்லாத காலம். ஆப்பிரிக்க இலக்கியத்தை இந்தியா முழுவதும் தேடி அலைந்தேன். வெளியிடுவதற்காகஅல்ல. எனது ஆத்ம திருப்திக்காக. மும்பையினுடைய ஃப்ளோரா ஃபவுண்ட்டன் பிளாட்பாரக் கடைகளில் கூட பல கவிதைகள் கிடைத்தன. கொஞ்சநாள் கழிச்சு நான் மும்பையிலிருந்து சிவகங்கைக்கு மாற்றலாகிப்போய்விட்டேன். அப்போது என்னுடைய பேச்சில் அடிக்கடி ஆப்பிரிக்க, ஆஃப்ரோ அமெரிக்க எழுத்துக்களை எடுத்துக் காட்டிச் செய்து பேசுவதைப் பார்த்துவிட்டுக் கவிஞர் மீரா அதை ஒரு புத்தகமாகச் செய்து கொடுக்கச் சொன்னார். அப்படி நான் செய்த புத்தகம்தான் “அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்”.



இதன் பிறகு, காற்றுக்குத் திசை இல்லை - இந்திய இலக்கியம், பசித்த தலைமுறை - மூன்றாம் உலக இலக்கியம், பிணத்தை எரித்தே வெளிச்சம் - தலித் இலக்கியம், கடவுளுக்கு முன் பிறந்தவர்கள் - ஆதிவாசி இலக்கியம், கவிதாயனா - ஒடிய கவிதைகள், மஞ்சள் வெயிலில் வெறி பிடித்த தும்பிகள் - மனோரமா பிஸ்வால் மொஹபத்ரா, பறவைகள் இந்நேரம் தூங்கப் போய்விட்டன - மனோரமா பிஸ்வால் மொஹபத்ரா போன்ற பல்வேறு கவிதைகள் மொழிபெயர்த்தேன். இதில் பறவைகள் இந்நேரம் தூங்கப் போய்விட்டன எனும் மொழிபெயர்ப்புக்கு 2012க்கான

சாகித்திய அகாதமி மொழிபெயர்ப்பு விருது பெற்றேன்.

**இருப்பதில் சற்று சிக்கலான விஷயம் கலை விமர்சனம். அதில் தொடர்ந்து தங்களின் பங்களிப்பு பொருள்படும் விதத்தில் இருந்து கொண்டே இருக்கிறது. விமர்சன மனநிலையை எப்படி கரு கொள்கிறீர்கள்? இதுவரை நீங்கள் செய்ததில் உங்களுக்கு நெருக்கமாக இருந்த கலை விமர்சனம் எது?**

ஓவியம், சிற்பம், கட்டடக் கலை, அச்சுப்பதிவுக் கலை போன்ற காண்பியக் கலைகளை ரசிக்கவும் அவற்றைக் கோட்பாட்டுரீதியாக விமர்சிக்கவும் தமிழில் யாரும் முன்வராத நிலையில் ஆங்கிலத்தில் இது குறித்து எழுதிவந்த நான் தமிழிலும் கலை விமர்சனம் எழுதத் தொடங்கினேன். தற்காலக் கலை - அகமும் புறமும், நவீனக் கலையின் புதிய எல்லைகள், தேடலின் குரல்கள் போன்ற பல கலை இலக்கிய நூல்களை எழுதினேன். இதில் “கலை” என்ற நூலுக்கு எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராயத்தின் டாக்டர் ஆனந்த குமாரசாமி விருதினைப் பெற்றேன். பிரிட்டிஷ் கவுன்சில் தேர்ந்தெடுப்பில் லண்டன் சென்று அங்கிருந்த அருங்காட்சியகங்களில் சேகரிக்கப்பட்ட இந்தியக் கலைப் பொருட்கள் குறித்த ஆய்வினை மேற்கொண்டேன். கலை விமர்சனத்தில் ஒரு புதிய தலைமுறையை உருவாக்குவதற்காகப் பிரிட்டிஷ் கவுன்சில் உதவியுடன் உலகப் புகழ் பெற்ற சசக்ஸ் பல்கலைக்கழக அழகியல் பேராசிரியர் டாக்டர் பார்த்தா மிட்டர், எம்.எஸ். பரோடா பல்கலைக்கழகப் பேராசிரியர்களான ஷிவ்ஜி பணிக்கர், டாக்டர் ரத்தன் பரிமூ போன்றவர்களைச் சென்னைக்கு வரவழைத்து கலைஎழுத்து பற்றிய பயிற்சிப் பட்டறை செய்தேன். ஒடியாவில் ரகுராஜ்பூர் ஓவியர் கிராமத்துக்குச் சென்று பட்ட சித்ரா கலை மரபு குறித்த ஆய்வினை மேற்கொண்டேன்.

**இதுவரை நீங்கள் செய்ததில் உங்களுக்கு நெருக்கமாக இருந்த கலை விமர்சனம் எது என்றும் கேட்டோமே?**

உண்மைதான். நமது கலைப்படைப்புகளை நாம் மேல்நாட்டு அளவுகோல்களால் மதிப்பிடுவதால் நமது கலைப்படைப்புகளை நாமே குறைத்து மதிப்பிடும் நிலை அடைந்து விடுகிறோம். அதனால் நமது கலைப் படைப்புகளை நமது அளவுகோல்களால் மதிப்பிட வேண்டுமென ஒரு புத்தகம் எழுதினேன். “தமிழ் அழகியல்” எனும் இந்தப் புத்தகமே எனக்கு மிகவும் பிடித்த கலை விமர்சனம். கிரேக்கக் கலை, சீன ஓவியம் என்று இருப்பது போலத் தமிழ் ஓவியம் என்ற ஒன்றை நாம் இன்று உருவாக்க வேண்டும் எனும் அறைகூவலை அந்த நூலில் வைத்தேன். இதனை வெகுவாகப் பாராட்டிய ஈழத்து அறிஞர் டாக்டர் கா. சிவத்தம்பி இந்நூலை யாழ்ப்பாணப் பல்கலைப் பாடப் புத்தகமாக வைத்தார். இதன் அடுத்த கட்டமாகப் பிரான்சின் பாரீஸ் நகரில் “தமிழ் ஓவியம்” (ART TAMOUL) எனும் பெயரில் இருபது தமிழ் ஓவியர்களின் கண்காட்சியை “செலக்டிவ் ஆர்ட்” எனும் பிரெஞ்சுக் காலரியில் வைத்தேன். இதற்குப் பிறகு சாகித்திய அகாதமியுடனும், சேலம் பல்கலைக்கழகத்துடனும் சேர்ந்து “தமிழ் அழகியல்” எனும் பெயரில் ஒரு முழுநாள் கருத்தரங்கம் செய்தேன். இதுவே கலை விமர்சனம் குறித்த எனது முக்கியப் பங்களிப்பு என்று நான் கருதுகிறேன்.

**கருத்தரங்குகள் மற்றும் ஆய்வுப் பட்டறைகளின் தேவை நவீனத்துக்கு எந்தவகையில் பயன்படும்? இத்தனை நீண்ட பயணத்துக்குப் பின்னும் இந்த நவீன வகை இலக்கியம் பின் ஒரு பொருள் பட... எதிர்காலத் தேவையின் பொருட்டு இது போன்று நடத்தும் அமைப்புகளுக்குத் தகுந்த மாதிரி கட்டமைக்கச் செய்யும் முன் முயற்சியா.. அது? விளக்குங்கள்.**

தற்காலக் கவிதை 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றதாக ஒரு புதிய தோலுரிப்புக்குத் தயாராக வேண்டுமென்றால் காத்திரமான கவிதைப் பயிற்சிப் பட்டறைகள் தகுந்த இலக்கிய விமர்சகர்களாலும், உலகக் கவிஞர்களை வரவழைத்தும் இங்கு நடத்தப்பட வேண்டும். சர்வதேசக் கவிஞர்களின் மாநாடுகள் சிங்கப்பூர், மலேசியா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ்க் கவிதை இயக்கம் ஒரு சர்வதேசத் தரத்திலானதாக 21ஆம் நூற்றாண்டின் ஒரு குரலாக வளர்ச்சி அடையும். ■

• ஸ்ரீகா

# சங்கப் பொங்கல் தொட்டு சமத்துவப் பொங்கல் வரை

விசிலடிக்கும் குக்கர் பொங்கலைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு வாருங்கள்.. சங்கத்தமிழ்ப் பொங்கலை உண்டுவிட்டுப் போகலாம்.

சங்க இலக்கியத்தில் தைத் திங்களில் மகளிர் ஆறு குளங்களில் நீராடி நல்ல கணவன்மார்கள் கிடைக்க நோன்பிருந்ததாகச் சில செய்யுள்கள் குறிப்பிடுகின்றன.

தைத்திங்களில் நோன்பு இயற்றுவார் அமர்ந்திருப்பது போல் குரங்குகள் மழையில் நனைந்து அமர்ந்திருப்பதாக "வான் பெயல் நனைந்த புறத்த நோன்பியர் தையூண் இருக்கையில் தோன்றும் நாடன்" என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

"தையில் நீராடிய தவந் தலைப்படுவாளோ" என்கிறது கலித்தொகை.

"நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும் தைஇத் தண்கயம் போலப் பலர் படிந்துண்ணும் பரத்தை மார்பே" என்கிறது ஐங்குறுநூறு.



அதாவது, 'பிறபெண்களோடு நீ உறவாடு', கின்றாய் என்பதைத் தன் காதினால் கேட்டாலே சொல்லில் அடக்க முடியாதளவு கடுங்கோபம் கொள்வாளே உன் காதலி. அப்படியிருக்க, தைத்திங்கள் நாளில், நறுமணம் வீசுகின்ற மலர்கள் சூடப்பட்ட கூந்தல்களையுடைய பெண்கள் எல்லாம் இறங்கி நீராடுகின்ற குளத்தைப்போல, விலைமாதர்கள் பலர் தழுவிக்கிடந்த உன் மார்பிலே காணப்படுகின்ற புணர்குறிகளை இப்போது அவள் கண்டால் என்ன ஆகுவாளோ? (உயிரையே விட்டு விடுவாளே!)' என்பன போன்ற பாடல்களால் பெண்கள் நீராடி நல்ல கணவன் கிடைக்கவேண்டி நோன்பிருந்த பண்டிகையாகவே பொங்கலைச் சங்க இலக்கியங்கள் சித்தரித்துள்ளன.

பிற்காலத்தில் இதனையே மார்கழி நீராட்டு என்றும் சமயத் தொடர்பு பெற்ற ஆண்டாள் மாணிக்கவாசகர் பாடல்கள் மூலம் அறிகிறோம்.. பரிபாடல் இந்நீராடலை அம்பாவாடல் என்கிறது. சிலப்பதிகாரத்தில் வரும் இந்திர விழாவின் துவக்கத்தில், காவல்பூதத்திற்குப் புழுக்கலும், நோடையும், விழுக்குடை மடையும், பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து வழிபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இதில் புழுக்கல் என்பதுதான் பொங்கல். மேலும், சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியாருக்கு நல்லாரும், அரும்பத உரைகாரரும், பொங்கல் என்ற சொல்லுக்குக் கள் என எழுதியுள்ளனர். இன்றும் அம்மன் கோவில்களில், மதுப்பொங்கல் பொங்கும் வழிபாடு உள்ளதை இதனுடன் இணைத்துக் காணலாம். சம்பந்தர் தன் மயிலாப்பூர் பதிகத்தில், 'நெய்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்' எனச் சுட்டுகிறார். திருப்பாவை, அதைச் சற்றே வேறுபடுத்தி, 'பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவார' என்கிறது. ஆக, சங்ககாலத்திலும், பக்தி இயக்கக் காலத்திலும்,

புழுக்கல் என்பதுதான் பொங்கலாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

நெடுநல்வாடையில் ஒரு சங்க இலக்கியப் பாடல். அதில் வரும் ஒரு தொடர் 'பொங்கல் வெண்மழை'.. 'வெண்மேகங்கள்'. மழைக் காலக் கருமேகங்கள் பயணித்துக் கழிந்த பாதையிலேயே வான் நிறைத்துப் பொங்கும் நுரையாக, இவற்றை மார்கழியில் பார்க்கலாம்.

உலகின் பழமையான இனமாகிய தமிழினம் தலைநிமிர்ந்து வாழ்கிறதென்றால், தமிழரின் வாழ்வியல் தமிழியத்தின் விழுமியங்களைத் தாங்கியிருக்கிறது. அதன் மரபு வேர்களில் எழுந்துநிற்கிறது.

தைத்திங்கள் முதல் நாளில் சூரியன் வடதிசை நோக்கித் தன்னுடைய பயணத்தைத் தொடங்குவதைத் தமிழில் வடசெலவு எனவும் வடமொழியில் உத்தராயணம் என்றும் கூறுவர். அன்று பொங்கல் வைப்பதும் அதனைச் சூரியப் பொங்கல் என்று வழங்குவதும் மிகப் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

இவ்விழா தமிழர் திருநாளாகத் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு எனத் தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

நம் பொங்கலை ஒத்த விழாக்கள் வட மாநிலங்களில் மகர சங்கராந்தி எனக் கொண்டாடப்படுகின்றன. மகரம் என்றால் சூரியன். பகலவன் தனுர் ராசியில் இருந்து மகர ராசியில் நுழைவதன் மூலம் உத்தரயானத்தில் பகலவன் சஞ்சரிக்கும் காலம் துவங்குகிறது. எனவேதான் இதை மகர சங்கராந்தி என அழைக்கின்றனர்.

திருமணமான பெண்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று ஆடைகளைப் பரிசாக வழங்குவதைப் பாரம்பரிய வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பின் தன் கணவனுக்குப் பரிசளித்துப் பிடித்த பாடலைப் பாடி நடனம் ஆடுவதும் இவர்களின் வழக்கம்.

டெல்லி மற்றும் ஹரியானாவில் 'சங்க்ராத்' அல்லது 'சங்கராந்தி' என்கிற பெயரில் கொண்டாடுகின்றனர்.

பஞ்சாப் மாநிலத்தில் 'மாகி' என்கிற பெயரில் தங்கள் அறுவடை நாளை வீடு முழுவதும் தீப ஒளி ஏற்றி மிளிரச் செய்வார்கள்.

ராஜஸ்தான் மற்றும் மேற்கு மத்தியப் பிரதேசத்தில் பீனி, டில் பாதி, கஜாக், கீர், கேவர், பகோடி, புவா மற்றும் லட்டு என இனிப்பு பலகாரங்கள்தான் படையலுக்கு வைக்கின்றனர்.

அஸ்ஸாமில் 'மாக் பிஹு' அல்லது 'பொகாலி பிஹு' என்கிற பெயரில் அறுவடை நாளை 14 -இல் தொடங்கி மாத இறுதி வரை கொண்டாடுகின்றனர்.

அஸ்ஸாமில் மூங்கில் கட்டைகளைக் கொண்டு தற்காலிகச் சிறிய குடில் கட்டி அதில் தங்கள் அறுவடையில் விளைந்த அரிசியில் உணவு சமைத்து விருந்தினர்களுக்கும் கொடுத்து.. மறுநாள் காலையில் அந்தக் குடிலை எரித்தும் விடுகின்றனர்.

மஹாராஷ்டிராவில் நம் தீபாவளியைப் போல் அதிகாலை நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்து இனிப்பு பலகாரம் மற்றும் வாழ்த்துக்களால் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

கோவாவில் பெண்கள் 'ஹல்தி கும்கும்' என்கிற பெயரில் சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமம் அளிப்பதை முக்கிய வழக்காகக் கொண்டிருக்கின்றனர்.

குஜராத்தில் 'உத்ராயன்' எனத் தங்களின் அறுவடைக் கொண்டாட்டத்தைக் களிக்கின்றனர். இங்கு பட்டம் விடும் நிகழ்ச்சி உலகப் பிரசித்தி. வானெங்கும் வண்ணமயமான பட்டங்களைக் காணலாம். ஹிமாச்சலப் பிரதேசத்தில் 'மஹா சாஜி' என்கிற பெயரில் இடம்பெயர்ந்த பறவைகள் - மீண்டும் தன் கூட்டை அடைகின்றன. பறவைகளின் வருகையை நல்ல சகுனமாகக் கருதுகின்றனர். உத்திரப்பிரதேசத்தில் 'கிச்சேரி' என்கிற பெயரில் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். அலகாபாத், வாரணாசி, ஹரித்வார் எனப் பரவும் கங்கை நதியில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று சேர முங்கிக் குளிப்பார்கள். இவ்வாறு செய்வதால் தங்களின் பாவங்கள், துயரங்கள் நீங்கி நன்மை நடக்கும் என நம்புகின்றனர்.

ஒடிசாவில் 'மகர சாலா' என்கிற பெயரில் அறுவடை செய்த நெல், வாழை, தேங்காய், வெல்லம், எள், பருப்பு உருண்டை ஆகியவற்றோடு வழிபாடு செய்கின்றனர்.

பீஹார் மற்றும் ஜார்கண்ட்டில் 'சக்ராத்' அல்லது 'கிச்டி' என்கிற பெயரில் பொங்கலைக் கொண்டாடுகின்றனர்.

கர்நாடகாவில் 'சுகி' பண்டிகை அன்றைய நாளில் உறவினர்களுக்குள் எள், மஞ்சள் குங்குமம், முந்திரி, பாதாம், தேங்காய், வெல்லத்தால் நிரம்பிய ஒரு தட்டைப் பரிமாறிக்கொள்கின்றனர்.

கேரளாவில் மகர ஜோதி தெரிவது முக்கிய நிகழ்வாகக் கொண்டாடப்படுகிறது.

ஆந்திராவிலும் தமிழ்நாட்டைப் போன்றே சடங்குகள் இருக்கின்றன. அன்று திருப்பதியில் வெகு விமர்சையான பூஜைகள் நடைபெறும்.

இப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒரு நாள் மட்டுமே கொண்டாட நாம் நான்கு நாட்கள் கொண்டாடிக் களிப்பது நம் பண்பாட்டின் உச்ச சிறப்பு.

## போகி

போகி பண்டிகை பழையன கழித்தலின் அடையாளம். வேளாண்மையை மேற் கொண்டவர்கள் போகியன்று, வீட்டின் கூரையில் பூலாப்பூ செருகுவார்கள். 'மார்கழி' கடைசி நாளன்று கழித்தவைகளை எரித்துப் போகி கொண்டாடுகிறார்கள். அந்நாளில் ஆயர்கள் இந்திரவிழாவை முடித்து சூரியவழிபாட்டைத் தொடர்ந்தனர்.

அக்காலத்தில் போகியன்று சில கிராமங்களில் ஒப்பாரி வைக்கும் பழக்கமும் இருந்திருக்கிறது. அப்போது அழுவது எதனால், என்பதனை ஆராய்ந்த வரலாற்று அறிஞர்கள், அந்நாளைப் புத்தர் இறந்த தினமென்று கண்டறிந்துள்ளனர்.

## இரண்டாம் நாள்...

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும்போது அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சர்க்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையிலிட்டுப் புத்தடுப்பில் பொங்கலிட்டுத் தோரணம் கட்டி, கரும்பும் சுவைப்பர். பனங்கிழங்கு, அவரை, புடலை, கத்திரி, வாழை, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, கருணைக் கிழங்கு போன்றவையே படையலாக வைக்கப்படும். செந்நெற் பச்சரிசியைப் பெரும் பாலும் தவிடு போக்காமல் நீர் சேர்த்துச் சமைத்துப் பருப்புக் குழம்புடன் உண்பதுவே மரபு.

பொங்கு என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்குவதால் பொங்கல். பொங்கல் விழாவைத் தமிழர் என்னும் இனக்குழு விழா என்று தெளிவாக உணரமுடிகிறது.

மெய்யியல் சமயம் தமிழகத்தில் நிலை கொள்ளுவதற்கு முன்பிருந்தே, இனக்குழு வழிபாடுகள் நிலவியபோதே, இந்த விழாக் கொண்டாடுவது தொடங்கியிருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

சமயங்களைக் கடந்து கிருத்துவர்கள் தங்கள் தேவாலயங்களிலும் பொங்கலைக் கொண்டாடு கின்றனர். தமிழ் முஸ்லீம்களில் பல குடும்பங்களில் அசைவமற்றுப் பொங்கலுடன் 16 வகைக் காய்கறிகளைச் சமைத்துண்கின்றனர்.

## மூன்றாம் நாள்..

தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா.

பொங்கலிட்ட பிறகு எச்சில் தண்ணீர் தெளித்தல் என்றொரு மரபு மதுரை மாவட்டத்தில் உண்டு. 'பொங்கலோ பொங்கல்! மாட்டுப் பொங்கல்! பட்டி பெருக! பால் பானை பொங்க! நோவும் பிணியும் தெருவோடு போக!' என்று கூறி மாடு பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரைத் தொழுவத்தில் தெளிப்பர்.

## காணும் பொங்கல்

இந்நாளில் மக்கள் தங்கள் உற்றார் உறவினரைச் சென்று சந்தித்துத் தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்துகொள்வர். இது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காம் நாள்.

2006-2011 வரையிருந்த தமிழக அரசு, தை 1 தமிழாண்டின் முதல் நாளானபடியால், அதுவே தமிழர்களின் தமிழ்ப் புத்தாண்டு என சனவரி 29, 2008அன்று அறிவித்தது. சூரியன் அன்று மகர ராசியில் நகர்கிறது என்றும் ஒரு மகர ராசிப் பிரவேசத்திற்கும் அடுத்த மகர ராசிப் பிரவேசத்திற்கும் உள்ள இடைப்பட்ட காலமே ஒரு திருவள்ளுவர் ஆண்டு என்றும் கூறப்படுகிறது.

சங்க இலக்கியம் தொட்டு தற்காலம் வரை தைத்திருவிழா தமிழரின் தனி அடையாளமாகவே சிம்மாசனமிட்டிருக்கிறது.

(தகவல் திரட்டு : தமிழர் பண்பாடும் நாகரிகமும் மற்றும் கூகுள்) ■

தொடர் 3

• கவிஜி

# உலக சினிமா ஒரு பார்வை



சினிமா பார்த்துக் கெட்டுப்போய்ட்டான் என்பதெல்லாம் முகமற்ற பாவனை. முகமூடி கொண்டவனின் பிதற்று. முகவரிகள் நிறைய சினிமாவால் கிடைத்திருக்கின்றன.

சினிமா..வாழ்வின் நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. அதன் வழியில் மிக அற்புதமான பயணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அது திரும்பத் திரும்பக் கற்றுக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. கற்றலின் நோக்கம் கற்றல்தான். அதன் அனுபவங்களைக் கொட்டித்தரும் சினிமாக்களில் நல்லவைகளைப் பிரித்தெடுக்க மட்டும் கொஞ்சம் கவனம் தேவை. வணிக நோக்கில் அரிசியையே வாய்க்கரிசியாக மாற்றிய வியாபார தந்திரம் மிக்க உலகில் நல்ல சினிமாக்களைக் கவனத்தோடு அணுக வேண்டும்.

அந்த அணுகுதலில் நான் ஆசுவாசத்தோடு நின்று நிதானித்துக் கண்களின் வழியே காட்சி மொழியின் அற்புதத்தைக் கண்டது... கொரிய இயக்குனர் "கிம் கி டுக்" படங்களில். ஒரு பக்க உரைநடையில் சொல்ல வேண்டியதை ஒரே ஒரு காட்சியில்... சொல்லிவிடக்கூடிய மானுட நேயன்.

சில நேரங்களில் மௌனத்தின் குரூர முகம் கொண்ட சூழ்நிலையை வெற்றிட உருவம் கொண்ட கற்கள் தாக்குகின்றன. தாக்கும் கற்களின் பிளவில் பூக்களின் விதை தூவும் பாஷையில் ஊடுருவும் நிஜங்களை இவர் படங்களில் பார்க்க முடியும். காட்டின் நடுவே நீர்க்கூடு. நீர்க்கூட்டின் நடுவே ஒரு சதுர ஏடு. அப்படித்தான் சுற்றிலும் காடிருக்கும் இடத்தில் நடுவே கூடின நீர் சூடி இருக்க அதன் நடுவே மேடை போன்ற அந்த மடம். அந்த மடத்தில் கதை கொண்ட துறவறம் பூண்ட புத்த துறவி எதிர்கொள்ளும் வாழ்வின் நாற்பதங்களின் மையத்தில் வாழ்வை மிதக்கவிடும் அற்புத சினிமாவை நிகழ்த்திக்கொண்டிருப்பது "கிம் கி டுக்" என்ற மகா கலைஞன்.

"ஸ்ப்ரிங் சம்மர் வின்டர் பால் அண்ட் ஸ்ப்ரிங்"

வினை விதைத்தவன் அதை அறுத்தே தீர வேண்டும். எதை விதைத்தாலும் அது வளர்ந்தே தீரும்.

## ஸ்ப்ரிங்

சிறுவயதில் தவளையின் முதுகில்.. மீனின் முதுகில்.. பாம்பின் முதுகில் கல்லைக் கட்டிவிட்டு அந்த ஏழுவயது புத்தத் துறவி சிரிக்கும் சிரிப்பில் பாவ மூட்டைகள் உருவாக ஆரம்பிக்கின்றன.

இதை அறிந்த குரு, சிறுவன் முதுகில் கல்லைக் கட்டிவிடுகிறார். தூக்கத்தில் இருந்து எழும்போது முதுகில் கல் இருப்பதைக் கண்டு பயந்து... "குரு.. அவிழ்த்து விடுங்கள் வலிக்கிறது" என்கிறான். "அப்படித்தானே வலிக்கும் நேற்று நீ கட்டி விட்ட மீனுக்கும் தவளைக்கும் பாம்புக்கும். போ.... போய் அவைகளின் முதுகில் இருக்கும் கல்லைக் கழற்றி விட்டு வா. ஒருவேளை அவைகள் செத்திருந்தால் அந்தச் சுமையை நீ வாழ்நாள் முழுக்கச் சுமக்க வேண்டியிருக்கும்.. இந்தக் கல்லை இறக்கினாலும்" என்கிறார்.

அதே போல.... பாம்பும் மீனும் செத்து விடுகின்றன. கட்டியிருந்த கல் அவிழ்ந்த பின்னும் ஒரு பெருஞ்சுமையாக வாழ்நாள் முழுக்கக் கனத்துக் கிடக்கின்றன அம்மரணங்கள்.

## சம்மர்

அவன் இப்போது இருபது வயதில் இருக்கிறான். தன் குருவிடம் மருத்துவத்துக்கு வரும் அழகிய இளம்பெண்ணை மெல்ல மெல்ல நெருங்கி.. ஆட்கொள்கிறான். முதலில் ஒதுங்கினாலும்.. ஒரு கட்டத்தில் அவளுக்கும்

அவனைப் பிடித்தே இருக்கிறது. அவர்களுக்குள் உண்டாகும் உடல் உறவுக்கு அந்தக் காடும் அருவியும் சாட்சி. காதல் இறுக.. காமமும் இறுகிறது. உடல் குப்புறக் கிடக்கும் நிர்வாணத்தில் காதலின் வேகம் இசைவதைக் காண முடிகிறது. ஒரு வெள்ளைக் காகிதமாய் ஆழ்மனதில் கிறுக்கிக்கொண்ட ஓவியங்களில் அவர்களிருவரும் ஒருவர் உடலுள் ஒருவர் மறைய முயற்சிக்கிறார்கள்.

விஷயம் தெரிந்து குரு அந்தப் பெண்ணை, "உனக்குத்தான் உடல் நலம் பெற்றுவிட்டதே.. இனியும் இங்கு என்ன வேலை.. கிளம்பு.." என்று அனுப்பிவிடுகிறார். அந்தப் பெண்ணும் அவனைப் பிரிய முடியாமல் தவித்து மருகி ஒன்றும் செய்ய இயலாத துரத்தில் கடந்துவிடுகிறாள். அவனோ கிடந்து தவிக்கிறான்.

இலை கழண்டு கொள்கிறது. இம்சை என்னவோ கிளைக்குத்தான்.

அவனால் அவளை விட்டு இருக்க முடியவில்லை. அவன் குருவுக்குத் தெரியாமல் தன்னோடு ஒரு புத்த சிலையை மட்டுமே எடுத்துக்கொண்டு அவளைத் தேடிச் செல்கிறான். அவன் செல்லும் இரவு திறந்துதான் இருக்கிறது. குருவின் மனமும் வெளிச்சத்தில்தான் கண்களைக் கொண்டிருக்கிறது. குரு எல்லாம் தெரிந்தவராய்.... அவன் வாழ்வை அவனே தீர்மானிக்கட்டும் என்ற பேரமைதியோடு கண்டும் காணாமல் படுத்திருக்கிறார்.

காலம் ஓடுகிறது.

## விண்டர்

திரும்ப வருகிறான்... அதே புத்த சிலையோடு. அந்தப் பெண் வேறொருவரோடு ஓடிவிட்டதால் அவளைக் கொன்றுவிட்டு வந்ததாகப் புலம்புகிறான். அழுது அரட்டுகிறான். அவன் உள்ளம் கொள்ளும் நடுக்கத்தைக் காணச் சகியாத துக்கம் நம்மையும் கவ்விக்கொள்கிறது. அவன் அந்தக் காடு மலைகளில் கத்தித் திரிகிறான். காதலும் கர்மாவும் விடாது கருப்பென அவனுள் ஓர் அருவியைப் போலக் கொட்டித் தீர்க்கிறது.

"பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான்" என்று பைபிளில் ஒரு வசனம் வருகிறது. "அறுவை சிகிச்சை வன்முறையல்ல" போலத்தான். அவன் தற்கொலைக்கு முயற்சிக்கையில் பிரம்பை எடுத்து அடி வெளுக்கிறார் குரு. முதுகு தோல் உரிய கட்டித் தொங்க விடுகிறார். உள் மனம் அமைதியடைய பலகையில் ஏதோ மந்திரங்களை எழுதுகிறார். பிறகு எழுதிய எழுத்துக்களில் இருக்கும் பலகையின் தோலை அவன் மனைவியைக் கொன்ற அதே கத்தியைக் கொண்டு எழுத்தை வடித்தெடுக்கச் சொல்கிறார். அவனைத் தேடி வரும் காவல்துறையிடம், "நாளை காலையில்தான் இந்த வேலை முடியும்... காத்திருங்கள்" என்கிறார். அவன் அதிகாலையில் வேலையை முடித்து விட்டுச் சோர்ந்து தன் கோபமெல்லாம் வற்றி மயங்கித் தூங்குகிறான். அவன் தூக்கம் களையும்வரை காத்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் அவர்களும் அந்த எழுத்துக்களுக்கு வண்ணம் பூச உதவுகிறார்கள். அதன் பிறகு அவனைக் காவல்துறையிடம் ஒப்படைத்துவிட்டுச் சொல்லொணாத் துக்கத்தில் தன் சிஷ்யன் முயற்சித்த அதே தற்கொலை முறையில் தன்னைத்தானே மாய்த்துக்கொள்கிறார் குரு.

"கிம் கி டுக்" படங்களில் நிகழும் மரணங்கள் எல்லாம் அர்த்தமுள்ளவையாக அதுவும் வாழ்வின் ஒரு பகுதியாகவே பதியப்படுகின்றன. மரணத்தை விட்டு ஒரு வாழ்வு எப்படி பூர்த்தியாகும்.. பூர்த்தியாகாத ஒன்று எப்படி வாழ்வாகும். வாழ்வாகாத ஒன்று எப்படி கதையாகும்.. தொடர் திரைக்கதையில் மையத்தின் கருணையை உணர்வில் கலக்கவிட்டு வேடிக்கை காட்டுவதில் "கிம் கி டுக்" சினிமாக்களின் குரு.

மீண்டும் காலம் ஓடுகிறது.

## பால்

அவன் சிறைத் தண்டனை முடிந்து மீண்டும் அங்கே வருகிறான். குருவற்ற அந்த மடம்.. தன்னைத் துறவறத்திலேயே இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறது. உடல் பலம் கூட்டும் வித்தைகளைக் குருவின் புத்தகம் கொண்டு கற்றுக்கொள்கிறான். அதன் மூலம் உள்ள பலம் சாத்தியமாகிறது. அந்த மடத்துக்கு அவனே குருவாகிறான். ஒரு நோக்கம் நிறைவேறும் நேரம் வருகிறது.

வாழ்வின் போக்கில் பாதை தவறி ஒரு தவறைச் செய்து அதை மறைக்க அடுத்த தவறு என்று வாழ்வின் தொடர் பயணம்.... மாற்றுப் பாதையில் பயணித்து... ஒரு கட்டத்தில்... எல்லாம் உணர்ந்த கணம் ஒன்றைக் கடக்க முடியாமல்... புத்த சிலையைக் கட்டி அணைத்தவாறு தன்

முதுகில் பெரிய கல் ஒன்றைக் கட்டிக்கொண்டு இரத்தம் கசிய உள்ளம் உருக மலை உச்சிக்கு ஒரு யாத்திரை மேற்கொள்ளும் கதைநாயகன் தன் பாவத்திற்கான சம்பளத்தைச் சுமப்பதாகவே உணர்த்தப்படுகிறது.

உணர்ந்தவர்கள் பாக்கியவான்கள்.... உண்மை சொல்லும் வலிகளைக் கடப்பவனே.. சரியான வழிகளில் பயணிக்கிறான்.

வாழ்நாள் முழுக்கச் சேர்த்துவைத்த பாவத்தை, முதுகு கட்டிய கல்லைச் சுமந்து மலையேறும்போது அது ஒரு சிலுவைப்பாடு போலத்தான் தெரிகிறது. அது ஒரு துக்கத்தின் வடிகால் என.. ஒரு தீர்வெனத்தான் இருக்கிறது. அந்தக் காட்சியில் பின்னணி இசை உயிரை உரிந்து மலையெங்கும் சிந்த வைத்துவிடும். உள்ளிருந்து அலறும் ஆன்மக் குரலின் மறுபக்கத்தின் கசிவைக் கேட்கக் கேட்க பார்க்கப் பார்க்க நரம்பதிர்ந்து மிருகம் சாகும். மானுட மேன்மை வெளிப்படும்.

புத்த சிலையை மலை உச்சியில் வைத்துவிட்டு இந்த உலகை அங்கிருந்து பார்க்கிறான். அவன் காணும் உலகுக்குப் பார்வை கிடைக்கிறது. அவன் கொண்டதற்கு அர்த்தம் விளங்குகிறது. இந்த வாழ்வின் கட்டமைப்பு பற்றிய புரிதல் அவனுக்குள் நிகழ்கிறது. இவ்வாழ்வின் குறுக்கு வெட்டு அவனுள் அழகூட்டுகிறது.

"கிம் கி டுக்" சினிமாவுக்கென்று ஒரு மொழி இருக்கிறது. வசனங்கள் மிகக் குறைவாகவே இருக்கும். ஆனால் வாழ்வின் தளம் மிக ஆழமாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும். இந்தப் படத்திலும் வசனமற்ற காட்சிகளின் கோர்வை பிரமிக்க வைப்பவை. ஒவ்வொரு சம்பவ இடைவெளியில் ஒவ்வொரு கால நிலையை அவனின் வாழ்வின் போக்குக்கு வகைப்படுத்திய விதம் உணர்வுப்பூர்வமானவை. அவன் வாழ்வும் இந்தக் காலநிலை மாற்றத்தைப் போல நிகழ்கிறது. ஸ்ப்ரிங்-இல் முதல் பத்து வருடங்களும்.. சம்மர் -இல் அடுத்து பத்து வருடங்களும்.. வின்டர்-இல் அடுத்து பத்து வருடங்களும்.. பால்-இல் அடுத்து பத்து வருடங்களும் என்று அவன் வாழ்வின் காலகட்டம் அதனதன் மாற்றத்துக்குட்பட்டு இயற்கையின் கைகளில் தவழவிட்டுக் காட்சிப் படுத்தியிருப்பது திரைக்கதை யுக்தி.

நீர் சுற்றிய நடுவில் ஒரு மடம். சுற்றிலும் மலை முகடுகள். அதே இடம்தான். கோடையில் வேறு மாதிரி... குளிரில் வேறு மாதிரி.. பனியில் வேறு மாதிரி....... இலையுதிர் காலத்தில் வேறு மாதிரி. அப்படி என்றால் வருடம் முழுக்கக் காத்திருந்து காலநிலை மாற்றத்தைப் பதிவு செய்திருக்க வேண்டும். அப்படித்தான் திரைக்கதையை அமைத்திருக்க வேண்டும். "கிம் கி டுக்" இயற்கையின் நாயகன். இயற்கைக்கு என்ன மொழியோ அதுதான் இவருக்கும் மொழி. சுவரற்ற நீர்க்குள் நுழையக் கூட கதவு வைத்திருப்பார். ஒவ்வொரு முறை வரும்போதும் போகும்போதும் அந்தக் கதவு வழியாகவே தான் செல்லும் பாங்கு.. ஒழுங்கு.. அது ஒரு முறைமையைக் கற்றுத்தருகிறது.

அவளைத் தேடிச் செல்கையில் ஒரு சேவலுக்கு விடுதலை தரும் அவன், காவல்துறையினால் கைது செய்யப்பட்டுச் செல்கையில் ஒரு பூனைக்கு விடுதலை தருகிறான். குறியீடுகளால் நிறைந்திருக்கும் இந்தப் படத்தில் ஒவ்வொரு காட்சியிலும் வாழ்வின் உன்னதத்தை நாம் கற்றுக்கொள்ளும் தேவை இருக்கிறது. மாயச் சிலுவையைச் சுமக்கும் அவரவர் மனதை அவரவர் அறிவோம்.

## அண்ட் ஸ்ப்ரிங்

வாழ்வை எதிர்கொள்ள இயலாத முகமற்ற ஒரு பெண்ணால் மீண்டும் ஒரு சிறுவன் கொண்டு வந்து அம்மடத்தில் விடப்பட்டு அவனும் இவன் செய்த அதே தவறைச் செய்வதாக.. அதைப் புத்தன் மலை உச்சியில் அமர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதாகப் படம் முடிகிறது. ஒரு தொடர் சங்கிலியின் அடுத்த கட்டம் நகர்கிறது.

இந்தப் படத்தில் இருந்து எனக்கொரு செய்தி கிடைத்திருக்கிறது. பார்க்கும் ஒவ்வொருவருக்கும் அவரவருக்கான செய்தி கிடைக்கும். அதுதான் இந்தப் படத்தின் ஆன்மா. "கிம் கி டுக்"கின் சினிமா எல்லாருக்கும் நெருக்கமான வாழ்வின் ஜன்னலைத் திறந்தே வைத்திருக்கிறது. அதன் வழியே ஒரு பெரும் வாழ்வின் திரை விலகுகிறது.

படம்: ஸ்ப்ரிங் சம்மர் வின்டர் பால் அண்ட் ஸ்ப்ரிங்

இயக்குனர்: கிம் கி டுக்
மொழி: கொரியா
வருடம்: 2003

**– உலக சினிமா தொடரும் ■**

கடிதங்கள்

தொடர் - 2

• கவிஞர் விக்ரமாதித்யன்

# நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு...




**கடிதம் – 7**

திருவனந்தபுரம்

24-6-83

நண்பருக்கு,

உங்கள் 14.6.83 கடிதம்.

ஒரு வாரமாக உடல்நிலை சரியில்லை. பலவிதப் பிரச்னைகள். திங்களன்று ட்யூட்டோரியல் போகவேண்டும். எனவே இனியும் ஒத்திப்போடாத நிலையில் இக்கடிதம் எழுதுகிறேன்.

உங்கள் கவிதைகளைப் பற்றி எனது comments. கவிதைகள் வார்த்தைத்தேர்வு சிருஷ்டிபூர்வமாக இருக்கின்றன. அதிகமாக எழுதினாலும் பிரசுரிக்கையில் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். Form & structure இன்னும் சிறப்பாக அமைத்திருக்கலாம். உதாரணமாக, 'கணையாழி' ஜீன்-இல் வெளியாகிய கவிதைகள் பற்றி:-

பக்கம் 27 structural changes may can be effected :

4ஆவது வரி : "இவனுக்கென்ன நஷ்டம்.." என்பதை

"இவனுக்கென்ன

நஷ்டம் செய்தித்தாளின்

முன்பக்கம்"

என்று மாற்றலாம். (?)

இதைப் போலவே

வரி 12 : "காத்திருக்க மாட்டானா" என்பதை

காத்திருக்க

மாட்டானா

என்று மாற்றலாம் (?)

வரி : 15-16

"இடையில் மறைந்து போகலாம்

இவன் ஆகிருதி" என்பதை

இடையில் மறைந்து

போகலாம் இவன் ஆகிருதி

என்று மாற்றலாம் (?)

இதைப் போலவே
"பறக்க முடிந்தால்
பறக்கலாம்
முடிந்தால் சும்மா இருக்கலாம்
துறக்க முடிந்தால்
துறக்கலாம்" என்ற மாற்றங்கள் செய்யலாம்.

கடைசி வரியை
"மட்டும் கடைசியில்
எஞ்சி நிற்கும்"

இதைப் போலவே மற்ற கவிதைகளிலும் அமைப்பைச் செம்மைப்படுத்தலாம் என்று தோன்றுகிறது.

இவைகளைப் பற்றி உங்கள் அபிப்ராயத்தை எழுதுங்கள். 'அமைப்பு' அடிப்படையில் இந்த மாற்றங்களை மற்ற கவிதைகளிலும் செய்யலாம் என்று தோன்றுகிறது. சில கவிதைகளில் effect அடிப்படையில் சில வரிகளை நீக்கலாமா? உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்
**'நகுலன்'**

• • •

**கடிதம் – 8**

Tc 9/63 golf Links Road
Kaudiyar East
Trivandrum - 695041.
22-3-84

நண்பருக்கு,

உங்கள் 20.3.84 கடிதம். நீங்கள் இங்கு வராதது பற்றி என்னால் புரிந்துகொள்ள முடியும். எப்பொழுது முடியுமோ அப்பொழுது வரலாம். நீங்கள் எப்பொழுதும் என் மனதில் இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

சமீபத்தில் வேறொரு நண்பர் பகல் 2.30க்கு என் வீட்டிற்கு வந்து இரவு 10.30க்குத் திரும்பினார். அவருக்குச் சில கசப்பான அனுபவங்கள். அப்பொழுது நான் அவரிடம் சொன்னது ஞாபகம் வருகிறது. You must back the circle. முக்கால்வாசிப் பிரச்னைகளும் நம் மனதின் போக்கினால் ஏற்படுபவை (உங்கள் நிலை எனக்கு நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்). ஆனால் மனதிற்கு முன் எதிர்நீச்சுப் போடவேண்டும். கஷ்டம். ஆனால் முடியும். ஏனென்றால் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அது தொடர்ந்து நிகழும். எனக்குத் தெரிந்தவரையில் திரு. வண்ணநிலவனும் ஒரு காலத்தில் மிகவும் அவஸ்தைப் பட்டிருந்தார் என்று நினைக்கிறேன். "கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்". சமூகம்; கேடுகெட்ட இந்தச் சமூகத்தை ஒன்றும் செய்ய முடியாது; எவ்வளவு நேர்ந்தாலும், நிசப்தமாக நாம் நம் வசதியாக இயங்கிக் கொண்டிருந்தால், ஒருவேளை, சமூகம் கூட மாறலாம்; ஏதாவது ஒரு வேலையை வைத்துக் கொண்டால்தான் அது எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அதில் நம்மை ஸ்தாபித்துக் கொண்டுதான் நாம் மேல் போக முடியும். எனக்கு பென்ஷன் ரூ. 168/= இதை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும். எனவே உடல் ஈடு கொடுக்கும் வரை ட்யூட்டோரியில் வேலை. எழுத்தினால் ஒரு சல்லிக்காசு கூடப் பெயராது. இதைப் பற்றியெல்லாம் நான் அதிகம் எழுத விரும்பவில்லை. ஆனால் இன்னும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். உங்களைப் பற்றியவரை <u>நீங்கள் ஒரு கவிஞர். அதை ஸ்தாபித்துக்கொண்டே இருக்க வேண்டும்.</u> கடைசியாக நான் உங்கள் கவிதையை - எந்த இதழில் என்று ஞாபகம் இல்லை - படித்த பொழுது வாழ்வின் நெருக்கடி ஓரளவுஅதில் குறுக்கிட்டுவிட்டதோ என்று ஒரு நினைவு. இருந்தாலும் எனக்குக் கவிதை பிடித்திருந்தது. <u>அதிகமாக எதைப் பற்றியும் அலட்டிக் கொள்ளாதீர்கள். எல்லாவற்றையும்விட; நமது கஷ்டங்கள். நமது எதிரிகள் - நாம்தான் நமக்கு முக்கியம்.</u>

ஒரு வேளை நான் ஏப்ரலில் அங்கு வரக்கூடும். வருவதாக இருந்தால் நிச்சயம் உங்களைச் சந்திக்கிறேன். A Tamil Writer's Diary என்று ஒரு ஆங்கிலக் கவிதைத்தொகுதி கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் உங்கள் தாய் பற்றிய கவிதை பகுதி மொழிபெயர்ப்பும், எனக்கு உங்கள் மீதுள்ள சிநேகிதத்தையும் மரியாதையையும் தெரிவித்திருக்கிறேன் - நீங்கள் ஆமோதிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன். பிற பின்னர்.

அன்புடன்
**'நகுலன்'**

• • •

**கடிதம் – 9**

திருவனந்தபுரம்
20-12-84

நண்பருக்கு,

உங்கள் கடிதம் 15.12.84.

ஏதோ ஒரு வகையில் சாதாரண அடிப்படைகளை ஒருவாறு சரியாக அமைத்துக் கொண்டால்தான் நாம் நாமாக இருக்க முடியும். இது ஒரு அளவு முக்யம்.

என் கட்டுரையைப் பிரசுரிப்பதில் ஆஷேபமில்லை. ஆனால் உங்கள் முக்யத்வம் உங்கள் கவிதை மூலம் - என் கட்டுரை இரண்டாம் பக்ஷம்தான். இங்குகூட ஒரு யோசனை - என் கட்டுரையையும் நீங்கள் திரு. எம்.எஸ்.ஆர்க்கு 'ஆகாசம் நீல நிறம்' பற்றி எழுதிய கடிதத்தையும் புஸ்தகத்தின் பிற்பகுதியில் அனுபந்தமாகச் சேர்த்தால் தொகுதிக்கு இன்னும் ஏற்றம் உண்டாகும் என்பது என் கருத்து. மேலும் உங்கள் புதுக்கவிதைகளைப்பற்றி என் கட்டுரையில் குறிப்புகள் இருக்காது. ஆனால் அது பரவாயில்லை. ஆனால் என் கட்டுரையும் உங்கள் கடிதமும் அனுபந்தமாக வந்தால் நன்றாக இருக்கும். ஆனால் முடிவு உங்களது.

உங்கள் கடிதம் வந்த முதல் நாள் நான் ஒருவித உணர்ச்சித்துடிப்புமின்றி நர்மதா ராமலிங்கத்திற்கு எழுதியிருந்தேன். பதில் வருமா என்று பார்க்க வேண்டும்.

எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் ஏதோ ஒரு வேலை அல்லது சிறிய தோதில் ஒரு பிஸினஸை தின ஜீவனத்துக்காக வைத்துக்கொள்வது நல்லது. நம் நாட்டில் எழுத்து மூலம் ஜீவிக்கமுடியாது.

எப்பொழுதும் உங்கள் நலத்தையே விழைகிறேன்.

அன்புடன்
**'நகுலன்'**

• • •

**கடிதம் – 10**

திருவனந்தபுரம்
1-2-85

நண்பருக்கு,

உங்கள் 30-1-85 கடிதம். உங்கள் புத்தகம் வெளியானது குறித்து மகிழ்ச்சி. என் கட்டுரை அதில் வராதது குறித்து ஒருவிதப் பிரச்சினையுமில்லை. நான் முன்னர் எழுதியமாதிரி, உங்கள் தொகுதிக்கு முகவுரை அவசியமில்லை. புஸ்தகம் கிடைத்தபிறகு எழுதுகிறேன்.

------------- ஜனவரி 10க்குள் Draft அனுப்புவதாக எழுதியிருந்தார். Draft கிடைக்கவில்லை. இது குறித்து அவருக்கு எழுதியதற்குப் பதிலும் இல்லை. நீங்கள் அவரைச் சந்திக்க நேர்ந்தால் நான் அவரிடமிருந்து பதிலை Draft உடன் எதிர்பார்ப்பதாகத் தெரிவியுங்கள்.

நான் என் அடுத்த நாவலுக்கு <u>வேறு ஏற்பாடு</u> செய்துவிட்டேன்.


Shri A. Nambirajan
52 A ... West Masi st
TENKASI


திருவனந்தபுரம்
2-3-86

 


குமுதத்தில் உங்கள் தொகுதி குறித்து ஒரு மிகச் சுருக்கமான வரி விமர்சனம் வந்திருந்தது. சமீபத்தில் கணையாழியில் வெளிவந்த 'பஞ்சபூதங்கள்'எனக்குப் பிடித்திருந்தது.

சில சமயங்களில் எனக்குத் தோன்றுகிறது, சிந்தையில்லாமல் வாழ்வதில் ஒரு தனி சுகம் இருக்கிறது என்று.

நானும் ஓரளவு - முற்றிலும் இல்லாவிட்டாலும் - அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

பிப்ரவரி உங்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும்.

அன்புடன்
**'நகுலன்'**

• • •

**கடிதம் - 11**

Trivandrum,
21- 3- 85

நண்பருக்கு,

நமஸ்காரம். உங்கள்16.3.85 கடிதம். நீங்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது என் சார்பாகத் திரு. ...............தைப் பார்த்ததற்கு என் நன்றி. அவரிடமிருந்து சாதகமான பதில் வந்தது.

இருக்கும் நிலையில் என் நாவல் வருவது பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. வந்து வந்து நாவலை எழுதிவைப்பதுடன் என் பொறுப்புத் தீர்ந்து விடுகிறது என்ற நிலைமைக்கு வந்துவிடுவேன் போலத் தோன்றுகிறது.

இந்த மாதம் முழுவதும் சற்று அதிகமான வேலைதான். முன்மாதிரி ஸைகிளை எடுத்துக் கொண்டு சுதந்திரமாகத் திரிய முடியவில்லை. உடல் சம்மதிக்க மறுக்கிறது.

எம்மெஸ்ஸாருக்கும் முன்போல் அவ்வளவு லாகவமாக இயங்க முடியவில்லை. அவருக்கு உங்கள் கடிதம் கிடைத்தது. பதில் எழுதுவார். நண்பர் முருகேசபாண்டியனை ஒருமுறை சந்திப்பதாகச் சொல்லியும் உடல் பலகீனத்தால் முடியவில்லை. தவிர 'முகா முகம்' விமர்சனம் அன்னத்தில் (பத்திரிகையில்) வந்ததாகக் கேள்விப்பட்டேன். ஏப்ரலில் அவரைச் சென்று பார்க்கவேண்டும்.

ஏப்ரலில் உங்கள் தொகுதியைப் பற்றி எழுதுகிறேன். ஒன்று: முடியுமென்றால் ஏதாவது ஒரு வேலையில் இருந்துகொண்டு நாம் செய்யவேண்டியதைச் செய்து கொள்வதுதான் உசிதம். கஷ்டம்தான் ஆனால் சகித்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. பிராந்தி குடித்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிறது.

என்றாலும்..

அன்புடன்
**'நகுலன்'**

• • •


अन्तर्देशीय पत्र कार्ड
INLAND LETTER CARD
35 INDIA 35
Thiru A. Nambirajan
7, South Kaveri street
Mettuppalayam,
MADRAS
पिन PIN 600033
तीसरा मोड़ THIRD FOLD
पहला मोड़ FIRST FOLD
दूसरा मोड़ SECOND FOLD
इस पत्र के भीतर कुछ न रखिए NO ENCLOSURES ALLOWED
पते में पिन कोड लिखें WRITE PIN CODE IN ADDRESS
प्रेषक का नाम और पता :— SENDER'S NAME AND ADDRESS :—
T.K. Doraiswamy
TC 9/163 Golf Links Road
Kawdiyar East
Trivandrum
पिन PIN 695041
अस्पृश्यता ईश्वर और मानवता के प्रति अपराध है।
UNTOUCHABILITY IS A CRIME AGAINST GOD AND MAN

**கடிதம் – 12**

திருவனந்தபுரம்,
**2-3-86**

நண்பருக்கு,

உங்கள் அன்பான 27.2.86 தேதி தாங்கிய கடிதம் கிடைத்தது. உங்கள் கடிதம் வந்த முகூர்த்தம் என்றுதான் சொல்லவேண்டும். சென்றமாதம் ஆரம்பித்த ஒரு குறுநாவலை எழுதி முடித்தேன். அதிலிருந்து ஒரு வரி: பிராந்திக் கசப்பும் வேண்டித்தான் இருக்கிறது.

ஏற்கெனவே முடித்த நாவலும் / இப்பொழுது எழுதி முடித்த நாவலும் வெளியீடு அநேகமாக நடைபெறா என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஏதோ ஒரு வேலையை ஸ்திரமாக வைத்துக்கொண்டிருப்பதாலும், (8 மாதத்திற்கு) படிப்பு, எழுத்து பிறகு எம்.எஸ்.ஆர். போன்றவர்களின் தொடர்பினாலும், நீங்கள் என்னிடம் எப்பொழுதும் காட்டும் அன்பினாலும் வாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறது. க.நா.சு.வின் குங்குமத்தில் வரும் கட்டுரைகளும் 'தாமஸூம் திருவள்ளுவரும்' எனக்குப் பிடித்திருக்கின்றன.

"நான் முன் மாதிரி இல்லை'' என்று எழுதியிருக்கிறீர்கள். அப்படி என்றால்?ஆனால் அதிகமாகப் படிக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன். தொடர்ந்து எழுதிக்கொண்டிருங்கள் - பிரசுரத்தைத் தள்ளிப்போடுவதும் ஓரளவு நல்லதுதான். எழுதுவதில் எந்தத் தத்துவமும் கிரியா சக்தியும் செயல்படுகிறதோ அது வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் செயல் பட்டால் அந்த அளவிற்கு நம் வாழ்க்கையும் வளம்படும்.

எம் எஸ் ஸாரிடம் சொல்கிறேன். சுப்பையாவை இப்பொழுதெல்லாம் காண முடிகிறதில்லை.

நீங்களும் உங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் கவிதைப் புத்தகங்கள் எப்படி விலைபோகிறது. ஏதாவது பணம் கிடைத்துக்கொண்டிருக்கிறதா?

**அன்புடன்**
**'நகுலன்'**

– தொடரும் ■

• வரலட்சுமி சேசா

# படைப்பு குழுமப் புத்தக வெளியீட்டு விழா





முகநூல் குழுமங்களில் இணைய உலகத்திற்கு ஈடுகொடுத்துப் பல படைப்பாளிகளை உருவாக்குவதில் “படைப்பு குழுமம்” திரு. ஜின்னா அஸ்மி அவர்களின் சீரிய தலைமையில் முன்னோடியாகத் திகழ்கிறது.

நமது படைப்பு குழுமத்தின் சார்பில் 18.01.2020ஆம் தேதி அன்று சென்னை YMCAவில் நடைபெற்ற 43வது புத்தகக் கண்காட்சியில் எழுத்தாளர் முற்றத்தில் ஐந்து புத்தகங்கள் “படைப்பு பதிப்பகம்” மூலம் பதிப்பித்து வெளியிடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில்...

பல விருதுகளைப் பெற்ற சிறப்பாளரும் 70களில் இருந்து தொடர்ந்து தனது படைப்புகள் மூலம் தமிழ் இலக்கிய உலகில் சிறப்பான கவிஞராகவும் விளங்கும் திரு. கலாப்ரியா அவர்கள் தலைமையில்,









கவிதைகளைப் பார்த்தால் நானிருப்பேன், கவிதைகளுள் நீங்கள் இருப்பீர்கள் எனத் திருக்குறள் போல் சிறு கவிதைக் குரலாய்த் தன்னை அறிமுகம் செய்து செயல்படும் "படைப்பு" குழுமத்தின் தலைவர் திரு. ஜின்னா அஸ்மி அவர்கள் முன்னிலையில்,

விக்ரமாதித்தன் ஐயா அவர்களின் "இடரினும் தளரினும்", ஆண்டன்பெனி அவர்களின் "நிறமி", "யமுனா என்றொரு வனம்" மற்றும் இரண்டாம் பதிப்பு கண்ட "இந்த பூமிக்கு வானம் வேறு", கவிஞர் மணி சண்முகம் அவர்களின் "கன்னத்துப் பூச்சி" ஆகிய ஐந்து புத்தகங்களை,

தமிழ்நாட்டின் பிரபல இலக்கியவாதியும் நக்கீரன் இதழ் நிறுவனத்தின் வெளியீடான இனிய உதயம் இலக்கிய இதழின் ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் பல விருதுகளைப் பெற்ற சிறப்பாளருமான திரு. ஆரூர் தமிழ்நாடன் ஐயா அவர்களும்,

தமிழகத்தின் முக்கிய கலை விமர்சகர், சிறந்த கவிஞர், தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் சிறந்த புலமை கொண்ட, சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் திரு. இந்திரன் அவர்களும்,

திரைப்படங்களில் வசனகர்த்தாவாகவும், இயக்குனராகவும், எழுத்தாளராகவும் சிறந்த கவிஞராகவும் பன்முகத் திறமையாளராக வலம்வரும் திரு. பிருந்தாசாரதி அவர்களும் இணைந்து இந்த ஐந்து புத்தகங்களை வெளியிட்டனர்.

இந்தச் சிறப்பான நிகழ்ச்சியைக் கவிஞர் திரு. ரூபஸ் ஆண்டனி அவர்களின் வசீகர குரலில் தொகுத்து வழங்கியது நிகழ்ச்சிக்கு இன்னும் சிறப்பு சேர்த்தது. இந்த ஐந்து புத்தகங்களையும் அழகுற அச்சிட்டு எல்லோர் கைகளிலும் தவழ விட்டது சிறப்பு ஆகும். படைப்புகுழுமத்தின் படைப்பாளிகள் பார்வையாளர்களாய் நிகழ்ச்சிக்கு வருகை தந்து மேலும் சிறப்பு செய்தனர்.

வளரும் இளம் கவிஞர்களைப் படைப்பெனும் ஆலமரத்தின் கீழ் செந்தமிழ் நிழலில் இளைப்பாறச் செய்கிறார் திரு. ஜின்னா அஸ்மி.

மாதந்திரப் பரிசுகள், சிறந்த கவிதைக்கான விருதுகள், சிறந்த கருத்தீட்டாளர்களுக்கு விருதுகள் என வழங்கிச் சிறப்பிப்பதில் முகநூல் மகுடத்தில் "படைப்பு" வைரமாக மின்னுகிறது. படைப்புத்தளம், மின்னிதழ் எனப் படைப்பு குழுமத்தின் கரங்களை மேலும் விரியச் செய்கிறார் திரு. ஜின்னா அஸ்மி. அவர் வைக்கும் ஒவ்வொரு அடியும் சிறப்பாகவும் கவனமாகவும் வெற்றியாகவும் இருக்கிறது.

மென்மேலும் வெற்றி பெற வாழ்த்துக்கள்....!



கவியும் சித்திரமும் :
• அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

ஆயிரம் அம்புகள்
ஒருசேரத்
தனது
அங்கத்தைத்
தாக்கியதுபோல் இருந்தது
அவளது –
குற்றச்சாட்டு
அப்பழுக்கற்றவனின்
பொறுமையைச் சோதித்து
அலங்கோலமாக்கியது
அவளின் –
அதிர்வேட்டு....

ஊனும் உயிருமாய்
ஒன்றியவனுடன்
தானும் வருவேன் என
அடம்பிடிக்கிறாள்
அங்கே –
அண்ணி
இவளோ
வன்முறையென்னும்
வடம்பிடிக்கிறாள்
வம்பு –
பண்ணி......!

தானும் வருவேன் என
அடம்பிடிப்பாளோ
என்றுதான் முதலில் –
தயங்கினான்
இப்படியொரு
தாக்குதலைத்
தொடுப்பாளென அறியாமல் –
மயங்கினான்....

உதிரத்தில் உதித்தவன்
ஊர்விட்டுப் போகிறான்
தன் –
சகியோடு
இங்கே
ஊர்மிளை என்னும் நரி
உலவுகிறது
ஒரு –
சதியோடு
என்ன செய்வது
ஊழ்வினை
ஒன்றி நிற்கிறது –
விதியோடு.....!

இறுதியாய்
அவள் பேசியது
இதயத்தை –
மென்றது
இளகிய மனங்கொண்ட
இலக்குவனையே
கோபம் –
தின்றது
அதுவரை
அவள்மீது கொண்ட



அன்பையே
அது –
கொன்றது

கள்ளான அவளது
இதழ்கள்
இன்று –
முள்ளானது
அவன் நெஞ்சம்
பொல்லாத
கோபத்துக்கு –
உள்ளானது

'நிறுத்தடி நீலியே...'
என்று
நெஞ்சம் பதறிடக் –
கத்தினான்
தாம்பூலமும்
கற்கண்டும் வைத்திருந்த
தாம்பாளம் ஒன்றை –
எத்தினான்

ஆத்திரம் அறிவிழக்க
எதிர்நின்ற
ஊர்மிளையின் முகத்தில்
எச்சில் கூட்டி –
உமிழ்ந்தான்
அவளின்
உச்சிமுடி பற்றி
ஓங்கி ஓங்கி –
அறைந்தான்...
ஈனப்பிறவியடி நீ
என
எட்டுகாதம் கேட்கும்படி –
இரைந்தான்

ஊனக் கண்கொண்டு
உடன்பிறந்தவளைத்
தூற்றும்

உன்னைக் கொல்வதால்
என்னையும் தொற்றும் –
பழியேன்
போர்முனை சென்று
புகழுடம்பு எய்தினாலும்
அடியே.. ஊர்மிளை...
உன் முகத்தில்
ஒருபோதும்
இனி நான் –
விழியேன்......!

'அடியே.. கல்நெஞ்சக்காரி..!
காடேகி
மீண்டு வருகையில்
என் கடைக்கண்ணும்
உன்னைக் –
காண விழையாது
அரவம் போல்
விடங்கக்கும்
உன் அந்தப்புரத்தில்
அந்த அண்ணனே
சொன்னாலும்
என்னிரு –
கால் நுழையாது
குவலயமே கூடிவந்து
தெண்டனிட்டாலும்
இனி உனக்காக
என் –
உள்ளம் குழையாது'
என –
இரைந்தான்
பின்
கையில் ஏந்திய
வில்லோடும் அம்போடும்
காரிருளில் கலந்து –
மறைந்தான்

• • •

வாய்கொள்ளாச்
சிரிப்போடு
வந்தவன்தான்
இப்போது
நோய்கொண்ட
சவலைப்பிள்ளையாய்
நொந்தபடி –
போகிறான்
தாய்சொல்லைத்
தட்டாத
தசரத மைந்தனிடம்
போய்வா என்றுரைத்து
புன்னகைக்க –
யாருமில்லை
அப்படி
புன்னகைத்தவளின்
முகத்தை
மறுபடியும் பார்ப்பதற்கு
அவனது அடிமனசில்
பட்டகாயம்–
ஆறவில்லை
ஆகவே
திரும்பிப் பார்க்காமலேயே
அவன் –
நடந்தான்
அவளைத் திட்டியபடியே –
கடந்தான்

நேற்று வரை
நெஞ்சணையில் புரண்டவள்
தன்னோடு
பஞ்சணையில் உருண்டவள்
வார்த்தைகளில்
விடம் தோய்த்து
வம்படியாய் –
பேசுகிறாள்
அவள்
வரன்முறையற்ற
சொல்லம்புகளை
வாசலில் நின்று –
வீசுகிறாள்
அண்ணனுக்காக

இப்போது
அவளைப் –
பொறுக்கவேண்டும்
அஞ்ஞாத வாசம்
முடிந்த
அடுத்தகணமே
அடாது பேசிய
அவளது நாவினை –
அறுக்க வேண்டும்....!
என
அவன் நினைக்க....
ஊர்மிளையோ
“தன்வாசம் நிரம்பப்பிடிக்கும்
அவனுக்குத்
தன்னை
தழுவ விட்டாலோ
தலையை வருட விட்டாலோ
அஞ்ஞாதவாசத்துக்கோர்
முழுக்கு போட்டுவிட்டு
அந்தப்புரவாசலை
அடைப்பான்
அதன்பிறகு
அண்ணனுக்கும்
அண்ணிக்கும்
துணைபோக இருக்கும்
தன் எண்ணத்தை
அடியோடு –
துடைப்பான்
ஆயுளுக்கும் அவள்மடியே
சுகமென்று
கிடப்பான்''
ஆகவேதான்
பூடகமாய் போட்டாள்
அந்த ஊர்மிளை
ஒரு –
நாடகம்
அந்த நாடகத்தால்தான்
எவ்விதத் தடங்கலுமின்றி
இலக்குவனால்

போய்ச்சேர முடிந்தது –
கானகம்.....!
இலக்குவன்
இல்லாது போனால்
நிச்சயமாக
இடர்ப்படும்போதெல்லாம்
இராமன் –
கலங்குவான்
தன்
இளவலின் துணையிருந்தால்
அவன்
எத்தகைய துயரத்தையும்
கடந்து –
துலங்குவான்
ஆகவே
அண்ணனுக்காக
ஆரண்யம் புகும் தன்
கணவனையும்
இந்த அகிலம் –
போற்றவேண்டும்
அயோத்திராமனுக்கு
இணையாக
அவனையும்
இந்த உலகம்–
ஏற்றவேண்டும்.. ...
என
மனையாள்
ஊர்மிளையின்
மனத்திலோர் எண்ணம் –
எழுந்தது
அந்த மாதரசியின்
தியாகத்துக்கு
முன்னால்
மற்றவரின் தியாகமெல்லாம் –
விழுந்தது...

தர்மத்தின் முகத்தில்
அவ்வப்போது
காலம்

கறுப்பு மையெடுத்து–
பூசும்
அதைக் கண்டு
இல்லாததை பொல்லாததை
சொல்லி
இந்த உலகம் –
ஏசும்
கடைசியில்
உண்மை தெரிந்து
உதாசீனப்படுத்திய
அத்தனை உள்ளங்களுக்கும்
உள்ளமென்று
ஒன்றிருந்தால் –
கூசும்.......!

• • •

அறநெறி வழுவாத
அரசனின் பிள்ளைகள்
அன்று
மரவுரி தரித்தபடி –
வெளியேறினர்
அரண்மனை மாதர்
அத்தனை பேரும்
அலறித் துடித்து –
தரை வீழ்ந்தனர்

கோசலை
கதறினாள்
சுமித்திரை
மயங்கினாள்
கைகேயி கூட
கொஞ்சம் –
கலங்கினாள்
மந்தரை மட்டும்
ஒரு
மந்தகாசச் சிரிப்போடு
அந்த
மாளிகையை விட்டு –
நழுவினாள்

வாக்கு தவறாமல்

வனம் போகும்
இராமனைக் கண்டு
அயோத்தியே
அன்று
மூக்கு சிந்தி –
அழுதது
முன் போகும்
அவனது
முதுகுக்குப் பின்னால்
உயர்த்திய கரங்களைக்
கூப்பியபடி
உயிரொடுங்கித் –
தொழுதது

ஆரண்யம்
செல்வதற்காகவே
அவதாரம்
எடுத்தது போல்
கார்வண்ண மேனியன்
முன்செல்ல
அவனது
கரம்பற்றியபடி
பாரெல்லாம் போற்றிடும்
பதிவிரதை சீதா
பின்செல்ல
அந்த
இணையரைத் தொடர்ந்து
இன்முகத்தோடு
பின்சென்றான் –
இலக்குவன்

அணிமாடங்கள்
சூழ்ந்த
அயோத்தி நகரம்
அன்று
ஆற்றொணாத் துயரத்தில் –
மூங்கியது
அய்யகோ ராமா
அய்யகோ சீதா
அய்யகோ இலக்குவா
என
அங்கிருந்தோர்
வடித்த கண்ணீர்
ஆர்ப்பரித்து –
பொங்கியது
இதைக் கண்டு
அங்கம்பதறிய
அந்திவானத்துச் சூரியனும்
நிறம் –
மங்கியது

அங்கே
பாவை மாடத்தில்
நின்றபடியே
பதைபதைக்கப்
பார்த்துக்கொண்டிருந்தாள் –
ஊர்மிளை

கரைக்காதலனைத்
தழுவிட
அடிக்கடி வந்துபோகும்
அலைக்காதலி போல
நிலைகொள்ளாது
அவளது உள்ளம் –
அலைபாய்ந்தது
திரையிட்ட கண்ணீர்
தேகத்தில் வழிந்தோட
திடுமென
அவளது நெஞ்சில் ஓர் –
உலை காய்ந்தது

நேற்று வரை
ஈரம் காயாமல்தான்
இருந்தது
எழில் சிந்தும்
அவளது வதனத்தில்
இலக்குவன் தந்த –
முத்தம்
இன்றோ
கன்றிப்போன
இதழ்களினூடே
கசிந்தபடி
இருக்கிறது –
இரத்தம்
போகட்டும்
அவன்
தொட்ட காரியம்
துலங்கும் வரையிலும்
தொடரத்தான் போகிறது
இந்த –
யுத்தம்.....!

இளகிய மனங்கொண்ட
இலக்குவனையே
எரிதழலாக்கியது
அவள் சொன்ன –
ஒரு வார்த்தை
அந்த
ஒருவார்த்தை கேட்டு
உயிரொடுங்கிப் போனவன்
இதயங்கனிந்து
பேசுவானா இனி –
மறுவார்த்தை.....?

அழுதழுது தொழுதாலும்
அவளை இனி –
ஏற்பானா
தன்
ஆவிபிரியும் வரை
அவளிடம் இனி –
தோற்பானா
அஞ்ஞாதவாசம் முடிந்து
அரண்மனை
மீண்டாலும்
அன்பே என்றழைத்து
தன் அருகில் இனி –
சேர்ப்பானா.....?

– தொடரும் ■

• தா. ஜோ. ஜூலியஸ்

# ஓரான் பாமுக்





உலகின் 63 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு 13 மில்லியன் படைப்பு நூல்கள் விற்பனை செய்யப்பட்டுவரும் நிலையில், உலகிலேயே மிக வெற்றி பெற்ற ஒரு எழுத்தாளர் ஓரான் பாமுக் ஆவார்..

நவீன காலப் படைப்புகள் நம் வாழ்வோடு நமக்குத் துணைவருகின்றன. நமக்கு ஓர் அனுபவம் நிகழும்போது சட்டென அவை தலை காட்டுகின்றன. இதுவரை இல்லாத, நமக்குத் தோன்றாத புதியபுதிய அர்த்தங்களைக்கூட கொடுக்கின்றன. இதுவரை தெரியாத புதிர் களுக்குச் சிலசமயம் பதிலாகியும் போகின்றன. சமகால வாழ்விலிருந்து முளைத்துவரும் ஓரான் பாமுக்கின் உணர்ச்சிமிகு நிகழ்வுகள் தருணங்கள் தோறும் நம் உடன்வந்து நம்மை.. அதாவது வாசகரை ஒருசொட்டுரத்தம், ஒருசொட்டுக் கண்ணீர், ஒருசொட்டுஎச்சில், ஒருசொட்டுவிந்தை என ஏதாவது ஒரு தாக்கத்தை விளைவினை விட்டுச் செல்வதாகவே தோன்றுகிறது.

துருக்கி நாட்டின் புதின ஆசிரியர், திரைக்கதை ஆசிரியர், கல்வியாளர் மற்றும் நோபல் விருது பெற்ற ஓரான் பாமுக் 1952ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7ஆம் நாள் பிறந்தவர். துருக்கி நாட்டின் மிகச் சிறந்த எழுத்தாளர் ஆவார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராக விளங்கும் இவர், எழுதுதல் மற்றும் ஒப்பிலக்கியம் பற்றிக் கற்பித்துவருகின்றார். 2018ஆம் ஆண்டு அமெரிக்கத் தத்துவ சொசைட்டிக்குத் தேர்வான இவர் படைத்த நூல்களில் சில பின்வருமாறு ஆகும்.

- டார்க்னஸ் அண்ட் லைட் (இருளும் ஒளியும்)
- வொயிட் கேசில் (வெள்ளைக் கோட்டை)
- பிளாக் புக் (கருப்பு புத்தகம்)
- நியூ லைப் (புதிய வாழ்க்கை)
- மை நேம் ஈஸ் ரெட் (என் பெயர் சிவப்பு)
- ஸ்னோ (பனி)
- ஸ்தான்புல்: மெமோரிஸ் அன்ட் தி சிட்டி (இஸ்தான்புல்: நகரமும் நினைவுகளும்)
- தி மியூசியம் ஆஃப் இன்னசென்ஸ் (அறியாமையின் பொருளரங்கம்)
- எ ஸ்ட்ரேஞ்னஸ் இன் மை மைண்ட் (மனதில் ஒரு அன்னியம்)

இவரது புத்தகமாகிய “இஸ்தான்புல்: நகரமும் நினைவுகளும்” என்பதில் இவர் விவரித்துள்ள வாறே, இஸ்தான்புல் நகரில் 1952இல் ஒரு பணக்காரக் குடும்பமாக இருந்து பின் சரிந்து கொண்டிருந்த உயர் நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் வளர்க்கப்பட்டார். அதே நகரில் உள்ள ராபர்ட் கல்லூரியில் கல்வி பயின்றார். தனது கனவாக ஓவியன் ஆக வேண்டும் என்பதைக் கொண்டிருந்தார். இஸ்தான்புல்

தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் கட்டுமானப் பொறியியல் படிப்பு மேற்கொண்டார். மூன்றாண்டுகளில் அந்தப் படிப்பினை விட்டுவிட்டு முழு நேர எழுத்தாளராக மாறுவதற்கு ஏதுவாக இஸ்தான்புல் பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர் பட்டப்படிப்பினை 1976இல் முடித்தார்.

1974ஆம் ஆண்டு முதல் முறையாக முழு நேர எழுத்தாளராக எழுத ஆரம்பித்தார். அவரது முதல் புதினம் ஆகிய.. "இருளும் ஒளியும்" 1979ஆம் ஆண்டில் "மில்லியட் ப்ரஸ் புதினப் போட்டியில்" பரிசு வென்றது. திருவாளர் செய்தேத் மற்றும் அவரது மகன்கள் என்ற பெயரில் 1982ஆம் ஆண்டில் இந்தப் புதினம் வெளியிடப்பட்டு 1983இல் ஓரான் கெமால் புதின விருதினை வென்றது. அவர் வாழ்ந்த இஸ்தான்புலில் வாழ்ந்து வந்த ஒரு பணக்காரக் குடும்பத்தின் மூன்று தலைமுறையின் கதையினை இப்புதினம் விவரிக்கிறது.

அவரது இரண்டாவது புதினமாகிய "அமைதியான வீடு" 1984இல் வெளியிடப்பட்டு மடராளி புதினப்பரிசினை வென்றதுடன்; அதன் ஃப்ரெஞ்ச் மொழியாக்கமும் டேகோவெர்டேயின் ஐரோப்பிய இலக்கிய விருதினையும் தட்டிச் சென்றது.

"வெள்ளைக் கோட்டை" என்ற அவரது வரலாற்றுப் புதினம் துருக்கிய மொழியில் 1985ஆம் ஆண்டில் வெளிவந்தது. இது அவருக்கு 1990ஆம் ஆண்டில் வெளிநாட்டு இலக்கிய வகைமைக்கான விருதினைப் பெற்றுத் தந்ததுடன் வெளிநாட்டு வாசகர் வட்டத்திலும் மிகப் பெரிய பெயரினை அள்ளித்தந்தது. 1991ஆம் ஆண்டு மே திங்கள் 19ஆம் நாள் வெளிவந்த தி நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை "ஒரு புதிய விண்மீன் கீழை நாடுகளில் பிறந்துள்ளது - ஓரான் பாமுக்" எனப் பாராட்டிச் செய்தி வெளியிட்டது. இதுவரை திட்டவட்டமாகப் பின்பற்றிய அவரது இயல்பு வகைமையிலிருந்து பின் நவீனத்துவ வகைமைக்கு அவர் சோதனை முறையில் இப்போது எழுத ஆரம்பித்தார். துருக்கி இலக்கியத்தில் அவரது "கருப்பு புத்தகம்'' எனும் படைப்பு அதன் படைப்பாக்கத்தாலும் சிக்கலான கதை முடிச்சுகளை அவிழ்க்கும் திறத்தாலும் மிகவும் பிரபலம் அடைந்தது. இந்தப் படைப்பு ஓமார் கய்யர் எனும் பிரபல இயக்குனரால் "ரகசிய முகம்" என்ற பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்ட போது அதற்கான திரைக்கதையினைப் பாமுக்கே எழுதினார். அவரது ஐந்தாம் படைப்பாகிய புதிய வாழ்க்கை 1994ஆம் ஆண்டு வெளிவந்தபோது எல்லோரையும் ஆட்கொண்டதோடு துருக்கியில் இலக்கிய உலகின் பேச்சாகவும் மூச்சாகவும் மாறிப் போயிருந்தது. குர்டியா உரிமைப் போராட்டத்திற்குச் சார்பாக அவர் பேசி வந்ததால் பாமுக் உயரிய, கொண்டாடப்படும் பிரமுகர்களில் ஒருவராக மாறிவிட்டு இருந்தார். 2019ஆம் ஆண்டில் நோபல் விருது பெற்ற இவர் தனது 66ஆம் வயதில் இஸ்தான்புலின் பால்கனியில் இருந்து பிடித்த புகைப்படங்களின் கண்காட்சி ஒன்றினை ஏற்பாடு செய்தார். 8500 புகைப்படங்கள் வாயிலாகப் பழைய இஸ்தான்புல் நகரின் காட்சிகளை, அந்த நாட்டின் கலை மற்றும் கலாச்சாரத்தைக் காண்போர் கண் முன் கொணர்ந்தார்.

1998ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட "என் பெயர் சிவப்பு'' அவருக்குப் பன்னாட்டு வாசகர்களை உருவாக்கித் தந்தது. இந்தப் புதினத்தில், 16ஆம் நூற்றாண்டு இஸ்தான்புலின் இரகசியங்கள், சிக்கல்கள், காதல் ரசம் மற்றும் தத்துவம் ஆகியவை சம அளவில் பின்னிப் பிணையப்பட்டு இருந்தன. ஓட்டொமான் சுல்தான் 3இன் ஆட்சிக் காலத்தின் ஒரு சாளரத்தைத் திறந்து காட்டி, 1591ஆம் ஆண்டின் ஒன்பது குளிர் நாட்களை மையப்படுத்தி, கிழக்குக்கும் மேற்குக்கும் இடையேயான ஒரு பகையினை மூச்சு முட்டும் ஒரு அவசரத்தில் படிக்கும் நிலையினில் நம்மை அழைத்துச் செல்லும் உத்தியில் நம்மை உறைய வைக்கிறது. 2003ஆம் ஆண்டில் பன்னாட்டு டப்ளின் விருதினைப் பெற்ற இந்தப் புதினம் உலகின் 24 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

அடுத்து "பனி'' எனும் புதினத்தை இவர் படைத்தார். இது 2002ஆம் ஆண்டில் வெளியிடப்படது. கர்ஸ் எனும் எல்லை நகரினை மையப்படுத்தி உள்ள இந்த நூலில் துருக்கியில் இஸ்லாத்திற்கும் மேற்கத்தியத்திற்கும் உள்ள முரண்பாடுகள் ஆய்வு செய்து எழுதப்பட்டு உள்ளன. 2004ஆம் ஆண்டின் மிகச் சிறந்த

நூல்களில் ஒன்றாக தி நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை குறிப்பிடும் இந்தப் புதினத்தில் ஸ்னோ என்பவன் கா எனும் துருக்கியக் கவிஞனின் பின்னே செல்கிறான். அந்தக் கவிஞன் கார்ஸ் நகரின் பனிமூடிய மலைகளைக் கடந்து செல்லும்போது குறிக்கோள் இல்லாத இஸ்லாமியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமழித்த வழக்கறிஞர்கள், சமயச் சார்பற்றவர்கள் ஆகியோர் மிக மிக முரண்பாடான கொள்கைகளுக்காகக் கொன்றும் கொல்லப்பட்டும் வருவதைச் சித்தரிக்கும் ஒரு அற்புதப் படைப்பாகும்.

மே 2008ஆம் ஆண்டில் தி மியூசியம் ஆஃப் இன்னசென்ஸ், நோபல் விருது 2006இல் வாங்கிய பின்னர் எழுதப்பட்ட முதல் புதினம் ஆகும். இந்தப் புதினத்தில் அவர், அழகிய பெண்களைக் கண்டதும் காதலில் விழுந்து தோற்கும் ஆண்களின் அவலக் காதலை; அவர் பெண்கள் ஆண்களை அனாவசியமாக, விளையாட்டுப் பொருளாகக் கருதுவது; ஆண்கள் பெண்களின் காதலும் அழகும் நிலையானது உண்மையானது என விரும்பி வீழ்வது போன்றவை மேலோட்டமான கருத்துக்களால் ஏற்படும் மனப்பிறழ்வு என நிலைநிறுத்துகிறார். பாமுக்கின் கதாநாயகர்கள் அனைவருமே மிகப் படித்தவர்களாக இருப்பினும் கண்மூடித்தனமாகக் காதலில் விழுந்து பின் தாங்க முடியாத தனிமையில் அவத்தைப்படுபவர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர், பாமுக் 2013ஆம் ஆண்டில் தமது ஆப்த நண்பரும் எழுத்தாளரும் ஆகிய கிராசியா டோடெரி என்பவரைத் தம் வீட்டிற்கு அழைத்தார். அவர்கள் இருவரும் இணைந்து “சொற்களும் விண்மீன்களும்'' எனும் கண்காட்சியினை ஏப்ரல் 2, 2017இல் துவக்கினர். இது மனிதனின் வானத்தை ஆய்ந்து பார்க்கும் ஆவலையும், விண்மீன்களைக் கேள்வி கேட்கும் அழைப்பு எவருக்கு உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவும் செய்த முயற்சி ஆகும். இக்கண் காட்சி தூரின் நகரிலும் பிற ஊர்களிலும் வேறு வேறு பெயர்களில் நடத்தப்பட்டது.

பாமுக்கின் பத்தாவது புதினம் “சிவப்பு மயிர் கொண்ட பெண்” ஆகும். இது, வெற்று நிலத்தில் ஒரு கிணறு வெட்டுபவனும் அவனது உதவியாளனும் தண்ணீர் தேடி அலைவது போன்ற அமைப்பில் ஃப்ரெஞ்ச் தத்துவங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட ஒன்று. 1980ஆம் ஆண்டு இஸ்தான்புலில், கிணறு தோண்டுவது ஆங்காங்கே நடந்தது. இதில் மாஸ்டர் மெக்முத் மற்றும் அவனிடம் தொழில் பயிற்சி பெறுபவன் கிணறு வெட்டுவதற்குப் பழங்கால முறைகளைக் கடைபிடிக்கின்றனர். இது அவர்களது முதுகு உடையும் கதை ஆகும். ஆயினும், அவர்களது கதை, உருவகம் வாயிலாக, தந்தையும் மகனும், அதிகாரமும் தனி நபரும், நாடும் விடுதலையும், வாசித்தல் மற்றும் கண்ணால் காணுதல் போன்றவை விரிவாக விவரிக்கப்பட்டு உள்ளன.. தவிர்க்க முடியாத இந்தப் புதினத்தில் இஸ்தான்புலின் அருகில் நடந்த ஒரு கொலையினைத் துப்பு துலக்க முப்பது ஆண்டுகள் கழித்து முயல்வதும் அது கற்பனைச் செறிவில், கலாச்சார முறிவில், நாகரீகச் சீர்கேட்டில் கிழக்கையும் மேற்கினையும் ஆட்கொண்டிருக்கும் கொள்கைச் சூழலமைவில் எவ்வாறு சாத்தியப்படக் கூடும் என்பதையும் எடுத்து உரைப்பது ஆகும். கிரேக்க நாடக ஆசிரியர்களான சோஃபோக்லீசின் “ஈடிபஸ் ரெக்ஸ்” மற்றும் ஃபெர்டொளசின் “ருஸ்தமும் சோரபும்” என முறையே தந்தைக் கொலை, மகன் கொலை ஆகியவற்றை இணைத்துக் கொலையுதிர் பட்டணமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

புதினங்கள் தவிர புதினம் அல்லாதவை என்ற வகைமையில் பாமுக் எழுதிய இஸ்தான்புல்: நகரமும் நினைவுகளும் படைப்பினைக் கூறலாம்.

இத்தனைச் சிறந்த படைப்பாளி இவ்வளவு மாபெரும் வெற்றி அடைவதற்கு அவரது தனிப் பாணியே காரணம் ஆகும். அவரது படைப்பு நூல்களில் அனைத்திலுமே, நாம் காண்பது ஒரு குழப்பம், கிழக்கு மேற்கு பகைச்சூழல், அமைவில் பகுதியாகவாவது ஏற்படும் அடையாளம் இழந்த நிலை ஆகியவை அகும். இவை உண்மையில் மனித வாழ்வை, மாண்பினை அசைத்து, நிலை குலையச் செய்து, பல சிக்கல்களில் கொண்டு சேர்க்கின்றன என்பதே முடிந்த முடிவாக எடுத்துரைக்கின்றார். அவரது படைப்புகளில் படைப்பாக்கம் மிக்க இலக்கியம், ஓவியம் போன்ற கலைகள் மீதான ஆர்வம், அதைப் பற்றிய கலந்துரையாடல், விவாதம் போன்றவை திணிப்பு தெரியாமல் சேர்க்கப்பட்டு இருக்கும். ■

• பிரேம பிரபா

# கனாக் கண்டேனடி தோழி!

“நான் பத்தினியெனில் இவ்வூரை அழித்திடுவேன்” என்று சூளுரைத்த கண்ணகி வெஞ்சினத்தோடு பாண்டிய மன்னனின் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு மதுரை நகரினுள்ளே நுழைந்தாள். தன் இடக் கொங்கையைத் திருகியெடுத்து மதுரையின் மீதெறிய அவள் சொல்லிய வண்ணமே அந்நகரம் தீப்பற்றிக்கொண்டு பல இடங்கள் எரிந்து சாம்பலாயின. அதனால் ஏற்பட்ட வெம்மையைத் தாங்கமுடியாத மதுரையின் அதிதேவதை, கண்ணகியின் முன்வந்து அவளை நோக்கி “நான் இந்த மதுரை நகரின் தெய்வம். இத்தருணத்தில் நான் உனக்குச் சில உண்மைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றைக் கேட்பாயாக. உனக்கு இத்துன்பம் வந்த வரலாற்றைக் கேள்” என்று கூறத் தொடங்கினாள்.

“முன்பு ஒருகாலத்தில் கலிங்கநாட்டில் இருக்கும் சிங்கப்புரத்தை வசு என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கும் கபிலபுரத்தை ஆண்டுவந்த குமரன் என்ற மன்னனுக்கும் தீராத பகை இருந்தது. ஒருவரைஒருவர் வெற்றிகொள்ள, தகுந்த தருணம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சிங்கபுரத்துக் கடைவீதியில் சங்கமன் என்ற வணிகன் ஒருவன் பொருட்களை விற்றுக்கொண்டிருந்தான். அந்த நாட்டு மன்னரிடம் வேலைபார்க்கும் பரதன் என்பவன் சங்கமனைக் கபிலபுரத்தின் ஒற்றனெனச் சந்தேகித்துச் சிறைப்பிடித்து அவனைக் கொலையும் செய்துவிட்டான். அனைத்தையும் கேள்விப்பட்ட சங்கமனின் மனைவி நீலி பெருத்த துயரம் கொண்டாள். பதினான்கு நாட்கள் தாங்கொணா மனவேதனையில் அலைந்து திரிந்து கடைசியில் ஒருமலைமேல் நின்று தன் உயிரை மாய்க்கத் தீர்மானித்தாள். தனக்கு இத்துன்பம் ஏற்படக் காரணமாய் இருந்தவர்கள் மறுபிறப்பில் இதே துன்பத்தை அடைய சாபமிட்டு மலையிலிருந்து விழுந்து இறந்தாள். அப்பரதனே இப்பிறவியில் உன் கணவன் கோவலனாகப் பிறந்திருக்கிறான். ஆதலால்தான் நீ இத்துன்பம் அடைந்தாய்”.



வெஞ்சினம் கொண்ட கண்ணகி சற்றே சினம் தணிந்தாள். அதிதேவதை “இன்றிலிருந்து பதினான்காவது நாளின்பகல் கழிந்தபிறகு நீ உன் கணவன் கோவலனைக் கண்டு அவனுடன் மீண்டும் சேர்வாய்” என்று தெய்வ வாக்கு கூற கண்ணகி மதுரையைவிட்டு வைகையாற்றுக் கரைவழியாக மேற்குத்திசையில் சேரநாட்டை நோக்கிப் பயணித்தாள். மதுரையின் அதிதேவதை கூறியதிற்கிணங்க கண்ணகி பதினான்கு நாட்கள் கழித்துச் சேரநாட்டில் இருக்கும் திருச்செங் குன்றினை அடைந்தாள்.

எங்கும் பசுமை போர்த்தியிருக்கும் குறிஞ்சி நிலம். தொடர்ந்து விழும் அருவியின் ஒலி, மலைக்குறவர்கள் இசைக்கும் பறையோசையை ஒத்திருந்தது. ஆங்காங்கே கேட்கும் பலவிதமான மிருகங்களின் சப்தங்களை மீறியபடிக்குக் குழியில் விழுந்த யானைகளைப் பழக்கும் பாகர்களின் சப்தமும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது. மரத்தின்மேல் இருக்கும் பரண்களின் மீது நின்றுகொண்டு முற்றிய தானியங்களைக் கொத்தவரும் பறவைகளைக் கவண்கொண்டு துரத்தும் குறிஞ்சி நிலப் பெண்களின் குரல்கள் இசையாய்த் தவழ்ந்து வந்தன.

அத்திமரத்தினடியில் தன் காதலி கருங்குழலிக் காகக் காத்திருக்கும் எழிலாடன் பொறுமை யிழந்து காணப்பட்டான். அவர்களின் முந்தைய சந்திப்பில் அவன் கேட்டதற்கிணங்க இன்றுஇரவு கருங்குழலி தன்னுடன் இருக்கப்போகிறாள் என்ற

எதிர்பார்ப்பில் நிலைகொள்ளாது தவித்துக் கொண்டிருந்தான். கருங்குழலி தன்னைக் காண வரும்போது எப்படிப் பேசவேண்டும், எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதான ஒத்திகையை மனதளவில் நிறைவேற்றி அதில் சில மாற்றங்களுடன் மேலும் சீர்படுத்தித் திருப்தியடைந்தான். சென்ற சந்திப்பில் அவள் விடைபெறும்போது கொடுத்த முத்தத்தை மீண்டும் ஒருமுறை நினைத்துப்பார்த்தான். இந்த இரவு முழுவதும் அவள் கொடுத்த ஒற்றை முத்தத்தைத் தொடர்முத்தங்களாக மாற்றிக் கொடுக்கத் திட்டமிட்டிருந்தான். அவளுக்கான காத்திருப்பின் ஒவ்வொரு நொடியும் பெரும் பாரமாய்க் கடந்துகொண்டிருக்க.. தூரத்தே தன் காதலியின் உற்றதோழி வருவதைக் கண்ட எழிலாடன் பெரும் குழப்பத்திற்குள்ளானான். “உங்களுக்காக என் தோழியிடமிருந்து ஒரு செய்தி கொண்டுவந்திருக்கிறேன்'' என்றாள் அவள். தன்னிலைமறந்த எழிலாடன் மிகுந்த எதிர் பார்ப்புடன் நிலைகொள்ளாமல் தவித்தான். அவன் தவிப்பதைக் கண்ட தோழி மனதிற்குள் ரசித்தவாறே “தலைவனே, இன்று என் தோழி உங்களைக் காண வராததால் நீங்கள் எதிர்பார்த்த இன்பம் வேண்டுமென்றால் இல்லாமல் போகலாம். ஆனால் என்தோழி தங்களிடம் கொண்ட நேசம் கடுகளவாவது குறையுமா? எப்படி யாரும் அறியாமல் இரவில் பொழிந்த மழை அடுத்தநாள் அருவியின் ஒலியால் அறியப்படுவது போல, இன்று இரவில் தங்களின் சந்திப்பு தாங்கள் நினைப்பதுபோல நிறைவேறினால் பகலில் தலைவியின் மேனியின் வேறுபாட்டைமக்கள் அறியாமற்போவார்களா? அவர்கள் இதைப்பற்றிப் பழித்துப் பேசத் தொடங்கிவிடுவார்களே. ஆகவேதான் இச்சந்திப்பு வேண்டாம்” என மறைமுகமாக எழிலாடனிடம் தன் தோழியின் இயலாமையை உணர்த்தினாள்.

எழிலாடன் அவளின் எந்தப்பதிலிற்கும் சமாதானமாகாமல் கருங்குழலி வராதது குறித்துப் பெருத்த ஏமாற்றத்துடன் மௌனமாக நின்றிருந்தான். அவளின் தோழி செய்வதறியாது எழிலாடனிடம் தன்தோழி இந்தப் பிரிவால் எவ்வளவு வாட்டத்துடன் இருக்கிறாள் என்று கூற, அவன், “இந்த இரவு முழுவதும் என்னுடன் தனிமையில் அவள் இருப்பதான எதிர்பார்ப்பு, அவள் வராதது குறித்து நான் கொண்ட ஏமாற்றம் அனைத்தையும் உன் தோழியிடம் எடுத்துக் கூற மறந்துவிடாதே'' என்று எரிச்சலுடன் கூறினான். தோழி மிகுந்த தயக்கத்துடன் எழிலாடனிடம் விடைபெற நினைக்கும்போது தூரத்தே ஒரு பெண் தலைவிரிகோலத்தில் திருச்செங்குன்றினை நோக்கிச் செல்வதைக் கண்டு துணுக்குற்றாள். “யார்அது?” என்று எழிலாடனிடம் கேட்க அவனும் “அந்தப் பெண் யார் என்று எனக்கும் தெரியாது. பாவம் அபலை போல் தெரிகிறது! இருவரும் போய் என்னவென்று விசாரித்தறிந்து உதவி தேவைப்படின் உடனிருந்து உதவுவோம்” என்றான்.

அப்போது அங்கு வந்த குறவர்கள் கண்ணகியைப் பார்த்து “மலைவேங்கை மரத்து நிழலில் நிற்கும் தாங்கள் எங்கள் குலக்கடவுளாம் வள்ளிபோலத் தோற்றமளிக்கிறீர்களே! இடது முலையிழந்து சொல்லொணாச் சோகத்தில் இருக்கும் தங்களைக் காணப் பெருந்துயருற்றோம். தாங்கள் யார்?” என்று வினவ கண்ணகி தன் கணவன் கோவலனை இழந்து இங்கு வந்ததாகக் கூறுகிறாள். அன்றைய பகல் பொழுது கழிந்தவுடன் தெய்வ வடிவோடு அங்கு வந்த கோவலனைக் கண்டு அகமகிழ்ந்தாள் கண்ணகி. அனைத்து விண்ணவர்களும் பூ மாரிப் பொழிய, முப்பது முக்கோடி தேவர்களின் வாழ்த்துக் களுடன் கோவலனுடன் விமானமேறி விண்ணுலகம் எய்தினாள். இவை அனைத்தையும் திகைப்புடன் நேரில் கண்ட மலைக்குறவர்கள் இந்த மகராசியே தாங்கள் வணங்கும் தெய்வம் என்று கைகளைக் குவித்துப் பக்தியுடன் வழிபட்டுக் குரவையாடி அவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.

எழில் கொஞ்சும் மலையினூடே ஊடறுத்துக் கொண்டு பாயும் பேரியாற்றின் கரையில் மணல்மிக்க இடத்தில் ஊர்உலாவந்த சேரன் தன் படைகளுடன் தங்கினான். குன்றக்குரவை நிகழ்த்தும் மகளிரின் பாடல்கள் காற்றில் தவழ்ந்துவந்தன. அவர்களின் குலதெய்வமான வேலனைப் பற்றிப் புகழ்ந்துபாடும் பாடலிற்கு இசைவாகத் தூரத்தே தினைமாவு இடிப் போருடைய உலக்கைப்பாட்டும் இணைந்து ஒலித்தது. மன்னரைக் காணவந்த மக்களில் ஒருவன் சேரமன்னனிடம் “வேந்தர்க்கெல்லாம் வேந்தே, வாழ்க நின்கொற்றம். வாழ்க பல்லாண்டு. நாங்கள் வாழும் திருச்செங்குன்றமலையில் இருக்கும் வேங்கைமரத்தின் கீழே மங்கை ஒருத்தியைக் கண்டோம். ஒருமுலை இழந்த வளாய்ப் பெருந்துயரத்தோடு நின்றிருந்தாள்.



அப்போது விண்ணுலகத் தேவர்கள் அங்குவந்து அம்மங்கையின் காதற்கொழுநனைக்காட்டி, அவளையும் உடன் அழைத்துக்கொண்டு எங்களின் கண்முன்னே விண்ணுலகம் சென்றார்கள். தேவரீர் நாட்டில் நிகழ்ந்த இதனைத் தாங்கள் அறிந்தருளல்வேண்டும்" என்று பணிவாகக் கூறினான். இதுகுறித்துச் சாத்தனார் ஏற்கனவே அறிந்திருந்தபடியால், சேரமன்னன் செங்குட்டுவனை நோக்கிக் கண்ணகிக்கு நடந்த அனைத்தையும் கூறினார். அதைக் கேட்ட மன்னன் சாத்தனாரிடம் "நீதிதவறிய பாண்டியன் தன்னுயிர் நீத்தவுடன் உடன்உயிர்நீத்த அவனுடைய கோப்பெருந்தேவி ஒருபுறம், நம் நாடு நோக்கிவந்த பத்தினித்தெய்வம் கண்ணகி மறுபுறம். இந்த இருவரில் யார் மிகவும் வியக்கத்தக்கவர்?" என்று வினவ அவரும் "நம் நாட்டை நோக்கிவந்த அந்தப் பத்தினி கண்ணகியை வழிபடுதலே உத்தமம்" என்றார். மன்னனும் இதனைக் கேட்டு அகமகிழ்ந்து "அந்தப்பத்தினித் தெய்வத்திற்கு நடுகல்லைப் பொதியமலையில் கொணர்ந்து காவிரியில் நீராட்டிப் புனிதப்படுத்துவதைப் பார்க்கிலும் இமயத்திலிருந்து கொணர்ந்து கங்கையில் நீராட்டித் தூய்மை செய்வதே சாலச்சிறந்தது. பெருவீரர்களாகிய சேரர்களின் வழிவந்த நமக்கு இதுமேலும் பெருமைகூட்டும் சிறப்பைத் தரும்" என்றான். இதைக் கேட்ட மன்னரின் சேனாதிபதி வில்லவன்கோதை, "நம்மோடு போர்புரிந்து மீன்கொடியையும் புலிக்கொடியையும் போர்க்களத்திலேயே விட்டு ஓடிய அவர்களை நான் இன்னும் மறக்கவில்லை வேந்தே. அதைப்போல, கோமகளாய் விளங்கிய தம் தாயைக் கங்கையில் தீர்த்தமாட எதிர்த்த ஆரியவரசரால் நம்மை வெற்றிபெறத் துளியும் துணிவிருக்காது'' என்றான். அனைத்தையும் மிகக்கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர் அழும்பிவேல் போர் பற்றி உடனே பறையறைந்து தெரிவிக்க மன்னரின் அனுமதிக்காகக் காத்திருந்தார்.

பெரும் பரிவாரங்களுடன் யானையின்மேல் முரசேற்றப்பட்டு சேரன்செங்குட்டுவனின் வடநாட்டுயாத்திரைபற்றியும், பகையரசர்கள் வந்து பணியாவிட்டால் அவர்களுக்கு விளையும் கேடுகளைப் பற்றியும் அறிவித்தார்கள். சேரனும் தம்மை இகழ்ந்து பேசிய வடதிசைமன்னர்களது முடித்தலையில் பத்தினிக்கடவுளின் நடுகல்லை ஏற்றிக்கொண்டுவருவேன் என்று சூளுரைத்தான். இதைக்கேட்ட அரண்மனை சோதிடன் மௌத்திகன் மன்னரிடம் "வேந்தர்க்கெல்லாம் வேந்தே, இதுவே உன் வெற்றிக்கான நன்முகூர்த்தம்'' என்று கட்டியம் கூற போர்வீரர்கள் மிகுந்த ஆரவாரத்துடன் பூமியே பிளக்கும் வண்ணம் ஆர்ப்பரித்து முரசு ஒலித்தார்கள்.

இவை அனைத்தையும் கேட்டறிந்த கண்ணகியின் தோழியும், பாசண்டசாத்தானின் மனைவியுமான தேவந்தி சேரமன்னரைக் கண்டு கண்ணகியின் பெருமைகளைக் கூறித் தான் அவளுடைய நெருங்கிய தோழி என்று அறிமுகப் படுத்திக்கொண்டாள். ஒருசமயம் கோவலன் கண்ணகியைவிட்டு மாதவியுடன் இருந்த காலத்தில் கண்ணகிக்குத் துணையாக இருந்தவள்தான் இந்தத் தேவந்தி. தன் உள்ளத்திலே ஒன்றியிருந்த அவளின் பிரிந்து போன கணவன் மீண்டும் தன்னுடன் இணைய வேண்டி, புனிதநீராடும்போது கண்ணகியை முதன்முதலாகச் சந்தித்தாள். கண்ணகியின் நிலையறிந்து ஆற்றில் அறுகம்புல், சிறுபூ, நெல் முதலியவற்றைத் தூவி, கண்ணகியையும் உடன் நீராடச் செய்து கோவலனுடன் மீண்டும் வாழ்வாங்குவாழ்வாய் என்று வாழ்த்தினாள். தன்துயரங்களிலிருந்து மீண்டெழத் தனக்காக வேண்டும் தேவந்தியைத் தன் உற்ற தோழியாய் அக்கணமே ஏற்றுக்கொண்ட கண்ணகி கானல் நீரினைக் கண்டு திசைமாறிப்போன வழிப்போக்கனின் சமாதானத்துடன் அவளின் கைகளை எடுத்துக்கண்களில் ஒற்றிக்கொண்டாள். இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருந்தனர்.

போருக்கான ஆயத்தப்பாட்டைத் தெரிவித்த அன்றிரவில் சேர மன்னன் அகமகிழ்ந்து தன்னுடன் போருக்குப் புறப்படத் தயார் நிலையில் இருக்கும் தானைகளுக்கும், தானைத் தலைவர் களுக்கும் விருந்து கொடுத்து உபசரித்தான். மறுநாள் வஞ்சி மாலை தரித்து நெடிய யாத்திரைக்குத் தயாரானான். நாவை அடக்காது

இகழ்ந்துரையாடிய கனகன், விசயனென்ற இரண்டு வடநாட்டு அரசர்களுக்குத் தகுந்த பாடம் கற்பித்து நம் தமிழனின்; வீரத்தைக் காண்பிப்பதற்காகச் சேர மன்னன் தன் படையைப் பகைவரை நோக்கி வழிநடத்தினான். இதை எப்படியோ அறிந்துகொண்ட கனகனும் விசயனும் வடநாட்டு மன்னர்களான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்ற பல மன்னர்களின் துணைகொண்டு சேரனை எதிர்க்கப் பெரும் படையுடன் ஆயத்தமானான். யானையின் பெருங்கூட்டமெனத் திரண்டு வந்த கனக விசய போர் வீரர்களின் முன் சேரனின் படைகள் அடங்க மறுக்கும் சிங்கமென அவர்களை நோக்கி வெகுண்டு சீறிப்பாய்ந்தன. சேர மன்னரின் மார்பில் பூசிய சந்தனம் வியர்வையின் ஈரத்துடன் அதே பொலிவில் இருந்தது. போரில் எழுந்த புழுதி யானைகளின் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் நாக்குகளிலும், போர்க்கொடிகளில் கட்டிய சங்குகளின் நாக்குகளிலும் பரவிப் புகுந்து ஒலிக்காவண்ணம் செய்துவிட்டது. எருமை ஊர்தியில் கூற்றுவனென எதிரிகளுக்குத் தோற்றமளித்து மதி கலங்கச் செய்த சேரனின் படைகள் இறுதியில் வெற்றி வாகை சூடியது. கனகனும் விசயனும் தேர்வீரர்கள் ஐம்பத்தி இருவருடன் சிறையெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் துணையாக வந்த மற்ற மன்னர்கள் ஜைன முனிவர்களாகவும், பாடகர்களாகவும், வாத்தியக்காரர்களாகவும் மாறுவேடம் தரித்து யாருமறியாமல் பல இடங்களில் பதுங்கிக் கொண்டார்கள். சேர மன்னன் செங்குட்டு வனிற்கும் கனக விசயனிற்கும் நடந்த போர் பதினெட்டே நாழிகையில் முடிவடைந்தது.

சேரன் சூளுரைத்ததிற்கிணங்க பத்தினிக் கடவுளுக்கான நடுகல்லை இமயமலையிலிருந்து எடுக்கச்செய்து கனக விசய மன்னர்களின் கதிர்முடி மேல் ஏற்றிக்கொண்டு அதைப் புனித நீராட்ட கங்கையாற்றின் வடக்குத் திசையை வந்தடைந்தான். முறைப்படி ஆகம விதிகளுடன் கங்கை நீரில் நீராட்டி அனைத்து வீரர்களுக்கும் அவர்களின் மாபெரும் வெற்றிக்குப் பரிசாகப் பொன்னால் ஆன வாகைப் பூக்களை வெகுமதியளித்து மகிழ்ந்தான்.

இமயத்திலிருந்து கொண்டு வந்த நடுகல்லில் கண்ணகியின் உருவத்தைப் பொறித்து அணிகலன்கள் பூட்டி அலங்கரித்து எட்டு திக்கு தேவதைகளுக்குமான வேள்விகள் செய்து அந்த விழாவைச் சேர மன்னன் மாபெரும் உற்சவமாகக் கொண்டாடினான். மாடலன் என்ற மறையோனின் அறிவுரைப்படி சேர மன்னன் சினம் தணிந்து போரில் சிறை பிடித்து வஞ்சிமா நகருக்குக் கொண்டு வந்த கனக விசய மன்னர்களை மன்னித்துச் சிறையிலிருந்து விடுவித்தான். கண்ணகிக்குக் கோயில் எடுத்த பெருவிழாவில் கனக விசயர், இலங்கை மன்னன், மாழுவ மன்னன், குடகக் கொங்கர் முதலானோர் கலந்து சிறப்பு செய்தனர். அவனுக்குக் கப்பம் செலுத்தும் அனைத்துக் குறுநில மன்னர்களையும் அழைத்துத் தத்தம் திரைகளைக் கொண்டு வந்து கொடுத்துக் கண்ணகியை வணங்கும்படிச் செய்தான். கண்ணகியின் நடுகல்லிற்குத் தினசரி பூசைசெய்ய அவளின் உற்ற தோழியான தேவந்தியையே நியமித்தான்.

தூரத்தே சிரிப்பொலி கேட்டது. எழிலாடனும், கருங்குழலியும் கைகளைக் கோர்த்துக்கொண்டு அங்கு வந்துகொண்டிருந்தார்கள். இருவரும் முதலில் தேவந்தியிடம் சிரம் தாழ்த்தித் தங்களின் மரியாதையைச் செலுத்தினார்கள். எழிலாடன் தன் காதலியிடம் முன்பொரு நாள் அவளின் தோழி தன்னிடம் தூது வந்ததையும், தான் எதிர்பார்த்து ஏமாந்ததையும், தோழி விடை பெற்றுச் செல்லும்போது ஒரு பெண் தலைவிரி கோலத்தில் திருச்செங்குன்றினில் சென்றதைக் கண்டதும், அந்தப் புனிதவதிதான் தாங்கள் இப்போது வழிபட வந்திருக்கும் கற்புக்கரசியாம் கண்ணகி என்றும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தான். இவையனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த தேவந்தி தன் தோழியுடன் வாழ்ந்த நாட்களை மீட்டுக்கொண்டு வந்து மீண்டு மொருமுறை வாழ ஆரம்பித்தாள். ஒருநாள் கண்ணகி கோவலனைப் பற்றித் தான் கண்ட துர்கனவினைத் தேவந்தியிடம் கூறி மறுகியபோது அக்கனவைத் தான் பழித்ததிற்காக இப்போது மிகவும் வருந்தி நெஞ்சு வெடிக்கும் சோகத்துடன் கண்ணகியின் சிலைமுன்பு கவிழ்ந்து கண்கள் மூடிக் கண்ணீர் விட்டழுதாள். அவளின் தோளினை ஆறுதலுடன் ஒரு கை அரவணைக்கும் உணர்வு மேலிட திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து கண்ணகி சிலையை உற்றுப் பார்த்தாள். மீண்டும் கண்ணகி உயிர்த்தெழுந்து தான் மட்டும் அறியும் பொருட்டு ஆறுதலாகப் புன்னகைத்தது போலத் தோன்றியது தேவந்திக்கு. ■

கட்டுரை

தொடர் - 6

• கரிகாலன்

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# தேநீர் சாலை







## அசுரன் – கலையும், விடுதலை எழுச்சியும்

சுரா எனும் பானத்தை அருந்திக் களித்தோர் சுரர். பிறர் அசுரர். சுரர் ஆரியர். அசுரர் திராவிடர். இந்தியாவின் முரண் ஆரிய திராவிட முரண். ஆரிய புராணங்களின் நாயகர்கள், அதாவது அவதாரங்கள் அனைவரும் சுரர்களே!

இவர்களால் வதம் செய்யப்பட்டோரே அசுரர்!

இப்படி புராணங்களில் அசுரர்களை வதம் செய்யும் புனைவுகளை உருவாக்கி, திராவிடர்களை மனத்தளவில் பலவீனமாக்கியது போதவில்லை. அவர்களைச் சாதியாலும் பிளவுபடுத்தினார்கள். பிறகு அசுரர்கள் சாதிகளாகப் பிரிந்து தங்களுக்குள் அடித்துக்கொண்டும், வெட்டிக்கொண்டும் அழிந்தார்கள்!

இரவு நேரம். ஒரு அழகிய ஓடை. அதில் நிலவு நகர்ந்து மிதக்கிறது. எத்தனை மென்மையானவர் பாலுமகேந்திரா! இந்தக் காட்சியில் உலகத்துக் காதலை அவர் கொட்டியிருக்கக் கூடும்.

அவரது பள்ளியிலிருந்து வந்தவர் வெற்றிமாறன். அந்த நிலவைப் பிளந்து ஓடுகிறார்கள் சிவசாமியும் (தனுஷ்), அவரது மகன் சிதம்பரமும் (கென் கருணாஸ்)! நிலாவோடு நாமும் பதறுகிறோம்.

தீராத வன்முறையின் கதைகளைச் சொல்லி அலுக்கவே இல்லை வெ. மாறனுக்கு!

அவரைச் சொல்லிக் குற்றமில்லை. பெண்டாட்டி, பிள்ளைகளோடு யாருடைய கண்ணையும் உறுத்தாமல், பதுங்கிப் பதுங்கியாவது அமைதியாக வாழ்ந்துவிட மாட்டோமா? எனச் சாதுவாக வாழும் சிவசாமிகளைத்தான் இச்சாதிய சமூகம் சீண்டி விளையாடுகிறது.

தொட்டு விளையாடலாம். சுட்டு விளையாண்டால் என் செய்வார்கள்? சக மனிதனோடு அன்பாகப் பழக விரும்பும் மனிதன், சுயமரியாதையோடும் பழக விரும்புவது தப்பா?

மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று; இமை திற; எழுந்து நன்றாய் எண்ணுவாய், தோளை உயர்த்துச் சுடர் முகம் தூக்கு! மீசையை முறுக்கி மேலே ஏற்று! என்று பாரதிதாசன் பாடியது வன்முறை என்றால், வெற்றிமாறனால் மட்டும் எப்படி அமைதியை எழுத முடியும்?

கீழடி தமிழ்ப் பெருமையா?திராவிடப் பெருமையா? பஞ்சாயத்தைப் பிறகு பார்த்துக் கொள்வோம். கீழடியில் தமிழர் அணிந்த அணிகலன்களைக் காட்டி, ஆஹா! முன்தோன்றிய மூத்தகுடியின் நாகரீகம் பார்த்தாயா? எனப் பெருமிதமடைந்த நினைவுகளைக் குலைத்து, இதோ உன் அருகதையைப் பார்! என அசுரனைக் காட்டுகிறார் வெற்றி.

கீழடிக்குச் சற்று தெற்கேதான் இந்தக் கதை நிகழ்கிறது. தமிழன் எத்தனை அணிமணிகளைப் பூண்டு என்ன பயன்?

பள்ளிக்கூடம் போகும் ஒரு சிறுமி காலில் செருப்பணிந்துபோக முடியவில்லை. திராவிடச்சியாக இருந்தாலும், தமிழச்சியாக இருந்தாலும் அவள் தலித். தாழ்த்தப்பட்டவள்.

செருப்பைக் கழற்றி அவள் தலையில் சுமத்தி, ஊரே பார்க்க அவளை அடித்து அவமானப்படுத்தி! ச்சே, நெஞ்சுக்குள் நெருப்பை மூட்டி உறங்க முடியாமல் செய்கிறார் வெற்றிமாறன்.

வடபுலத்தவர் தலையில் இமையத்தைப் பெயர்த்துக் கண்ணகிக்குச் சிலைசெய்த தமிழ்ப் பெருமிதத்தைப் பகடி செய்யும் காட்சிகள்!

எப்போதும் தமிழனுக்கு வடக்கூரான்தானே வில்லன். வடக்கூரானிடம் செல்வம், ஆள், சேனை, அம்பு, அதிகாரம் எல்லாம் இருக்கிறது.

தெக்கூரான் காணியால் குறைந்தவனாக இருக்கலாம். மானம், சூடு, சுரணை நிரம்பப் பெற்றவன். தாய்மொழிக்கு ஒரு ஊறு நேர்ந்தாலே பச்சை ரத்தம் பரிமாறச் சொன்னவன் நம் பாவேந்தன்.



பெற்ற தாயை கண் முன்னே ஒருவன் அடித்தால் பிள்ளை என்ன செய்வான்.. தாயை, தாய் நிலத்தை ஒருவன் கைவைத்தால் வைத்த கையை வெட்டுவதுதானே முறை. தலையை வெட்டி எறிகிறார்கள்.

ரத்தத்தைப் பார்த்தால் எனக்கு மயக்கம் வரும். ஒரு இனத்தைத் தலையெடுக்கவே விடுவதில்லை என அழித்தால், அவர்கள் விஸ்வரூபம் கொள்வதும், எதிரியைத் தலையெடுப்பதும் இயல்புதானே.

தனுஷ், தனுஷின் பிள்ளைகள் ஆதிக்க சாதியினரின் தலையை வெட்டும்போதெல்லாம் ரத்தம் என்பது விடுதலையின் நிறமாக ஒளிர்கிறது. அதன் மணம் சுயமரியாதையின் சுகந்தமாகிறது!

கலை என்பது கனவு காணச் செய்வதல்ல. அது அதிகாரச் சமூகத்தைத் தூக்கமிழக்கச் செய்வது.

இந்த உலகத்தில் மானத்தோடும் ரோஷத்தோடும் வாழப்பழக்குவது.

அடிமைத்தனம் திணிக்கப்படும்போதெல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயுதங்களைத் தருவது.

'திருப்பி அடி' பிறகு 'படி' என்பதே அசுரனின் வேதம்.

ஆதிக்க சாதித் திமிரின் ஆணிவேரை அறுக்கும் அரிவாள் அசுரன்.

அசுரன் தென்மாவட்டத்தில் அறுபதுகளில் நடந்த தீண்டாமைக் கொடுமைகளை வெக்கை நாவலை முன்வைத்து உருவாக்கிய படம். இந்தப் படத்தில் மோதிக்கொள்கிற இரண்டு இனக்குழுக்களும் வடமாவட்டத்தில் இல்லை. ஆனாலும் தீண்டாமை இல்லை என்று சொல்ல

முடியாதல்லவா. அசுரன் தலித் எழுச்சியைப் பேசுகிற படம். ஆனால் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும் கைத்தட்டி ஆரவாரம் செய்கிறது.

கடந்த சில ஆண்டுகளுக்குமுன் பத்மாவதி என ஒரு இந்திப்படம். அதில் பத்மாவதி எனும் ராஜபுத்ர ராணியை இழிவுபடுத்தியிருக்கிறார்கள் எனப் பெரிய ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது. மத அடிப்படைவாதிகள் படம் ஓடிய திரையரங்குகளுக்குத் தீ வைத்ததெல்லாம் நடந்தது.

ஆனால், அசுரனைத் தமிழர்கள் ஆரவாரமாக வரவேற்கிறார்கள். இதுதான் தமிழ் நிலத்தின் பண்பாடு. இந்தப் பண்பாடு பன்னெடுங்காலத்துக்கு முன்பே உருவாகிச் செழித்தது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' எனக் கணியன் பூங்குன்றன் அடித்தளமிட்ட பண்பாடு இது.

'பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும்' என வள்ளுவன் செழுமைப்படுத்திய பண்பாடு.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே' எனத் திருமூலர் எழுப்பிய பண்பாடு.

'கலையுரைத்த கற்பனையை நிலை எனக் கொண்டாடும் கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடி போக!' என்று வள்ளலார் வளர்த்த பண்பாடு.

இன்னும் பாரதி, பாரதிதாசன், அயோத்திதாசப் பண்டிதர், ரெட்டைமலை சீனிவாசன், பெரியார் எனத் தமிழ்ச்சான்றோர் உருவாக்கிய பண்பாடு.

ஒரு தலித் ஹீரோ. அவன் ஆதிக்க சாதியின் திமிரை அறுவடை செய்கிறான். எவ்வித மனத்தடையுமின்றி இந்த வதங்களைத் தமிழ்ச் சமூகம் வரவேற்கிறது.

இது உண்மையில் மகிழ்ச்சியை அளிக்கும் விதமாக இருக்கிறது. இந்தப் படத்தின் வெற்றி இன்னும்கூட நம் சமூகம் நாகரீகத்தின் திசைவழியில் செல்லும் என்கிற நம்பிக்கையை அளிக்கிறது.

சாதி என்கிற அரசியல் வாசிப்பைக் கடந்து உயிர்த்துடிப்பான ஒரு தந்தையின் கதையாகவும் அசுரனை வாசிக்க முடியும்.

தியேட்டரில் கத்தினால் எரிச்சலடைவேன். அசுரனில் தனுஷ் அவரது இரண்டு மகன்கள் மூவருமே சம்பவம் செய்கிறார்கள். அப்போதெல்லாம் பயங்கரமாகக் கத்துகிறார்கள். அவர்கள் தலித்துகள் மட்டுமில்லை. வெற்றிமாறன் காட்டுவதுபோல் இங்கு ஒரு சேஷாத்ரி மட்டுமில்லை. தீண்டாமை வன்கொடுமை ஒழிய வேண்டுமென ஆர்வம் கொள்ளும் தமிழ்ச் சமூகத்தின் ஆரவாரமாகவே இதை ரசிக்கிறேன்!

'நம்ம புள்ளிங்கோ எல்லாம் வெறித்தனம்!' என்று சொல்வதே காலத்தின் மொழியாக இருக்கும்!

## அம்மா

எங்கள் அம்மாக்களுக்குக் காஃபி போடத்தெரியாது. அப்போது எங்களுடைய வீடுகளில் காஃபி ஃபில்டரே இருந்ததில்லை. வெந்நீரில் காஃபித்தூளைக் கொட்டி அம்மா டிகாஷனைத் தயாரிப்பாள். மார்கழிக்குளிரில் அது எங்களுக்குத் தேவாமிர்தமாக இருந்தது.

முன்பாக எங்கள் அம்மாக்கள் புளிகொண்டு துலக்கிய பித்தளைச் செம்புகளில் பால் கறக்க தொழுவம் செல்வார்கள். கன்றை அவிழ்த்து, பால் குடிக்கச் செய்வார்கள்.

அவை மடியை முட்டிப் பாலைச் சுரக்க வைக்கும். எங்கள் அம்மாக்கள் போலவே அந்தப் பசுக்களும் தனது கன்றின்மீது அன்பைப் பொழியக் கூடியவை. செம்பு நிறையும் வேளையில் பசு பாலை அடக்கிக் கொள்ளும். அம்மாவும் எங்களுக்குப் பால் கொடுத்தவள்தானே. சரியான திருட்டுப் பசு என்று செல்லமாகக் கடிந்தபடி கன்றை அவிழ்த்துவிடுவாள். முட்டி முட்டிக் குடித்த கன்று பிறகு தோட்டமெங்கும் குதித்தோடும்.

எங்கள் அம்மாக்கள் சினிமாவில் வந்த பண்டரிபாய், கே.ஆர்.விஜயா, சுஜாதா அம்மாக்களைப்போல அவ்வளவு அழகானவர்களோ, நாசுக்கானவர்களோ, புத்திசாலிகளோ அல்லர். அவர்கள் ஒரு பஸ் ஏறிப் பக்கத்து நகருக்குப் போகத் தெரியாதவர்கள். நாங்கள் வடக்குவெளியில் கிளிமூக்கு மாங்காய்த் திருடி மண்ணில் விழுந்தோம். ஆர்த்தோ படிக்காத அம்மாக்கள் நல்லெண்ணெயைத் தடவிக் காலை நீவிச் சுளுக்கெடுத்தார்கள். வீங்கிய தசையில் வாதையிலையால் பற்று போட்டுவிட்டார்கள்.

நாகரிகம் அண்டாத வீடுகளில் சதாகாலம் வேர்வையோடும் அழுக்கோடும் வளைய வந்த எங்கள் அம்மாக்களுக்கு ஒரு புடவை எடுக்கத் தெரியாது. கடைக்காரன் கலைத்துப்போட்ட புடவைகளின் முன்னால், திருவிழாவின் மிட்டாய்க் கடைகளில், எம் சிறிய காசுக்கு எதை வாங்குவதெனத் தெரியாது திகைத்து நின்றோமே! எங்கள் அம்மாக்களும் அப்படித்தான், நீங்களே ஏதாவது எடுங்க! என்பார்கள் அப்பாவைப் பார்த்து.

அப்பா எடுத்த சிவப்புக்கலரோ நீலக்கலரோ, அதை எந்தப் புகாருமில்லாமல் சாமி தெருவுக்கு வருகிற நாளில் கட்டிக்கொண்டு மாவிளக்கு பிசைந்தார்கள். 'என்னத்த இந்தத் தரமும் மாமாவுக்கு நீலக்கலர்தான் கிடைத்ததா?' எனக் கிண்டல் செய்தார்கள் அண்ணிகள்! எங்கள் முட்டை மார்க்கைப் பார்த்து, 'உங்க அம்மாகிட்ட கொடுங்க! பொறிச்சுக் கொடுப்பாங்க!' என்றார் கணக்கு வாத்தியார். 'வருடம் முழுசும் எம்பிள்ளைக்கு நீ என்னதான் சொல்லிக் கொடுத்த?' என்று அவரிடம் சண்டைக்குப் போகமாட்டாள் அம்மா! அவளுக்கும் உலகில் ஒரு அடிமை இருந்ததென்றால் அது மாரியாத்தாதான்! குளித்துவிட்டு ஈரச்சேலையோடு வரும்போது அதைத்தான் திட்டுவாள்!

எங்கள் எல்லாத் தவறுகளுக்கும் ஏழரைச்சனியின் சதியே காரணமெனக் கிளிஜோஸ்யக்காரன் சொன்னதை நம்பிய அப்பாவி அம்மாக்கள்!

அமாவாசைக்கு ஆடிப்பெருக்குக்கென இட்லி சுட்டுத் தரும் அவர்களிடம் பூரி சுட்டுத் தரக் கேட்போம். காக்கா முட்ட ஆயா மாதிரி அவர்களும் சுட்டுக் கொடுப்பார்கள். வாணலியில் புஸ்ஸென்று உப்பப்போகும் பூரிக்காக அடுப்புக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்போம். அது அப்பளம்போலப் பொறிந்தது. எடுத்துப் பிய்த்தபோது ஏதோ கோதுமை மாவில் செய்த அடைபோல இருந்தது. அப்பா அதன் சுவையைப் பாராட்டிக்கொண்டே சாப்பிடுவார்.

டவுனுக்குப் போனால் கிருஷ்ணபவனில் எங்களுக்கு மட்டும் பூரி வாங்கிக் கொடுத்து, வெறும் பில்லை மட்டுமே கொடுத்த அப்பா அவர்!

பாவம், என்னதான் தெரிந்திருந்தது எங்கள் அம்மாக்களுக்கு? விசேடக் காலங்களில் கொஞ்சம் பாண்ஸ் பூசி, சாமந்தியோ, டிசம்பர் பூவோ சூடி, உதட்டுக்குமேலே அரும்பியிருந்த பூனைமுடிகளை உள்ளங்கையளவு கண்ணாடியில் கவலையோடு பார்த்தவர்கள்.

எப்போதோ அவள் கோவித்துக்கொண்டு பிறந்தவீடு போனாள். பெரியம்மாவோ சித்தியோ சோறுபோட்டார்கள். எங்கள் வயிறு நிறைந்திருந்தது. மனதில் அம்மாவின் கண்ணீர் விழுந்தபடி இருந்தது. அப்பா கன்றைக் கட்டாமல் விட்டிருந்தார். எங்கள் மாடங்களில் நல்ல விளக்கெரியவில்லை. அடுப்பை ஊதி ஊதிப் பார்த்த அப்பாவால் பற்றவைக்க முடியவில்லை. முருகேசன் மாமா கடையில் பொட்டுக் கடலையை வாங்கி வந்து கொடுத்தார்.

தாத்தாவோடு மறுநாள் வந்தாள் அம்மா. தொழுவத்தில் பசு அம்மாவென்று கத்தியது. பெரியப்பாவிடம் 'மகாலஷ்மியைக் கொடுத்திருக்கோம்!' என்றார் தாத்தா. 'எல்லாம் சரியாயிடும் மாமா!' என்றார் பெரியப்பா!

எங்கள் அடுப்பில் தீ எரிந்தது!



அகழ்வும் நிகழ்வும்

தொடர் - 21

• முகம்மது பாட்சா

# மொழியாளர் அ.அய்யாசாமி

சமீபகாலமாக ஓடிக்கொண்டிருக்கும் மிகப்பெரும் இலக்கிய சர்ச்சை 'இலக்கியத்திற்குள், அரசியல் இருக்கலாமா? இருக்கக்கூடாதா' என்பதுதான். இப்படியொரு சர்ச்சைக்குள் சிக்கிக்கொள்கிற இலக்கியவாதிகளாகட்டும் மறுதலிக்கும் இலக்கியவாதிகளாகட்டும் ஏதாவது ஓர் அரசியலின் பின்னணியில் நிச்சயம் சிக்கி இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதில் வேடிக்கை என்னவென்றால் இங்கு நான்தான் பெரியவன் என்ற இலக்கிய அரசியலொன்றும் ஓடிக்கொண்டேயிருக்கும்.

இலக்கியங்கள் காதலையும் வாழ்வியலையும் மட்டுமே பேசிக்கொண்டிருந்தால், அது பண்பாட்டுக் கூறுகளை மட்டுமே, சுற்றி வந்து கொண்டிருக்கும். 1972ஆம் ஆண்டு மும்பையில் தோற்றுவிக்கப்பட்ட 'தலித் சிறுத்தைகள்' என்ற அரசியல் இயக்கம், தலித் இலக்கியவாதிகளாலேயே உருவாக்கப்பட்டது என்று அவர்கள் அறிவார்களா? திராவிட அரசியல் ஒரு புரட்சியை நடத்திக்காட்ட கையில் எடுத்த மிகப்பெரிய ஆயுதம் இலக்கியம்தான். பக்தி இலக்கியத்திலிருந்து அரசியல் இலக்கியத்திற்கு மக்களை மடை மாற்றம் செய்ததில் திராவிட எழுத்துக்களுக்குப் பெரும் பங்குண்டு. பழம் இலக்கியங்களைக் கையில் வைத்துக்கொண்டு விமர்சனப் பண்பாட்டை வளர்த்ததிலும் அவர்களின் பங்கு அளப்பரியது.

இலக்கியத்தில் பேசப்படும் அரசியல், காலப் பதிவுகளாக ஒரு வரலாற்றை அப்படியே, வருங்காலத்திற்காகச் சேமித்து வைத்திருக்கும். வரலாற்றைத் திரித்து எழுதும், சில கூறற்ற அடிவருடி இலக்கியவாதிகளின் முகங்களைக் கிழிப்பதும் கூட இங்கு எதிர்வினை இலக்கியங்கள்தான். அரசியல் இலக்கியங்களை மிக முக்கியமாகக் கையில் எடுத்துக்கொண்டு அதில் அளப்பரிய சாதனைகளையும் நிகழ்த்திய அ.அய்யாசாமி அவர்களை நாம் இங்கு நினைவில் கொண்டுவருவது மிகவும் அவசியம் எனக் கருதுகிறேன்.




அ.அய்யாசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டியில் 1940ஆம் ஆண்டு அமிர்தலிங்கம், இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்று, ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றவும் தொடங்கினார். பின்னர், தனது மொழியாளுமையால் தமிழ் இலக்கியத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றார். அது மட்டுமில்லாமல், எத்தியோப்பியாவில் ஐந்து ஆண்டுகள் ஆங்கிலப் பேராசிரியராகவும் பணியாற்றியவர்.

மொழியாக்கம், கட்டுரை, கவிதைகள் மற்றும் கதைகளென்று இலக்கியத்தின் எல்லாத் தடங்களிலும் கால் பதித்த ஓர் எளிமையான மனிதரென்று அ.அய்யாசாமி அவர்களைச் சொல்லலாம்.

இவரது திறமைக்குச் சான்றுகளாக விளங்கியது இவரது எழுத்துக்கள் மட்டுமில்லை. இவரிடம் கல்விப் பயின்ற மாணாக்கர்களும்தான். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் செயலாளராகப் பணியாற்றிய ஐ.ஏ.எஸ் அதிகாரி கி.இராஜ மாணிக்கம், விழிகள் பதிப்பகம் வேணுகோபால்.. இவர்கள் எல்லோருமே இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரிக் காலத்திலேயே அண்ணாவின் எழுத்துக்களாலும் திராவிடச் சிந்தனை எழுத்துக்களாலும் கவரப்பட்டவர். அதனைப் பற்றி அவரே சொல்கிறார், 'நான் நாளிதழ்களும் கிழமையிதழ்களும் படிக்கத்தொடங்கி அரசியலைப் புரிந்துகொள்ள முற்பட்ட

பருவத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டுவிட்டது. கழக இதழ்கள் எங்கள் ஊருக்கு வரத்தொடங்கிவிட்டன. அவற்றைப் படித்து அவற்றில் ஈடுபாடு ஏற்பட்டு இயக்கத்தின் மீது பற்று கொண்டேன். அண்ணாவின் மேல் பற்று என்பது அந்தக் காலத்து இளைஞர் அனைவருக்குமே ஏற்பட்ட ஒன்று....'

பின் நாட்களில் ஓரிருமுறை அறிஞர் அண்ணா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு களையும் பெற்று, தன் இலக்கியத் திறமையால் அவரையும் கட்டிப் போட்டிருக்கிறார். திராவிட எழுத்துக்களும் அண்ணா பெரியார் இவர்களின் சிந்தனைகளும் இவரை, திராவிட இலக்கியங் களின் பக்கம் முழுமையாகத் திருப்பின. இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ள எண்ணற்ற திராவிட இயக்கக் கட்டுரைகள், தமிழகத்திற்குள் மட்டுமில்லாமல், வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் தமிழகத்தின் அரசியலைக் கொண்டு சென்றது என்றால் மிகையில்லை. குறிப்பாக இவர் எழுதிய 'அண்ணா நெடுங்கதைகளில் மகளிர் நிலை, அறிஞர் அண்ணாவும் திராவிட இயக்கமும், அண்ணா நாடகங்களில் எதிர்நிலை மாந்தர், வைக்கம், தென்னகத்தின் எழுச்சி, PERIYAR SELF RESPECT' இவற்றைக் குறிப்பிடலாம்.

இவர் எழுதிய வைக்கம் என்ற கவிதை நாடகம், தமிழ் வளர்ச்சித் துறையின் 2008ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல் பரிசைப் பெற்றது. இவரது மற்றுமொரு கவிதை நாடகம் நாகானந்தம் என்பது. இது வட நாட்டு மன்னன் ஹர்ஷவர்த்தன் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இதனை வடமொழி இலக்கியத்திலிருந்து நேரடியாகவே தமிழாக்கம் செய்திருந்தார்.

கே.வி.கோபாலகிருஷ்ணன் எழுதிய ஆங்கில நூலொன்றின் மொழிபெயர்ப்பாக 'மனித வாழ்வை அமைத்த கண்டுபிடிப்பாளர்கள்' என்ற தலைப்பிலும் நூலொன்றை எழுதியிருக்கிறார்.

இவரது அரசியல் இலக்கியம் இவருக்குப் பெரியார் விருதையும், திரு.வி.க. விருதினையும் பெற்றுத்தந்தது.

ஆரம்பக்காலங்களில் முல்லைச்சரம், தாமரை, கல்கி, கணையாழி போன்ற இதழ்களில் தொடர்ந்து கதை, கட்டுரை, கவிதைகள் என்று நிறையவே எழுதினார். கட்டுரைகளை Leslie Amarson மற்றும் A S Mee என்ற புனைப் பெயர்களிலும், சிறுகதைகளைச் சுபத்ரா அய்யாசாமி என்ற பெயரிலும் வித்தகன் என்ற பெயரில் விமர்சனக் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார். வானொலி நிகழ்ச்சிகளை வழங்கியும் தன் பணியை விரிவு செய்துகொண்டார்.

திராவிடக் கழகத்தின், 'THE MODERN RATIONALIST' ஆங்கில மாத இதழில் சில காலம் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றியவர். அதில் நிறையக் கட்டுரைகளையும் எழுதினார். இதைப் போல் திமுகவின் RISING SUN ஆங்கில நாளிதழிலும் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தன...

திமுக தலைவர் கலைஞரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்த அ.அய்யாசாமி அவர்களிடமே திமுகவின் வரலாற்றைச் சுருக்கமாக ஆங்கில நூலொன்றாக வடிக்கும் பணியைக் கலைஞர் கருணாநிதி அவர்கள் வழங்கியிருந்தார். அதை ஏற்று அவர் எழுதிய நூல்தான் 'A CONCISE HISTORY OF DMK' என்ற நூல். இந்நூல் கலைஞரின் வீட்டில் வைத்தே கலைஞரால் வெளியிடப்பட்டது. நீதிக்கட்சியின் தொடக்கம் முதல் ஸ்டாலின் நடப்பு அரசியல் வரை எழுதியிருந்தார்.

தன் இறுதிக்காலம் வரை தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருந்தார் என்றே சொல்லலாம். திராவிடக்கழகத்தின் சார்பில் அதன் தலைவர் வீரமணி அவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பெரியாரின் வரலாற்றையும் வாழ்வியல் தடங்களையும் ஆங்கில நூலாக்கி அளித்தார்.. அதற்காகத் திராவிடக் கழகத்தின் நூலகத்திற்கருகிலேயே அவருக்குத் தனி அறை ஏற்பாடு செய்து கொடுத்து அங்கேயே தங்கவும் வைத்திருந்தார்கள்.

எப்போதும் பண்புள்ள மனிதராகவும்.. மதம் சாதிகளைக் கடந்த மனித நேயாளராகவும் வாழ்ந்த அ.அய்யாசாமி அவர்கள் உடல்நிலை குன்றியபோது தனது மகள் கார்குழலி ஸ்ரீதர் அவர்களின் இல்லத்திற்கு வந்துவிட்டார். எழுத்துக்களோடு மட்டுமே அதிகம் பயணித்த சிறந்த மொழியாளர், மொழிபெயர்ப்பாளர் 17.06.2019இல் அமைதியடைந்தார்.

அன்னாரது எழுத்துக்கள் இன்றும், நாளையும் மட்டுமில்லாமல் வருங்காலச் சந்ததிகளுக்கும் அரசியல் பற்றிய தகவல்களை அள்ளித் தரும் என்பதில் ஐயமில்லை. ■

• ராம்கி சுருளியப்பன்
முதலாண்டு முதுகலைத் தொழில்நுட்பம் – உயிரிதொழில்நுட்பவியல்,
பாரத் பல்கலைக்கழகம், சென்னை.

# தமிழும் அறிவியலும் என்னிரு கண்கள்..



இயற்கை எழில் கொஞ்சும் தேனி மாவட்டத்தின் சிறிய கிராமம் சீப்பாலக்கோட்டையில் சுருளியப்பன் - பவுன்தாய் இணையருக்கு மூன்றாவது மகனாய் அவதரித்தேன். என் தந்தையும் தாயும் கல்வி கற்கவில்லையென்றாலும் எனக்குப் பெயர் வைத்ததிலே மேதை என நிரூபித்துவிட்டனர். ஆம். ராம் என்றால் ஆங்கிலத்தில் செம்மறியாட்டுக் கிடா என்று பொருள்படும். அவர்களும் ஆடு மேய்த்துத்தான் என்னை உயர்த்தினர். நானும் ஆடு மேய்ப்பன்தான் எனக் கூறிக்கொள்ளச் சற்றும் தயங்கியதில்லை. இன்றளவும் என் ஓய்வு நேரங்களில் அதை நான் விட்டதும் இல்லை.

எனக்குச் சிறுவயதில் இருந்தே தமிழ் ஆர்வம் மிகையாக இருந்தது. மூன்றாம் வகுப்பு படிக்கும்போது முதல் மேடை. தலைப்பு "ஜவஹர்லால் நேரு". மேடை ஏறியவுடன் என் உடல் சிலிர்த்து வியர்வை அரும்பியதுதான் நினைவுக்கு வருகிறது. அதன்பின் நடந்தவை எண்ணத்தில் இல்லை. மதிய உணவிற்காக மட்டுமே பள்ளிக்குச் சென்ற நாட்களில் என்னாலும் சாதிக்க முடியும் எனக் கூறி மேம்படுத்திய பல ஆசிரியர்களை இன்று நினைவுகூர்கிறேன். பத்தாம் வகுப்பு வரை சீப்பாலக்கோட்டை, அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்துப் பத்தாம் வகுப்பில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றேன். என்னுடைய முதல் அத்தியாயம் பல்வேறு கசப்பான சம்பவங்களுடன் இனிதாய் முடிந்தது.

மேல்நிலைப்பள்ளிக்குச் செல்வோமா? என யோசித்தே - விடுமுறை கழிந்தது. பல்வேறு போராட்டங்களுக்கு இடையில் இராயப்பன்பட்டி சவரியப்ப உடையார் மேல்நிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டேன்.

குடும்பத்தைப் பிரிந்து விடுதியில் தங்கிப் படித்தேன். என் வாழ்வின் திருப்பு முனையாக அமைந்த இடம் பேச்சுத்துறை யிலும் கல்வியிலும் என்னை மிகச்சரியாகச் செதுக்கிய சிற்பக்கூடம். திருமதி.அங்கு என் தாவரவியல் ஆசிரியர். தோ கிறிஸ்டி தன்சிலி (ம) விலங்கியல் ஆசிரியர் திரு.மணிவேல் அவர்களின்பால் ஈர்க்கப் பட்டுக் கல்லூரியிலும் உயிரியலையே விருப்பமாக எடுத்துப் படித்தேன்.

சென்னை பாரத் பல்கலைக்கழகத்தில் இளங்கலைத் தொழில்நுட்பம் மரபணு பொறியியலில் சேர்ந்தேன். அங்குச் சென்றவுடன் தான் தெரிந்தது தமிழ் வழியில் படித்த எனக்கு இதுபோன்ற படிப்பெல்லாம் பேராசை என்று. ஏற்கெனவே எங்கள் பொருளாதாரச் சூழல் (ம) தமிழ்வழி என நகையாடியவர்களுக்குத் தீனி போட்டுவிட்டோம் என எண்ணி அழுத காலங்கள் உண்டு. காரணம் நிறைய வார்த்தைகளுக்கு எழுத்துப் பிழை கூட தெரியாது. அங்கு எனக்கு ஊன்றுகோலாய் அமைந்தது நட்பு. என் உயிர் நண்பன் என இன்று மார்தட்டிச் சொல்லும் அளவிற்கு என்னை வளர்த்த என் நண்பன் ஸ்ரீபால் காரணம். எழுத்துப்பிழை சரிசெய்து எனக்கு வாழ்க்கையில் பிழைக்கக் கற்றுத்தந்தவன். கல்லூரியிலும் தொடர்ந்தது தமிழ்ப்பணி. இரண்டாம் ஆண்டில் திருவள்ளுவர் நாள் பேச்சுப்போட்டியில் பல்கலைக்கழக அளவில் மூன்றாம் பரிசு. பின் மூன்றாம் ஆண்டில் மகாத்மா காந்தி நினைவு பேச்சுப்போட்டியில் இரண்டாம் பரிசு. தமிழ்மன்ற விழாவில் பல்கலைக்கழக அளவில் முதல் பரிசு எனப் பரிசுப்பட்டியல் நீண்டது.

தமிழில் மட்டுமல்லாது என் துறைசார்ந்த போட்டிகளிலும் தேசிய, சர்வதேசக் கலந்தாய்வுகளிலும் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்றேன்.

கல்லூரி முடித்து இளங்கலை பட்டம் பெறும்முன் 20 கேடயங்கள், 10 பதக்கங்கள், 40 சான்றிதழ்களுடன் அனைவரிடமும் நன்மதிப்பைப் பெற்றேன். என்னுடைய துறையில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும், தமிழில் ஒரு ஆராய்ச்சி கட்டுரையும் சமர்ப்பித்துத் தமிழும், மரபியலும் என் இரு கண்கள் போல் சம முக்கியத்துவத் தோடு கற்றுவருகிறேன்.

இன்று நான் அதே பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தொழில்நுட்பம் தொழிலக உயிரிதொழில்நுட்பவியல் பயின்று வருகிறேன். இன்றும் தன்னம்பிக்கை பேச்சாளராய்ப் பல பள்ளிகளுக்குச் சென்று உரையாற்றி வருகிறேன். பேச்சோடு மட்டு மல்லாமல் கவிஞராய் அறிவியல் கருத்துக் களைக் கவியாக்கி அறிவியல் என் காதலி எனும் தலைப்பில் கவிதைகளை எழுதி வருகிறேன். என் வருங்கால இணையருக்குப் பரிசளிக்க ஏங்கி நிற்கிறது என் ரோஜாச் செடி எனும் தலைப்பில் ஹைக்கூ கவிதை களை எழுதிவருகிறேன்.

பெற்ற தாய் தந்தைக்கும் பிறந்த பொன்னாட்டிற்கும் என் பேச்சால் இயன்றதைச் செய்ய வேண்டும் எனும் எண்ணத்தோடு பயணிக்கிறேன். இன்னல்களை இம்மியளவும் கருதாது துணிச்சலோடு போராடினால் வாகை என்ன வானமே வசப்படும். எதிர்காலத்தில் அறிவியல் தமிழறிஞராய் எண்ணற்ற படைப்புகளைத் தரவேண்டும் எனச் சூளுரைத்துள்ளேன்.

ஆய்வு

தொடர் - 4

• கடையநல்லூர் பென்ஸி

# கீழடி – தமிழின் தாய்மடி





தமிழகத் தொல்லியல் ஆராய்ச்சியாளர்களும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் இங்கே பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

1979ஆம் ஆண்டில் தமிழக அரசின் தொல்லியல் துறை, மாதிரி அகழாய்வுக் குழிகளைக் கொடுமணலில் தோண்டியது. அதில் ரோமானிய ஓடு ஒன்று கிடைத்தது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையுடன் இணைந்து 1985, 1986, 1989, 1990 ஆண்டுகளில் அகழாய்வுகள் நடத்தியுள்ளார்கள். அகழாய்வு இயக்குநர் ஒய். சுப்பராயலு மற்றும் முனைவர் ராஜன் ஆகியோர் இதனை வழிநடத்தியுள்ளனர்.

48 குழிகளில் எண்ணிக்கையில் மிகப்பெரிய கற்களாலான மயானங்கள்13 அடையாளம் கண்டுகொள்ளப்பட்டன. 1998 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் தமிழகத் தொல்லியல் துறையினர் 15 அகழிகளைத் தோண்டி எடுத்துள்ளனர். அவற்றில் மூன்று மயானங்கள். இவ்வளவு அதிக அளவில் கடந்த அகழாய்வுகளில் மயானக் காடுகள் கண்டறியப்படவில்லை. இந்தக் குறிப்பினால் கொடுமணல் கேந்திரமான வணிகத் தலமாக இருந்த உண்மை வெளிப்படுகிறது. மனித எலும்புக் கூடுகளின் மயான வடிவங்கள் கலச அடக்கத்தலம், கல்லறைக் கோபுரங்கள் ஆகியவற்றால் பலதரப்பட்ட இன மக்கள் (ethnic group) வாழ்ந்துவந்த இடம் கொடுமணல் என்பதும் நிரூபணமாகிறது.

செலசனக்காடு, தோரணக்காடு என இரு இடங்களில் தோண்டிய குழிகளில் தொல் பொருட்கள், மட்கலங்கள் கிடைத்தன. அங்கு காணப்பட்ட மண் அடுக்குகளின் அடிப்படையில் இரண்டு பண்பாட்டுக் காலங்களில் மக்கள் வாழ்ந்தது தெரியவந்தது. இதன்படி முதல் பண்பாட்டுக்காலம் கி.மு 300 முதல் கி.பி 100 என்றும், இரண்டாம் பண்பாட்டுக்காலம் கி.பி 100 முதல் கி.பி 300 என்றும் அறுதியிடப்பட்டது.

மேலும் இரும்பு ஆலை செயல்பட்டு வந்ததும்; பழங்கால மக்கள் பயன்படுத்திவந்த மண் பாண்டங்கள், அணிகலன்கள், முதுமக்கள் தாழி போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ஆய்வில் 50 ஹெக்டேர் பரப்பளவில் நகரமும் 10 ஹெக்டேர் பரப்பளவில் மக்கள் வசித்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இரும்பை உருக்கப் பயன்படுத்திய உலையின் பகுதிகள், இரும்புச் சிட்டங்கள், இரும்பு வாள், இரும்பு அம்பு முனைகள், செப்பு உலோக அம்பு முனைகள், இரண்டு புறமும் வெட்டும் கோடாரி, வில், குத்தீட்டி, செம்பினால் ஆன உடைந்த வடிகட்டி எனத் தொல்பொருட்கள் பலவும் கண்டெடுக்கப் பட்டன. கொடுமணல் மக்கள் இரும்பை உருக்கி ஆயுதங்கள் செய்யும் தொழில்நுட்பத்தை 2,000

ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர் என்று உலகுக்கு அறிவித்துக்கொண்டிருந்தன தொல்லாய்வுப் பொருட்கள்.

இங்குக் கிடைத்த 'பெரில்' பச்சைக்கல், 'சபையர்' எனப்படும் நீலக்கல் ரோமானியர்களைப் பெரிதும் கவர்ந்தவை. பளிங்குக் கற்களால் ஆன மணிகளும் இங்கு அதிக அளவு கிடைத்துள்ளன. அவற்றில் பச்சைக்கல், பளிங்குக்கல், நீலக்கல், சூதுபவளம், மாவுக்கல் போன்ற கற்களாலான மணிகளும் இருந்துள்ளன. இதன் முடிவாக, கொடுமணலில் அரிய கல்மணிகளுக்குப் பட்டை தீட்டும் தொழில் நடைபெற்றுள்ளது தெரியவந்தது.

கைவினைப் பொருள்கள் செய்யக்கூடிய தொழிற்கூடம் இயங்கியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கட்டிட அமைப்புகளைக் காணும்போது வேளாண்மைத் தொழில் குறைவான அளவில் கொடுமணலில் நடைபெற்றிருக்கவும் வாய்ப்புள்ளது. கிழக்கே சேரர்களின் தலைநகரமான வாஞ்சி (கரூர்) முதல் மேற்கே புகழ்பெற்ற சேரர்களின் துறைமுக நகரமான முசிறி (கேரளாவின் தற்போதைய பட்னம்) வரை கொடுமணல் விரிந்துகிடக்கிறது.

இங்கிருந்து கல்மணிகள் சேரர்களின் புகழ்பெற்ற துறைமுகமான முசிறி வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப் பட்டுள்ளன. "பஞ்சிலிருந்து நூலைத் திரிக்க உதவும் சுட்ட மண்ணால் செய்யப்பட்ட சுழல், தங்கத்தினாலான மெல்லிய ஒயர் கம்பிகள், தமிழ் பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்ட ஓட்டுச் சிதறல்கள் பெயர்களைத் தாங்கி வரலாறு சொல்கின்றன. எழுத்து வடிவங்கள், "சாத்தன், விசக்கி, சிலிகன், உராணன், திசான்" என உள்ளன. ஒரு பெரிய மட்பாண்டம், அழகிய தமிழியில் "நான் சம்மன் சுமணன்" என்கிறது."சுமணன்" 'சம்மனின்' தந்தையாக இருக்கலாம் என்று அகழாய்வாளர்கள் கருதுகின்றனர்.

கொடுமணல் அகழாய்வுகள் மூலம் விலையுயர்ந்த, மதிப்புமிக்க, தனித்தன்மையுடைய கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கண்மணிகள் செய்யும் தொழிற்கூடம் கண்டறியப் பட்டுள்ளது.

எஃகு, இரும்பு, செம்பு போன்றவை உருக்கப்பட்டதற்கான தொழிற்கூடங்கள் இருந்ததற்கான கட்டிட வடிவ அமைப்புகள்



கண்டறியப்பட்டுள்ளன. சங்குகளை அறுக்கும் தொழில்நுட்பம் சிறப்புற்று விளங்கியிருக்கிறது. இதற்கு ஆதாரமாக நமக்குக் கிடைத்த சங்கு வளையல்கள், கழுத்தணிகள், யானைத் தந்தங் களால் உருவாக்கப்பட்ட அணிகலன்கள் நம்முடன் உறவாடுகின்றன. இந்த அணிகலன் களில் மயங்கிய வெளிநாட்டு வணிகர்கள், கைவினைஞர்கள், மத்தியதரைக்கடல் வழியாக வழிகளைக் கண்டுபிடித்து இங்கு தங்கள் பொருள்களுடன் வந்து வியாபாரம் செய்திருக் கின்றனர். மத்திய கங்கைச் சமவெளிப் பகுதியிலிருந்தும் வணிகர்கள் கைவினைஞர்கள் கொடுமணல் வந்துசென்றதைத் தமிழ்மயப் படுத்தப்பட்ட பிராகிருதமொழி (தமிழ்ப் பிராமி அல் தமிழி)களில் தனி நபர்கள், வணிகர்களின் பெயர்களைச் சொல்லும் எழுத்துக்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன. இப்போது மீண்டும் மேலே குறிப்பிட்ட இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) தொல்லியலாளர் ஸ்ரீராமின் பத்திரிக்கையாளர்களுடனான பேட்டியைப் பாருங்கள்.

எங்கோ உதைப்பதுபோல் தெரியுமே! வரலாறு என்பது என்ன நடந்தது என்ற உண்மை பேசவேண்டும், அதில் தனிப்பட்ட, அறிவியல் பார்வையற்ற ஊகங்களுக்கு இடமில்லை.

•

1974ஆம் ஆண்டுதான் கீழடி மண்ணில் புதையுண்டிருந்த ஆதித் தமிழின் 'கனவுகள்' நனவாகத் தொடங்கிய தருணம். நம் ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் மூலம் உழவிற்காகத் தோண்டப்பட்ட கிணற்றின் குழிகளிலிருந்து கவிதைகளாகப் பரிணமித்த கணங்களைக் கட்டுரையின் முதல் பகுதியில் கண்டோம்.

தற்போது 75 வயதைக் கடந்துவிட்ட ஆசிரியர் சுப்பிரமணியம் மதுரை சிலைமான் ரயில் நிலையம்

அருகே ஆசிரியர் குடியிருப்பில் தனது பணி ஓய்வு வாழ்க்கையில் இருக்கிறார். இன்னும் தன்னை ஒரு தொல்லியல் ஆய்வு மாணவனாகவே கருதிக் கொண்டு சுறுசுறுப்புடன் இயங்கிவருகிறார். மண்ணுக்குள் புதைந்திருந்த பழந்தமிழர் வாழ்விடம் அவர் வழியாகத்தானே கீழடியின் தமிழ் வரலாறாகியது!

கீழடியின் அந்தச் "செங்கல்" பற்றியும் அதன் தொன்மை பற்றியும் தமிழகத் தொல்லியல் துறைக்குத் தகவல் அனுப்புகிறார் ஆசிரியர். அந்தத் தகவலைத் தொல்லியல் அறிஞர் வெ.வேதாச்சலம் மத்தியத் தொல்லியல் துறைக்கு அனுப்புகிறார். 1976ஆம் ஆண்டு வரலாற்றுத் துறை சார்பில் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறு வாரக் காலம் பயிற்சி கொடுத்தார்கள். அந்தப் பயிற்சியில் பங்கேற்க நம் ஆசிரியரும் சென்னைக்குச் சென்றார். அப்போதுதான், தொல்லியல் சார்ந்த பயிற்சிக்குத் தலைமை தாங்கிய தொல்லியல் ஆய்வுத்துறையின் இயக்குநர் நாகசாமி அவர்களுடன் தொடர்பு ஏற்படுகிறது. கீழடியில் கிடைத்த பொருட்கள் பற்றி அவரிடம் எடுத்துரைக்க, உடனே அப்போது தொல்லியல் ஆய்வாளராக இருந்த வேதாச்சலம் துணையுடன் ஆசிரியரிடமிருந்த தொல்பொருட்களைச் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாக்க ஏற்பாடு செய்தார். அவற்றை வெளிநாடுகளுக்கு ஆய்வுக்கும் அனுப்பினார்.

பின்னர் 1977ஆம் ஆண்டு சென்னையில் தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கலந்துகொண்ட ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு நம் ஆசிரியர் சுப்பிரமணியமும் அழைக்கப் பட்டிருந்தார். ஆசிரியர் கீழடியிலிருந்து எடுத்துச் சென்ற பொருட்களைப் பற்றிய ஆய்வு முடிவு களைத் தொல்லியல்துறை இயக்குநர் நாகசாமி



அவர்கள் விளக்கிச் சொல்ல, அது ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக் கூட்டமாகிப்போனதில் ஆச்சரிய மில்லைதானே!

2013ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் துறையின் ஆய்வாளர்கள் வேதாச்சலம், அமர்நாத் ராமகிருஷ்ணன், இராஜேஸ் மூவரும் ஆசிரியரை அவரது இல்லத்தில் சந்திக்கிறார்கள்.

கீழடித்தாய் தனது 'தொல் செங்கல்' லோடு இவர்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்க, தொல்லியல் குழு நம் ஆசிரியருடன் கீழடிக்குப் பயணிக்கிறது.

1974இல் புஞ்சைக் காடாக இருந்த கீழடி நிலம் இப்போது தென்னந்தோப்பாக மாறியிருந்தது. "அந்தக் கதாநாயகக்" கிணறு எங்குள்ளது என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. கீழடித் தாய் "திலீப்கானை" அனுப்பிவைக்கிறார். ஆம், நம் ஆசிரியர் சுப்பிரமணியின் இணையரிடம் படித்த மாணவன்தான் அந்த திலீப்கான். அவர் அப்போது அங்கிருந்திருக்கிறார். அவர்கள் வந்த நோக்கத்தைத் தெரிந்துகொண்ட திலீப்கான் அந்தத் தோப்பு முழுவதையும் தொல்லியல் குழுவிற்குச் சுற்றிக்காட்டினார்.

சில இடங்களில் நிலத்துக்கு மேலே இருந்த கால்வாயிலேயே கருப்பு சிவப்பு ஓடுகள், சங்ககாலச் செங்கல் துண்டுகள் இவர்களைப் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டிருந்தன. அருகிலிருந்த அந்தக் கிணற்றுக் குழியில் அமர்நாத்தும், இராஜேஸும் இறங்கிப் பார்த்தார்கள்.

குழியில் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு முழுச் செங்கல் கிடைத்தது. கிணற்றுச் சுவற்றில் நிறைய படிமங்கள் புதைந்திருந்ததை ஆய்வாளர்கள் உணர்ந்து உள்வாங்குகிறார்கள். அந்தக் குழியிலேயே 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தரையின் மட்டத்தை அவர்களால் பார்க்க முடிந்தது. அதிலிருந்து மேல் நோக்கி இரண்டு ஆள் உயரத்துக்கும் அதிகமாக ஆற்று மணல் வந்து சூழ்ந்திருப்பதையும் அவர்களால் தெளிவாக உணர முடிந்தது.

தொடர்ந்து, இந்தப் பகுதியில் தொல்லியல் ஆய்வு செய்வதற்காக மத்திய அரசிடம் அனுமதி பெறப்பட்டது.

•

**2013 – கீழடியில் முதல் தொல்லியல் ஆய்வு :**

மொத்தம் 293 ஆய்வுக் குழிகள் வெட்டப் பட்டன. அதில், கீழடியைச் சுற்றியுள்ள 4.6 சதுர கிலோ மீட்டர் பகுதியில் மட்டும்தான் வைகை ஆற்றின் தரைமட்டத்திலிருந்து 12 முதல் 15 அடிவரை மணல் சூழ்ந்து நிலம் உயர்ந்துள்ளது தெரிய வந்தது.

ஆக இந்தப் பகுதியில், ஆற்று மண் மூடிய தொல்லியல் மேடு உள்ளே இருக்க வாய்ப்புள்ளது என்பது உறுதியானது. அதன் பின்னர்தான், அந்தப் பகுதியிலுள்ள 110 ஏக்கர் நிலத்தில் அகழாய்வு செய்ய தொல்லியல் துறை ஆய்வாளர்கள் முடிவு செய்தனர். பின்னர் மீண்டும் மத்திய அரசுக்கு அந்தத் தொல்லியல் அறிக்கை அனுப்பப்படுகிறது.

•

**2015 – கீழடியில் முதல் கட்ட அகழாய்வு :**

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் பெங்களூருவில் உள்ள இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் (ASI - Archaeological Survey of India) அகழாய்வுப் பிரிவு தனது முதல்கட்ட அகழாய்வைக் கீழடித் தொல்லியல் களத்தில் தொடங்கியது. அமர்நாத் ராமகிருஷ்ணன் கண்காணிப்புத் தொல்பொருளியலாளராகத் தலைமை தாங்கினார். கிருஷ்ணகிரி அரசுக் கலைக் கல்லூரியின் வரலாற்றுத் துறையின் துணைப் பேராசிரியர் பி. வெங்கடேசுவரன், கே. வடிவேல், கே. வசந்தகுமார், டி. பாலாஜி, ஆர். மஞ்சுநாத், ஜி. கார்த்திக் ஆகிய வல்லுநர்களும் கீழடி அகழாய்வில் உதவியாளர்களாக இணையக் கல்வெட்டியலாளர் வி. வேதாச்சலம் துறைசார் வல்லுநராகக் (Subject Matter Expert) களம் இறங்கினார்.

•

**இரண்டாம் கட்ட அகழாய்வு – 2 ஜூன், 2016:**

**தொல்லியல் களம் – கீழடியின் பள்ளிச்சந்தைத் திடல் :**

அன்றுவரை எவரும் அறிந்திடாத தமிழின் வாழ்வியல் தொன்மை அடையாளங்களைக் கீழடித்தாய் உலகிற்குப் பறைசாற்றத் தொடங்கினார். எந்த நோக்கோடு இந்திய அரசு இந்தத் தொல்லியல் ஆய்வுகளை, அகழாய்வு களைத் தொடங்கியதோ, உலகின் தொன்மை மொழியின் அறிவியல் பார்வையில் வெளிச்சம் பாயத் தொடங்கியது.

2016-17ஆம் ஆண்டில் கீழடியில் இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் முடிந்த பிறகு இந்தியத் தொல்லியல் துறை, தொல்லியல் கண்காணிப்பாளரான கே. அமர்நாத் இராம கிருஷ்ணாவை அஸ்ஸாம் மாநிலம் கவுகாத்தி வட்டத்திற்கு இடமாற்றம் செய்தது (மார்ச் 2017). இதன் காரணமாகக் கீழடி அகழ்வாய்வுப் பணிகளை நிறுத்துவதற்காக இந்தியத் தொல்லியல் துறை வேண்டுமென்றே தொல்லியல் கண்காணிப் பாளரை இடமாற்றம் செய்ததாகச் சர்ச்சை எழுந்தது. கீழடி அகழ்வாய்வுப் பணிகளை முழுவதுமாக முடிக்க வேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறிய கே. அமர்நாத் இராம கிருஷ்ணா மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் (CAT) தனது இடமாற்றத்தை எதிர்த்து முறையிட்டார். கண்காணிப்பாளர் அமர்நாத் இராம கிருஷ்ணாவின் பணிமாறுதலை மீண்டும் மறுபரிசீலனை செய்யச் சொல்லி அரசிற்குப் பரிந்துரைத்தது தீர்ப்பாயம். இதற்கு மத்தியில் இந்தியத் தொல்லியல் துறை, இராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் வட்டத்தில் துணைத் தொல்லியல் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த பி. எஸ். ஸ்ரீரமணனைக் கீழடி அகழ்வாய்வுத் தளத்தின் தொல்லியல் கண்காணிப்பாளராக நியமித்தது.

அமர்நாத் இராமகிருஷ்ணாவிற்குப் பணி மாறுதல் கிடைத்த உடன் இந்தியாவிற்குச் செய்திகளைத் தரும் அத்தனை ஊடகங்களும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அவரை நேர்காணல் செய்தன. நேர்காணலின் முக்கியமான பகுதிகள் இங்கே.

("The Caravan" 17 ஏப்ரல், 2017)

தொலைபேசி நேர்காணல் - Saradha V.

#

இந்தியத் தொல்லியல் துறைக்கு (ASI) டில்லி, பாட்னா, புவனேஸ்வர், வதோதரா, நாக்பூர் ஆகிய ஐந்து கிளைகள் இருந்தன. ஆறாவதாக 2001ஆம் ஆண்டு பெங்களூருவில் கிளை தொடங்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு கர்நாடகா மாநிலத்தின் பெல்லாரி அகழாய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அகழாய்வு இன்னும் தொடங்கப்படவில்லை. 2013ஆம்





ஆண்டு நான் பணியேற்ற பிறகே கீழடியில் நேரில் ஆய்வை நடத்தி, மேலும் அகழாய்வை வலியுறுத்தி வந்தேன். தென்மாநிலங்களின் அகழ் ஆய்வுகளுக்காகத் தொடங்கப்பட்ட பெங்களூர் கிளைத் தொல்லியல் ஆய்வுத்துறையின் நோக்கம் இன்னும் பூர்த்திசெய்யப்படவில்லை.

இதுவரை நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளில் இரண்டு இடங்களில் மட்டுமே வாழ்வியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவை 1947இல் நடைபெற்ற அரிக்கமேடு மற்றும் 1965இல் நடைபெற்ற காவிரிப்பூம்பட்டினம் அகழாய்வுகள். மற்றவை ஈமக்குழிகள் (burial sites). 2013ஆம் ஆண்டில் 100 வாழ்வியல் இடங்களைக் கண்டறிந்தோம். அவற்றில் திருப்பாச்சேத்தி, மேலப்பசாலை (இரண்டும் சிவகங்கை மாவட்டம்) இரண்டு இடங்களும் சாலை விரிவாக்கத்தில் மூழ்கிப்போய்விட்டன. எனவே கீழடி கிராமமும் அதுபோலச் சிக்கலில் மறைந்துபோவதற்குள் நாம் கண்டறிந்த வாழ்வியல் ஆதாரங்களில் அகழாய்வைத் தொடங்கி முடிக்கவேண்டிய இடத்தில் இருக்கிறோம்.

கீழடியில் எடுக்கப்பட்ட 20 தொல் எச்ச மாதிரிகளில் இரண்டு மாதிரிகள் மட்டுமே கரிம ஆய்வுக்கு அமெரிக்காவிற்கு அனுப்பப் பட்டன. அதுபற்றித் தொடர்ந்து மத்தியத் தொல்லியல்துறைக்கு எழுதிய நினைவூட்டுக் கடிதங்கள் கண்டுகொள்ளப்படாமலே போய் விட்டன. இப்படித் தொடர் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டதுதான் பாடலிபுத்திரமும் அஸ்தினாபுரமும் (Pataliputra and Hasthinapur).

ஆனால் தமிழ்நாட்டில் அப்படியான நீண்டநாள் ஆய்வுகள் நடத்தப்படவில்லை. நாம் அறிந்த மதுரையின் இலக்கிய ஆதாரங்கள் தொல்லியல் ஆய்வுகளில் நிரூபிக்கப்படும் நிலையில் உள்ளன.

கீழடியில் தொடர் ஆய்வுகளுக்காக மே - 2016இல் மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியிருந்தேன். அக்டோபர் 2016இல் அனுமதி வரும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தோம். கீழடியுடன் அகழாய்வு தொடங்கப்பட்ட மற்றைய இடங்களுக்கு அனுமதி அளித்துவிட்டு, கீழடிக்குத் தொடர் அகழாய்வுக்கான அனுமதியை அளிக்கவில்லை. எனவே மத்தியத் தொல்லியல் துறை நிர்வாக இயக்குநரை (Director General) நேரில் சந்தித்துக் கீழடி அகழாய்வின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தேன். ஆனால் கீழடி அகழாய்வு பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்க எனக்கு உத்தரவிடப்பட்டது. பொதுவாக ஆய்வின் முடிவிலோ அல்லது தொடர் ஆய்வுகளின் முன்னேற்றம் பற்றியோ தான் அறிக்கை செய்யப்படுவது வழக்கம். எனினும் ஜனவரி 2017இல் பூர்வாங்க அறிக்கை ஒன்றைச் (preliminary report) சமர்ப்பித்தேன். அறிக்கை, ஆய்வை நீட்டிக்கப் போதுமானதாக இல்லை (கவனம் இந்தப் 'போதுமானதாக' - இதனைத் தனியே விளக்குகிறேன்) என்று பதில் வந்தது.

மீண்டும் பிப்ரவரி மாதம் இடைக்கால அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தேன். மார்ச் 2017இல் அறிக்கை ஏற்கப்பட்டு ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் வடக்கே நடைபெறும் அகழாய்வுகளுக்கு இப்படியெல்லாம் அறிக்கை கேட்கப்படவில்லை. ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட (தொல்லியல் ஆண்டு 2005) 56 தொல்லியல் ஆய்வுகளை நீட்டிக்கக் கோரும் ஆய்வு அறிக்கைகள் இன்னும் நிலுவையில்தான் இருக்கின்றன.

- தொடர்ந்து அகழ் ஆய்வோம் உண்மைகளை ■

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : அன்பழகன்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் 16



என்னை
உன் ஆடைகளால் மூடிக்கொள்
இந்தப் பிரபஞ்சத்தை
நான் அப்படித்தான்
துறக்க விரும்புகிறேன்

• • •

தனக்குள் இருக்கும்
சிலுவையின் சுமையை
ஒருபோதும் அறிவதில்லை
மரங்கள்

• • •

இதயத்தை மூடிவிட்டு
உன் கருவறையைத்
திறந்து வை
காதலிப்பதை விட
உனக்குள் உருப்பெறுவதை விரும்புகிறேன்

• • •

வெளிப்படையாக வைக்க
வெற்றி இருந்தாலும்
ஒளித்து வைக்க
ஒரு தோல்வி இருக்கத்தான் செய்கிறது

• • •

வற்றிய குளத்தில்
காதல் கல்லெறிகிறாய்
மனதிற்குள் நீரின் சத்தம்...

• • •

போர்க்களத்தில் வழியும் குருதியைப் போல
பாரபட்சமின்றிப் பொழிகிறாய் உன் அன்பை...

• • •

காமத்தைக் கண்களில் வைத்திருக்கிறேன்
அது உன்னை நிர்வாணத்தைவிடவும்
புனிதமாக்குகிறது

• • •

நீயிருப்பாய் என்றுதான் இங்கு வந்தேன்
கண்ணீரும்கூட உன்னிடம்
இதையேதான் சொல்கிறது
கேள். ■

சிறுகதை

• அ.கரீம்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# பஷீரின் கடைசிக் கிடாய்

பெருத்த மிளகுகளைச் சிதறிவிட்டதைப் போலத் திண்ணையெங்கும் ஆட்டுப்புழுக்கைகள் பரவிக்கிடந்தன. நான்கு நாட்களாக அடித்த வெயிலில் புழுக்கைகள் நன்றாகக் காய்ந்து இறுகிப் போயிருந்தன. பஷீரின் காலடிப்பட்டுச் சில புழுக்கைகள் கருத்தும், பச்சைநிறத்திலும் தரையில் அப்பி நசுங்கி இருந்தன. திண்ணையின் வலதுபுறத்தில் போடப்பட்டிருந்த இலைக்கட்டு வாடிக்கிடந்தது. அவர் மனைவி மும்தாஜின் மரணத்துக்குப் பிறகு வீட்டின் பராமரிப்பு இல்லாமல் வெயிலுக்கும் மழைக்கும் பல ஆண்டுகள் தாங்கிய பஷீரின் ஓட்டுவீடு வண்ணம் இழந்து அதன் ஆயுள் குறைந்திருந்தது. மும்தாஜ் இருக்கும்வரை தினமும் வாசலைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்திருப்பாள். அவள் இறந்தபின்பு அவருக்குத் தோன்றினால் சிலநேரம் கூட்டுவார். குப்பை அதிகம் சேராமல் பார்த்துக் கொள்வார். பஷீரின் மகள் கணவர் வீட்டிலிருந்து வரும்போது வீட்டை முழுமையாகச் சுத்தம் செய்துவிட்டுப் போவாள். அவர் மகளைத் திருச்சி லால்குடியில் கட்டிக்கொடுத்திருந்தார். மாப்பிள்ளை அங்கேயே சொந்தமாக டைலர் கடை வைத்துள்ளார். பஷீரின் ஒரேமகன் முபாரக் கேரளா ஒத்தப்பாலத்தில் பேன்சிகடை வைத்து நடத்திவருகிறார். இருவரும் தமது தகப்பனைப் பார்க்க மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது வந்து போவார்கள்.



மகள் வரும்போது மட்டும் பஷீருக்கு வாய்க்கு ருசியாகச் சோறு கிடைக்கும். மற்றபடி மும்தாஜின் கடைசித் தங்கை ரெஜியாதான் “நம்மை விட்டால் மச்சானுக்கு யாரு இருக்கா” என்று அவளால் முடிந்ததை வாய்க்கு ருசியாகச் செய்து கொண்டுவந்து கொடுப்பாள். பாவம் பார்த்துக் கொடுக்கும் அவளிடம் அதுவேண்டும் இதுவேண்டுமென்று எப்போதும் அவர் கேட்டது இல்லை. அவள் வீட்டில் எதுவும் சமைக்கவில்லை என்றால் மறக்காமல் வந்து சொல்லிவிடுவாள், “மச்சான் கடையில இன்னைக்கு வாங்கிக்கோ” என்று. பஷீருக்கும் அவளுக்கும் இருபத்தைந்து ஆண்டுகள் இடைவெளி இருக்கும். மும்தாஜைத் திருமணம் செய்தபோது அவள் சின்ன பொண்ணாக இருந்தாள். காட்டு வேலைக்குப் போவதால் அவளின் உடல் ஐம்பதைத் தொட்டவள் என்று கணிக்க முடியாதவளைப் போல இருந்தது.

எண்பது வயதைத் தொட்ட பஷீருக்கு வயதுக்கேற்ற சுருக்கங்களுடன் தோல் நெகிழித்தாளைப் போல வழுவழுவென்று இருந்தது. கண்பார்வை குறைந்துபோனதை

அவரின் கருப்புநிற பிரேம் போட்ட கண்ணாடி சரிசெய்திருந்தது. கண்ணாடியில் தூசிபட்டுக் கண் மங்கலாகத் தெரிகிறதா என்று துடைத்துப் போட்டுக் கொள்வார். அப்போதும் அப்படியே தெரியும். கண்ணாடியைக் கழற்றி நிஜமாகவே தனக்குப் பார்வை குறைந்துவிட்டதா என்று சோதனை செய்வார். மங்கலாய்த் தெரியும் பிம்பம்வைத்து அவரே "ஆம்" என்று முடிவு செய்து கொள்வார். முன்னாலிருந்த தலைமுடி கொட்டி முன்மண்டை சிறிய மைதானம் போல இருந்தது. இருக்கும் சில முடிகளுக்கு மத்தியில் சில கருப்பு முடிகளும் இருந்தன.

நான்கு மணிக்கே எழுந்து பழகிய பஷீருக்கு மும்தாஜ் இருக்கும்வரை காலையில் அந்நேரம் டீ வைத்துக் கொடுத்துத் தானும் குடித்து அன்றைய வேலையைத் துவங்குவாள். அவளுக்குப் பிறகு ஐந்து மணிக்குக் கடை திறக்கும்போதுதான். இப்போதெல்லாம் டீ குடிக்கக் கிளம்பும் அவர் கடந்த மூன்று நாட்களாகவே மனம் உடைந்து கடைக்கும் போவதில்லை. ரெஜியா காலையில் வைத்த டீயோடு வந்தாள். "மச்சான் எந்திரிச்சு வந்து ஒரு வாய் சாயா குடிங்க, இப்படியே கெடாய நினைச்சுட்டே இருந்தா போன கெடா திரும்பி வந்துடுமா, எவன் கண்ணு பட்டுச்சோ எவன் எடுத்துட்டுப் போனானோ யாருக்குத் தெரியும். நிச்சயமா எடுத்துப் போனவன் நல்லாவே இருக்க மாட்டான், நாசமாத்தான் போவான்" என்று அவள் மனம் தாங்காமல் வீட்டின்முன் நின்று திட்டினாள். தன்னுடைய மச்சான் அவள் அக்காவின் இறப்புக்குப் பிறகு எப்போதும் இப்படி இருந்ததில்லை என்று அவளுக்குத் தெரியும்.

கிடாவைப் பறிகொடுத்த துக்கம் அவரை எந்த வேலையும் செய்ய முடியாமல் அப்படியே முடக்கிப்போட்டது. குறைந்தபட்சம் இருபது கிலோவுக்கு மேல தான் அந்தச் செந்நிறக் கிடாய் இருந்தது. அதனைப் பலரும் கேட்டு யாருக்கும் தராமல் தன்னோட வைத்துக்கொண்டார். பக்ரீத் பெருநாளுக்குக் கிடா நல்ல கிராக்கி இருக்கும். அந்த மாதத்தில் மட்டும் கிடாவின் விலை ராக்கெட் போலக் கிடுகிடுவென்று ஏறிவிடும். எவ்வளவு நெருக்கடி வந்தபோதும் பஷீர் அந்தச் செங்கிடாயை யார் கேட்டும் கொடுக்கவில்லை. அதனின் கொம்பு நன்றாக வளர்ந்து வளைந்து இருந்தது. வெயில் பட்டால் அதனின் செந்நிற மயிர் ரோமங்கள் தங்கத்தைப் போல மின்னும். பார்க்கவே அழகாக இருக்கும். பஷீர் இருக்கும்வரை நமக்கு மரணம் இல்லை என்ற மிதப்போடு கிடாய் ஊருக்குள் வலம் வரும்.

எப்போதும் பஷீரைச் சுற்றியே "ம்மா... ம்மா... ம்மா.." என்று பின்னாலயே வரும். தன்னுடைய கவனக்குறைவால்தான் தொலைத்துவிட்டதாகக் குற்றவுணர்வு அவரை மிகவும் வாட்டியது. தன்னைப்போலவே அதுவும் எங்கே, என்ன பாடுபடுமோ என்று விம்மினார்.

கிடாவைக் கட்டிப்போடும் வழக்கம் எப்போதும் பஷீருக்கு இல்லை. "அதென்ன நாயா நடக்கிறவங்குல கடுச்சு வைக்க. வாயில்லா ஜீவன், அதை என்னத்துக்குக் கட்டிப்போடணும்" என்று எப்போதும் கட்டிப்போட்டது இல்லை.



மேய்ச்சலுக்குப் போனாலும் திரும்பிவந்து திண்ணையில் ஏறிப் படுத்துக்கொள்ளும்.

பஷீர் எப்போதும் ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் இருக்கும் சுடுகாட்டுக்குத்தான் மேய்ச்சலுக்கு அழைத்துப் போவார். போதுமானளவு மேய்ந்துவிட்டதை அதனின் வாய் அசைவை வைத்தே முடிவு செய்வார். கிளம்பும்போது "ஏய்..ப்பே..ப்பே..." என்று சத்தம் கொடுத்தால் எந்தத் தாமதமும் செய்யாமல் அவரை நோக்கி வந்துவிடும். அந்த "ஏய்..ப்பே..ப்பே..." சத்தம் கிடாய்க்கு மனனமாகிவிட்டது. அந்தச்சத்தத்தைத் தொண்டையில் நிறுத்தி ஒரு ராகம்போல இசைப்பார். அது அவருக்கு மட்டுமே இருக்கும் ஒலிவளம். கிடாய் பஷீரை எப்போதும் பிரிந்ததில்லை.



இஸ்லாமிய வழக்கப்படி ஆண் பிறந்தால் இரண்டும், பெண் பிறந்தால் ஒரு கிடாயும் "ஹக்கிகா" கொடுத்து விருந்து வைப்பது வழக்கம். தனது மகன் மகளுக்குக் குழந்தை பிறந்தபோது அவர்தான் ஆடுகளைக் கொடுத்தார். அப்போது அவர் வளர்ப்பில் நிறைய ஆடுகள் இருந்தன. ஒரு வருடத்துக்கு முன்பு மகனிற்கு மூன்றாவதாக மகள் பிறந்தாள். மகன் அந்த ஒற்றைச் செங்கிடாயைக் கேட்டபோது "கிடா மேல கைய வச்சினா கெட்ட கோவம் வந்திடும், காசு வேணா வாங்கிக்கோ. அத கேட்காத" என்று கறாராகச் சொல்லிவிட்டார். அவரின் பேச்சு மகனுக்கு வருத்தத்தையும் தந்தது.

ஒருமுறை கறிக்கடை ரஹீம் கேட்டபோதும் "அது விக்கிறதுக்கில்ல, வளக்க" என்று அவர் சொன்ன பதில் அவனுக்குச் சிரிப்பை வரவழைத்து விட்டது. "பாவா, ஆடு திங்கிறதுக்குதான வளத்திறோம், நீங்க ஏதோ வளத்திப் பள்ளிக் கூடம் அனுப்பறமாதிரி இல்ல சொல்லுறீங்க" என்று அவன் சொன்னபோது, "மூடிட்டுப் போடா, என் கிடாய நான் என்ன மைத்தோ பண்ணறேன். உனக்கென்ன? உனக்கு எத்தனை முறைதான் சொல்றது.. ஒருமுற சொன்னா கேக்க மாட்டியா? திரும்பத்திரும்ப வந்து கெடா கெடான்னு வந்து நிக்கிரெ" என்று வாய்க்கு வந்தபடி அவனை வாங்குவாங்கென்று வாங்கினார். பதிலுக்கு அவனும் பேச, தெருவில் பெரும் கலவரம்போல மக்கள் கூட்டம் கூடிவிட்டது.

கறிக்கடை ரஹீமுக்கு எல்லோர் முன்பும் அவர் பேசியது அவமானமாகிவிட்டது. பஷீரின் நடவடிக்கை அவனுக்குத் தர்மசங்கடத்தைக் கொடுத்தது. அவன் தலைகுனிந்து சென்றபோது பஷீருக்கும் ஒருமாதிரி அழுத்தம் இருந்தது. இதற்குமுன்பும் பலமுறை ரஹீமுக்குக் கிடாயைக் கொடுத்துள்ளார். ஆனால் இன்று அவர் செய்தது அவருக்கே சரியாகப்படவில்லை. தான் மிகவும் மோசமாக நடந்து கொண்டதாக நினைத்துக் கொண்டார். மறுநாள் நேரிலும் சென்று அவனிடம் வருத்தம் தெரிவித்து வந்தார். "சரி" யென்று அவன் தலையாட்டினாலும் ஊரில் மானம் கெட்டுப்போனதாக உள்ளுக்குள் புழுங்கினான்.

மும்தாஜ் மரணத்துக்குப் பிறகு அவருடைய உலகமே கெடாவாகிப்போனது. கிடாய் அது தன் முகத்தை வைத்து அவ்வப்போது அவரின் தொடையை, தோள்பட்டையைத் தேய்க்கும், அவரின் அருகில் உரசியபடி உட்காரும். அதனின் உடல்மொழி உன்னைவிட்டு நான் எங்கும் நகர மாட்டேன் என்பதுபோல இருக்கும். அதுவாகவே எடுத்துக்கொண்ட உரிமையை அவர் தடுத்ததில்லை. அது அவருக்கும் ஏதோவொரு சிறு ஆறுதலைச் சொல்வது போல் இருக்கும். யாரும் இல்லாத பஷீருக்கு இப்போதைக்கு "நான் இருக்கிறேன்" என்ற ஒரு ஆறுதல் கெடாவின் உரசலில் கிடைத்து.

அப்போதெல்லாம் பஷீரின் வீட்டின்முன்பு 10, 15 ஆடுகள் இருக்கும். அதை வைத்துத்தான் தன்னுடைய வாழ்நாளில் ஜீவனம் செய்துவந்தார். அந்த வருமானத்தில்தான் தனது மகளுக்குச் சிறப்பாகக் கல்யாணம் செய்து கொடுத்தார். "இங்கே இருந்து என்ன தொழில் செய்ய முடியும். பேசாம பொஞ்சாதி ஊருக்குப் போகலாம்னு இருக்கேன்" என்று முபாரக் சொன்னபோது தனது சேமிப்பில் இருந்த அறுபதாயிரம் பணத்தை எடுத்துக் கொடுத்து "எப்படியோ பொழச்சுக்கப்பா" என்று அனுப்பி வைத்தார்.

தன்னுடைய வயது மூப்பினால் முன்பைப் போல ஆடுகளை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்ல முடியாது என்று எல்லாவற்றையும் ஒருவருக்கு விலைபேசி விற்றார். அதில் செங்கிடாயும் இருந்தது. வாங்கியவர் அனைத்தையும் அள்ளிச் செல்ல வண்டியோடு வந்து நின்றார். ஒவ்வொன்றாய் வண்டியில் ஏற்றியவர் கடைசியில் செங்கிடாயைக் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து இழுத்தார். அது வண்டியில் ஏறாமல் ஒரு குழந்தையைப் போல் "ம்மா..ம்மா..ம்மா...." என்று அழுதது. விலைக்கு வாங்கியவர் கயிறைப் பலம் கொண்டு இழுத்தும், இழுக்க முடியாமல் திணறினார். அதன் கதறல் அம்மாவிடம் இருந்து பிரிக்கும் குழந்தையின் கதறல் போலத் தொண்டையிலிருந்து ஏங்கியது. அந்தக் கதறல் பஷீருக்கு என்னமோ செய்துவிட்டது. சட்டென எழுந்து வீட்டுக்குள் சென்றுவிட்டார். கிடாய் வண்டியில் ஏறாமல் அடம்பிடித்தது.

வீட்டுக்குள் சென்றாலும் கிடாவின் "ம்மா...ம்மா..ம்மா.." சத்தம் அவரைத் தொந்தரவு செய்துகொண்டே இருந்தது. அவரை அறியாமல் கண்களிலிருந்து நீர் கசிந்தது. வெளியே வந்தவர் "அந்தக் கெடா இங்கிட்டே இருக்கட்டும். அத விட்டுப்போ" என்று வாங்கியவரைப் பார்த்துச் சொன்னார். அவன் நெளிய "அதுக்குக் காசு கழிச்சுக் கொடு'' என்று சொன்னபின்பு அதைமட்டும் விட்டுவிட்டு வண்டி கிளம்பியது.

"உனக்கு எப்போ போகுனுனு தோணுதோ அப்போ போ" வென்று கழுத்திலிருந்த கயிற்றை அறுத்தார். அதுமுதல் கயிறு இல்லாமல் பஷீரையே சுற்றி வருகிறது. அதுமுதல் பஷீருக்குக் கிடாயும், கிடாயிக்குப் பஷீரும் என்று ரத்த உறவு போல இருவரும் ஒன்றைப் பிரிந்து ஒருவர் இல்லாமல் சேர்ந்தே கழித்தனர். பலநேரம் அவரின் சிறுவயதுக் கதைகளை மகனுக்குச் சொல்லுவது போல அதனிடம் பேசிக்கொண்டு இருப்பார்.

நாளை பெருநாள். மேய்ச்சலுக்குக் கூட்டிப் போனா நல்லா இருக்காது. "நல்ல நாளும் அதுவுமாகூட அல்லாகுவேனு உட்காரக் கூடாதா?" என்று ரெஜியாவும் வருத்தப்படுவாள். இன்றே கொஞ்சம் இலையை வெட்ட எழுந்துபோனார். சூரியன் மேற்கில் மறைந்துகொண்டு இருந்தது.

"மக்ரிப்நேரம் ஆகப்போவது. எங்க போறீங்க மச்சான்?" என்றாள் ரெஜியா. "நாளைக்குப் பெருநா இல்ல. இப்பவே போய்க் கொஞ்ச எலதல எடுத்துவந்தா கெடாவுக்கு ஆகுமில்ல, நாளைக்கு எதுக்குப் போயிட்டு" என்றார். பஷீர் போவதைப் பார்த்துக் கிடாவும் எழுந்து அவர் பின்னாடியே போனது. "இதுஒன்னு.. எங்க போனாலும் அவர் பின்னாடியே வாலாட்டம் போறது" என்று இழுத்தாள்.

பஷீர் திரும்பி வந்து பார்த்தபோது திண்ணையில் படுத்திருந்த கிடாவைக் காண வில்லை.

"ஏய் ரெஜியா கெடாவ காணல"

"அதுதான் உங்க பின்னாடி வாலாட்ட வந்துச்சே"

"இல்லையே.. நான் தனியாத்தானே போனேன்." என்றார்.

"இல்லையே.. நான்தான் உங்ககூட பின்னாடியே போனதைப் பார்த்தேனே. சரி, பதறாதீங்க. அந்தச் சுடுகாடு பக்கந்தானே மேஞ்சிட்டு இருக்கும். போய்க்கூட்டி வாங்க" என்றாள்.

சுடுகாட்டுப் பக்கம் போய் நின்ற பஷீர் "ஏய்..ப்பே..ப்பே..." என்று கத்தினார். கிடா வரவில்லை. மீண்டும் எப்போதும்போலக் கூப்பிட்டார். வரவில்லை. அவர் பலம் கொண்டு மீண்டும் மீண்டும் கூப்பிட்டுப் பார்த்தும் வரவே இல்லை. போன மச்சான் வெகுநேரமாகி இன்னும் திரும்பவில்லை என்று சுடுகாட்டுப் பக்கம் ரெஜியா வந்தாள். 'ஏய்..ப்பே..ப்பே...' என்று கத்திக்கொண்டு இருந்தார். "மச்சான் என்னாச்சு" என்றாள். "நீ ஏன் புள்ள மக்ரிப் நேரமா இங்கே வந்திருக்கே? போ..போ.." என்று விரட்டினார். "பேய்வந்து புடுச்சா புடுச்சிட்டுப் போகட்டும் கெடா எங்கே?" என்றாள். பஷீரின் கண்களில் கண்ணீர் கோர்த்து, "தெரியலையே புள்ள" என்று சொல்லும்போது அவரின் குரல் உடைந்தது.

"சரி நான் ஊருக்கு அந்தப்புறம் நிற்குதான்னு பாக்கிறேன். எங்க போயிடபோகுது" என்று சொல்லிவிட்டு வேகவேகமாக நடக்க ஆரம்பித்தாள். கிடாவின் வாசனை எங்குமே அவள் உணரவில்லை.

எதிரே வந்த கறிக்கடை ரஹீம் "என்னத்த ரெஜியம்மா தேடுறே" என்றான். "நம்ம மச்சானோட கெடா.. வூட்டுலதான் இருந்துச்சு. அவர் பின்னாடியே எழுந்து போனது, காணல" என்றாள்.

"நான் எத்தனை வாட்டி கேட்டேன். உங்க மச்சான் கொடுத்தாரா.. இப்பப் பாரு யாருக்கும் இல்லாமப் போச்சு, இது தேவையா?" என்றான்.

"மௌத்வீட்டுல மூத்திரம் குடிக்க அலையறவனாட்டோம், அந்த மனுஷன் கெடாவ காணலேன்னு துடிச்சிட்டு இருக்காரு. உனக்கு உம் ஆச நட்டுக்கிட்டு நிக்குதோ" என்று ஏறினாள். அவனது முகம் சுருங்கிப்போனது.

"நான் என்னமோ சும்மா கொடுனு கேட்ட மாதிரியில்ல நீ திட்டுறே, காசுக்குத்தானே கேட்டேன்," என்றான்.

"அந்த மனுஷன் காசுவருதுனு தூக்கிக் கொடுக்க ஆட்டை வளர்த்த மாதிரியா அந்தக் கெடாய வளர்துனாறு.. புள்ளயாட்டமில்ல வளர்துனாறு" என்றாள்.

"அந்த மனுஷன் எல்லா ஆட்டையும் வித்தப்ப அந்தக் கெடா 'அம்மா அம்மா'னு கத்தி அழுததே. எப்படி இழுத்தும் போச்சா அது. அம்மாவ பிரியும் புள்ளையாட்டமில்ல கதறுச்சு. ஊரே பார்த்தப்ப நீயும்தானே குத்துகல்லாட்ட நின்னே. இப்போ அந்த மனுஷனுக்கு அதைவிட்ட வேறென்ன நாதி இருக்கு. அப்போயிருந்து அந்த மனுஷன் காலையே சுத்தி வருது. அவரோட மௌத் வரைக்கும் கூடயே இருந்துட்டுப் போகட்டுமே" என்று வெடித்துத் தள்ளினாள்.

"காசு இன்னைக்கு வரும் நாளைக்குப் போகும், மனசு காசுக்கு ஈடாகுமா? எல்லா உசுரும் ஒன்னுதானே. அந்த மனுஷன் அதுமேல பாசம் வச்சுத் தொலசிட்டாறு" என்று சொல்லிவிட்டுக் கெடாவைத் தேடிப் புலம்பிக்கொண்டே வேகமாக நடந்தாள். அவள் பேசியது ரஹீமுக்குக் கொஞ்சம் உறைத்தது.

ரெஜியா எங்குத் தேடியும் கிடைக்காமல் திரும்பினாள். உடைந்துபோய் உட்கார்ந்து இருந்த மச்சானை சமாதானப்படுத்தினாள்.

"அட விடு மச்சான். அது எங்கேயும் போயிருக்காது. திரும்பி வரும். நீ இப்படியே இருக்காதே" என்று திட்டினாள்.

அவரால் எதுவும் பேச முடியவில்லை. அவள் செய்யும் சமாதானம் நிச்சயமாக அவருக்குச் சமாதானமாகாது என்று அவளுக்கும் தெரியும். மும்தாஜின் மரணத்தின்போது வந்த அதே துக்கம் அவர் தொண்டையை அடைத்தது.

மறுநாள் பிரியாணி வாசம் அந்தத் தெரு முழுக்க வீசியது. பஷீரால் அங்கு உட்கார முடியவில்லை. பெருநாளையொட்டி யாரோ தனது கிடாவைக் குர்பானி கொடுத்து விட்டார்கள் என்று அவனின் உள்மனம்



திட்டியது. எந்த வீட்டுத் தேக்சாவில் அது என்னை நோக்கி “ம்மா..ம்மா..ம்மா...” என்று அலறுகிறதோ என்று விம்மினார்.

பிரியாணி மணம் அவருக்கு அருவருப்பாக இருந்தது. அது தனது கிடாவின் சதை வேகும் வாசம்போல மூக்கைத் துளைத்தது. கண்கள் கலங்கியபடியே மலை அடிவாரத்தை நோக்கி நடந்து போனார்.

மதியம் சுடச்சுட பிரியாணி செய்து ரெஜியா வந்தாள். வீட்டில் அவர் இல்லாததைப் பார்த்துக் கொஞ்சம் குழம்பினாள். வேகமாகத் தெரு முனைக்கு வந்தாள். எதிரே அவள் மகன் சல்மான் நடந்து வந்துகொண்டிருந்தான்.

“டேய் மச்சான பார்த்தியா?” என்று கேட்டாள்.

“அவரு மலையடிவாரத்திட்ட உட்கார்ந்து இருக்காரு. நீ போ. அவரே வந்துடுவாரு” என்று சொன்னான்.

“அந்த மனுசன் வந்தா ஒருவாய் சாப்பிடுவாரு இல்ல” என்றாள்.

“இப்போ கூப்பிட்டா வரமாட்டாரு. நீ போ. நானே கொஞ்சநேர கழிச்சுக் கூட்டிவரேன்” என்றான்.

ரெஜியாவுக்கும் அவள் மச்சானின் துயரம் தொற்றிக்கொண்டது.

ஊருக்குள் எங்கு ம்மா...ம்மா.... சத்தம் கேட்டாலும் தனது கிடாதானெனச் சத்தம் வரும் திசையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அவரின் அசைவுகள் ஒரு பைத்தியத்தைப்போல இருந்தன. மூன்று நாட்களாக இந்த மனுஷன் படும் பாட்டைப் பார்த்து எல்லோருக்கும் மனம் தாங்கமுடியவில்லை. தெருக்களைச் சுற்றிச் சுற்றி வந்தார். அவர் சரியாகச் சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகியிருந்தது. அவரின் துயரத்தைப் பொறுக்க முடியாமல் ரெஜியா முபாரக்குக்குத் தகவல் சொன்னாள்.

போனில் பேசிய முபாரக் “அதையே நினைச்சிட்டே இருக்காதீங்க. எப்படியும் வந்துரும். இல்லாட்டி அதேபோல இன்னொன்னு வாங்கித் தரேன்” என்று சமாதானம் சொன்னான்.

அவன் சொன்னதற்கு அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. ரெஜியாவைப் பார்த்து “எல்லாக் கெடாவும், என் கெடாவும் ஒண்ணா?” என்று நா தழுதழுக்கக் கேட்டார்.

பஷீரின் பின்னால் கெடா வந்ததை அவர் கவனிக்கவில்லை. அது பின்னால் தள்ளி எப்போதும் நடக்கும் தெருவெனத் தேரைப்போல

ஆடி அசைந்து போனது. கண்ணைக் கட்டிவிட்டாலும் அது சரியாக வீடு திரும்பிவிடும். பழக்கமான பாதை என்பதால் பஷீர் சுடுகாட்டுப் பக்கம்தான் போகிறார் என்று அது கண்ணில் பட்டதையெல்லாம் மேய்ந்து விட்டே போனது. எல்லோர் முன்பும் அவமானப்படுத்திய கோபத்தில் பஷீர் இல்லாமல் தனியாக நடந்துபோன கிடாவைத் தன் பலம் கொடுத்துக் கறிக்கடை ரஹீம்தான் தூக்கினான். வண்டியில் போட்டுத் தனது மகன் தோட்டத்திற்கு எடுத்துப் போனான்.

ஒருநாள் தோட்டத்தில் வைத்துவிட்டுப் பின்னால் கொண்டுபோய் விடலாம் என்றுதான் நினைத்தான். கெடாவுக்காக அவமானப்படுத்திய பஷீரை ஒருநாள் கொஞ்சம் கஷ்டப்படுத்த வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தத் திட்டமும் அவனிடம் இல்லை. எடுத்துப் போனவனுக்குத் திரும்பக் கொண்டு வந்து விடுவது பெரும் போராட்டமாக இருந்தது. ஒருவேளை விடும்போது யாரேனும் பார்த்து விட்டால் பஷீர் பட்ட அவஸ்தையை மனதில் வைத்து எல்லோரும் சேர்ந்து வெளுத்து விடுவார்கள் என்று அவனுக்கும் தெரியும். தனது பொழப்பே போய்விடுமென்று பயமும் இருந்தது. கிடாவும் மூன்று நாட்களாய் எதுவும் சாப்பிடாமல் "ம்மா ம்மா..'' என்று கத்திக்கொண்டே இருந்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் ரஹீமுக்கு என்னமோ போலிருந்தது. இது கத்திக் கத்தித் தன்னைக் காட்டிகொடுத்து விடுமோ என்ற பயமும் இருந்தது. தான் செய்த காரியம் ஊருக்குத் தெரிந்துவிட்டால் நிச்சயம் கடையும் நடத்தமுடியாது என்று உள்மனம் எச்சரிக்கை கொடுத்தது. "கெடாவைத் திரும்பக் கொண்டுபோய் விடுவது முட்டாள்தனம். காதும் காதும் வைத்தது போல நாளை இதனை முடித்துவிட வேண்டும்" என்று முடிவு செய்து இரவு படுக்கைக்குப் போனான்.

சரியாகத் தூக்கம் இல்லாத பஷீரின் உடல் தளர்ந்து போயிருந்தது. ரெஜியாவுக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் மனம் குழம்பியது.

கெடாவைப் பறிகொடுத்து மூன்று நாட்கள் முடிந்து நான்காம் நாள் துவங்கியிருந்தது. சூரியன் கொஞ்சமாய்க் கண்திறந்து தூங்கிக் கொண்டிருக்கும் பூமியைப் பார்த்தது. டம்ளரில் டீயை ஊற்றி எடுத்து வந்து பஷீரை எழுப்பினாள். ஒருக்களித்துப் படுத்திருந்த அவரைத் தட்டி "மச்சான் சாய கொண்டு வந்திருக்க.. எந்திரிங்க" என்றாள்.

மெல்லமாய்க் கண்விழித்தவர் கெடாவை அழைக்கும் நியாபகத்தில் "ஏய்..ப்பா...ப்பா...'' சுரமில்லாத குரலில் முனங்கிக்கொண்டே திரும்பினார்.

தூரத்தில் எங்கெங்கோ "ம்மா...ம்மா...." சத்தம் கேட்டது.

அது தனது கிடாயின் சத்தமென்று எழுந்தார். "இல்ல மச்சான் உக்காருங்க, அது பக்கத்துத் தெரு ஆட்டோட சத்தம்'' என்று ரெஜியா அமர்த்தினாள். அவர் பிடிவாதமாய்க் கட்டிலைப் பிடித்து எழுந்து நின்றார்.

"வேணா நான் பார்க்கிறேன். நீங்க உட்காருங்க" என்று அவரை அமர்த்தித் தெருவைப் பார்த்தாள். தெரு முனையில் செங்கிடாய் 'ம்மா..ம்மா..' என்று துள்ளிக் குதித்து வந்தது. அதைப் பார்த்த ரெஜியாவுக்குப் பேச்சு வராமல் திணறினாள்.

"மச்சான்..மச்சான்" என்று அழைப்பதற்குள்.. வீட்டின்முன் கட்டிலில் ஒருசாய்ந்து உட்கார்ந்திருந்த அவரின்மீது நெஞ்சிலும் தொடையிலும் தனது தலையை வைத்துத் தேய்த்தது. அவரின் கைகள் நடுங்கின. அதனின் தலையைப் பிடித்துத் தடவினார்.

எதுவும் தெரியாததுபோலத் தெருவின் முக்கிலிருந்து பார்த்த கறிக்கடை ரஹீம் "நீண்ட யோசனையில்" போவதைப்போலப் போய்க் கொண்டு இருந்தான்.

பஷீரின் கண்ணீர் கிடாயின் முகத்தை நனைத்தது. அது மீண்டும் மீண்டும் அவரின் நெஞ்சைத் தலைகொண்டு உரசியது. ரெஜியாவின் முகத்தில் நெளிந்த கண்ணீர் அவள் உதட்டில் பட்டுக் கடவாயில் வழிந்ததை முந்தானையால் துடைத்தாள். ■

• ஸ்ரீகா

# வறட்சிக்கு நீரூற்றும் கவிதைகள்






ஒரு வேலையும் தெரியாதா? எதையாவது செய்ய வேண்டுமா? சரி "பஷீருக்கு ஆயிரம் வேலைகள் தெரியும்". அதில் ஒன்றைக் கற்றுக்கொண்டு செய்யலாம்.

இளங்கோ கிருஷ்ணன் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுப்பில் பஷீரின் நான்காவது வேலை கொஞ்சம் கவித்துவமானது.. "பேய்களைச் சிங்காரித்து மேடைக்குக் கூட்டி வருவது".

தொகுப்பு முழுவதும் இதைப்போல் நல்ல கவிதைகளைச் சிங்காரித்துத்தான் மக்கள் மேடையில் இவர் முன்வைத்திருக்கிறார்.

"நனைந்த செம்மறிக்குட்டி உடலைச் சிலுப்புவது போலச் சடசடவெனச் சொற்களை உதறிக்கொண்டிருந்தேன் நான்" என்கிறார் காலம் கவிதையில். அது தொகுப்பை முடிக்கும் அனைவருக்கும் நனைந்த சிலிர்ப்பை உதறிக்கொள்ள நேரிடுகிறது.

"புத்தனை ஓர் அசிங்கமான சொல்லால் திட்டினேன்"

"நான் துப்பாக்கியால் உன்னைச் சுடவில்லை புத்தனையே சுட்டேன்"

யசோதராவைக் கைவிட்ட புத்தனுக்கான வெறுப்பில் போதையில் தன் மனைவியைக் கொல்லும் அதே கோபம் அடுத்த கவிதையில் ராமனையும் விட்டுவைக்கவில்லை.

"ஒரு அணில் குஞ்சு அடுத்தவன் பொண்டாட்டிய காப்பாற்ற மண் சுமந்து தன் பொண்டாட்டிய தொலைத்த கதை" என்று சீதையை விட்ட ராமனுக்காகச் சின்னஞ்சிறு அணிலையும் திட்ட துணியும் மனம். இவையெல்லாம் கதாநாயகர்களின் முகத்திரையைக் கிழிக்கத் துணியும் கவிதைகள். சரி சீரியஸ் தொகுப்பா? என்றால் நிச்சயம் இல்லை. பல இடங்களில் நம்மைச் சிரிக்க வைக்கிறார். "உன் மரண செய்தி கேட்டதும் நிஜமாகவே வருந்தினேன். நானல்லவா உன்னைக் கொண்டிருக்கவேண்டும்". இதைப்போல் கண்ணன் பாட்டு எறும்புகள் கவிதையும் நம்மைச் சிரிக்கவைக்கின்றன.

எறும்பு, யானை, குரங்கு இவற்றை எல்லாம் குறைந்தது இரண்டு கவிதைகளிலாவது உலாவ விட்டிருக்கிறார். ஒளியாண்டு என்ற வார்த்தையும் இரண்டு கவிதைகளில்.

அற்புதம் கவிதையும் பிரிவு கவிதையும் ஒன்றையொன்று மரங்களாய் வேர்பிடித்துக் கிளைகளாய் விரிகின்றன.

அற்புதம் செழிக்கிறது. பிரிவில் அவன் ஊர் மெல்லக் காய்ந்துகொண்டிருக்கிறது.

பாதம் தாங்காமல் தனித்துப் பயணப்பட ஆசைப்படும் செருப்புகள். அது தன்னால் தனியாக நடக்க முடியும் என்று அதன் உணர்வுகளால் எடுத்துச் சொல்லும்போது தாழ்த்தப்பட்ட சமூகத்தின் கதை மனதில் ஓரத்தில் பயணம் செய்துகொண்டிருந்தது.

"நண்பர்களான உண்மையும் பொய்யும்
ஆளுக்கு ஒரு புறா வளர்த்தனர்
ஒன்று சாம்பல் வண்ணம்
ஒன்று வெள்ளை
இரண்டும் ஒன்றாகவே வலசை கிளம்பும்
ஒன்றாகவே கூடடையும்

ஒருமுறை வெட்டுக்கிளி கேட்டது நதியின் கரைகள் அடியில் கை குலுக்குவது போல் நீங்கள் இருவரும் நண்பர்களாகத்தான் இருக்கிறீர்களா?"

இங்கே உண்மை வளர்க்கும் புறா சாம்பல், பொய்யின் புறா வெள்ளை என்று அழகாகச் சொல்ல வருவதும்; இந்த உண்மையை வேறுக்கத் தேர்ந்தெடுத்த வெட்டுக்கிளி என இவைகளும் படிமங்களால் இருக்கின்றன. நதியின் அடியில் கைகுலுக்குவதும் ரசிக்கும்படி இருந்தது.

"காகங்கள் நடுங்கும் வெயிலில்"

இந்த ஒற்றை வரி ஏதேதோ செய்கிறது. பல கேள்விகள் கிளைக்கின்றன.

காகங்கள் வெயிலில் நடுங்குமா? அந்த அளவு மிகை வெய்யிலா அல்லது உறைநிலைக்குக் கொண்டு செல்லும் வெயிலா? புவி உச்சி மாநாட்டைச் சொல்லாமல் சொல்லிச் செல்கிறது.

வன்முறையின் கலையியல் - 2 ரசங்கள் சொட்ட வன்முறையையும் அழகாக ரசித்து எழுதியிருக்கிறார்.

தோழர் புத்தர் கவிதை ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்ப ஒரு பரு வடிவு கொள்ளும்வரை கேட்டு ஆசையைத் துறந்த புத்தருக்கும் துவராடையால் கம்யூனிஸ சாயமேற்றுவதாகச் சொல்கின்றது.

அதேபோல் தடிக் குழந்தை கவிதையில் இரட்டைக் குழந்தைகளில் கம்யூனிசம் கேப்பிட்டலிசத்தில் அம்மையப்பனை மட்டும் சுற்றிவந்து முதலாளித்துவம் வளர்ந்து நிற்பதைத் திருவிளையாடல் புராணத்தோடு நேரடியாக ஒப்பிட்டுச் சொல்கிறார்.

காஃப்காவைத் தமிழில் மொழிபெயர்ப்பவர்கள் குழிதோண்டித் தள்ளிவிட்டுத் தலையில் கல்லெடுத்துப் போட..... அவசரமாய் மண்ணை அள்ளிப் போடும் பதிப்பாளர்கள். காஃப்காவோ தமிழ்நிலமெங்கும் பேயுரு கொண்டலைவதாக எதார்த்தத்தைப் பதிவு செய்கிறார்.

"நிலத்தில் குற்றுயிராய் கிடக்கும் நதி
நாகமாய்த் துடிக்கிறது"

"கட்டடங்கள் மழையில் வளர்கின்றன
பயிர்களோ தினமும் மழைதேடி வானம் சென்று திரும்புகின்றன" - இவ்விடங்கள் மற்றும் பச்சை அரவம் கவிதை, மொழி வளம் மிகுந்த இடங்களாக இருக்கின்றன.

நல்ல வாழ்க்கை என்பது பாலைகளுக்கு ஓர் இளைப்பாறலாக இருக்க வேண்டும் என்கிறார். ஆம், இவரின் கவிதைகள் வறட்சிக்கு நீரூற்றட்டும்.

சின்னஞ்சிறு மலர் மனதுக்குள் கொண்டு வரும் சூரிய வெளிச்சத்தைப் போல் இக்கவிதைகள் நம்மைப் பிரகாசிக்க வைக்கின்றன.

பீடைப்பாட்டு தவிர்த்துச் சட்டைப்பையில் வீடு உள்ளவன் போன்று பல கவிதைகளில் ஒரே வார்த்தை திரும்பத் திரும்ப வருவது மட்டும் படிக்க இடையூறாக இருந்தது.

ஈராயிரம் ஆண்டு பழமை வாய்ந்த சங்கப் பறவையின் வாலை இவர் மிக நேர்த்தியாகவே எழுதியிருக்கிறார்.

உண்மையில் பக்ஷிருக்கு மட்டுமல்ல... இதன் ஆசிரியருக்கும் கவிதையின் ஆயிரம் வேலைகளும் தெரிந்திருக்கிறதைப் படித்து உணரலாம்.

வெளியீடு : புது எழுத்து
விலை : 80 ■

ஓவியங்கள் : அழ. ரஜினிகாந்தன்



ரோமங்களின் வேர்களில்
சத்து குறையத் துவங்கியிருக்கிறது
செந்நீர் உறைகிறபோதெல்லாம்
உயிரணுக்களின் கணுக்கால்கள்
உடைந்து உதிர்ந்து கொண்டிருக்கிறது
மூளையின் செல்களில்
இறக்கப்போகிற பறவைகளின்
சிறகுகளுக்கான கடைசி இரவுகளைப்
போன்றதொரு படபடப்பு.
கண்களும் கண்டவர்களும்
தூரங்களையே நிரப்புகிறார்கள்..
மங்கிய வெளிச்சத்தில்
நிழல் தனது நிழலை
உய்வித்துக்கொண்டிருக்கிறது..
பூமி எனக்கெதிராய்ச் சுற்றுவது போன்ற
மாயத் தோற்றப் பிழைகள்..

இறப்பதற்காய்ப் பிழைக்கிறேன்..
இப்போதுவரை உயிருடனும் இருக்கிறேன்.
என்ன பயன்..

இறந்துபோன கணவனளித்த பரிசாய்
கருவிலொரு உயிரணுவையும்
உயிரில் எய்ட்ஸ் எனும் ஆட்கொல்லிக் கருவையும்..
சுமக்கும் குற்றத்திற்காக
என்னைப் புறந்தள்ளி வைத்தவர்களால்

மனமுடைந்து இறந்து கொண்டிருக்கும்
எனது நம்பிக்கையை விடவும்
இந்த உடல்
மீப்பெரும் வலிகளைச் சுமக்கவேயில்லை.

– ஜே.ஜே.அனிட்டா

ஓவியங்கள் : அழ. ரஜினிகாந்தன்

உலகம் முழுவதும் நிரம்பியுள்ள உயிர் மூச்சின்
கலவரத்தில்
தனக்கான காற்றை நிரப்புகிறது நுரையீரல்
வாழ்க்கைச் சமுத்திரத்தில் பாய்மரங்களாக
மிதக்கின்றன மனித உயிர்கள்
இறந்தகாலச் சேமித்தலில் பிறந்த நாட்களின்
நீட்சியாய்
நாட்காட்டிகள் கிழித்துக்கொண்டும்
கடிகார முட்கள் நாட்களின் இதயங்களில்
அடித்துக்கொண்டும் அழைக்கிறது
நுண்நொடிகளை.

சமுத்திரம் அருகே கிடக்கும் கரும்பாறை ஒன்றில்
வான்கோ கொகைனும்
பிக்காசோவும் வண்ணம் தீட்டிய அழகை ரசிக்க
மறந்து மிதக்கிறது கண்கள்.

டாவின்சி மலை உச்சியின் குகையில்
கடல் உயிரின் படிமங்களில் கடலைக் காண்பித்தான்.

நாம் காணும் கடலுக்கடியில் எத்தனை மலைகள்
எதிர்கால மர்மங்கள்
மனிதனாக முயற்சிக்கும் சமுத்திரத்தில் எண்ணங்கள்
நட்சத்திரங்களாய்
இருமைக் கூறுகளின் ஒளியைப் பிரசவிக்கிறது.

நான் சமுத்திரம் அருகே கரும்பாறை ஒன்றின் மேல்
கால் நனைய அமர்ந்துவிட்டு எழுகிறேன்.

கால் பற்றிய மணலை உதறி நடக்கும் பாதையில்
தடங்கள் பின்தொடர்ந்தது
காற்றின் தீவிரத்தில் மணலாய் மாறியது தடங்கள்.

திரும்பிய என் பார்வை
பாறை ஒன்றின் மேல் விழுந்தது
கடலை எழுத முயற்சிக்கும் அலையைப் பார்த்து
வெறித்தது என் கண்கள்
அதில் வாழ்வையும் சொற்களையும்
தேடிக்கொண்டிருக்கிறோம்.

– ப.தனஞ்ஜெயன்



## மகள் வீடு

நீண்ட நாட்கள் பிறகு
ஆங்காங்கே பூத்துக் கிடக்கும்
பூக்கள்.

அலைச்சலற்ற மேய்ச்சலில்
மான்கள்.

ஆயிரமாயிரம் கிளைகளான
பெரும் மரத்தில்
கூடமைத்த பறவைகளால்
காற்று மண்டலமெங்கும்
மிதக்கும் இசை.

பாய்ந்தோடும் ஆற்றில்
துள்ளும் மீன்கள்
ஆகச்சிறந்த கவிதையின் தலைப்பின்
கீழமைந்த வளைந்த கோடுகள்.

எளிமையான வீட்டைச் சுற்றி
ஆடு, மாடு மற்றும் கோழிகள்.

மல்லி முல்லை இருவாட்சி
மா பலா தென்னை வேம்பு
இன்னும் பிறவும்.

மண்ணில் உயிரினங்களெல்லாம்
பேரானந்தமாய் வாழ்வதற்கான சாத்தியங்களால்
ததும்புகிறது
மகள் வரைந்த வீடு.

– துரை. நந்தகுமார்

சிறுகதை

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# கருத்தம்மாள்

• பொ.திராவிடமணி
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

அஞ்சம்மாவோட சொந்த ஊரு கும்பகோணம். அவள் அக்கா கனகத்தைத் தாய்மாமன் முருகப்பனுக்குக் கட்டிக்கொடுத்திருந் தார்கள். அவள் கருவுற்றிருந்த நிலையில் அவளுக்கு ஒத்தாசையாக இருக்கட்டுமின்னு அஞ்சம்மாளை அனுப்பியிருந்தாள் அவள் அம்மா கமலம். அஞ்சம்மாளுக்குப் பன்னிரண்டு வயதாகியபோதிலும் வீட்டு வேலைகளை யெல்லாம் சுறுசுறுப்பாகச் சுத்தமாகச் செய்வாள். காலையில் எழுந்து வாசலில் சாணம் தெளித்து, கூட்டிக் கோலமிடுவாள். பின் பாத்திரங்களை யெல்லாம் பளிச்சுன்னு வெலக்கிக் காயவைப்பாள். தண்ணீர் பிடித்துத் தொட்டி நிறைய ஊத்திவிட்டு, குடிக்கவும் தண்ணீர் எடுத்து வைப்பாள். துணிமணிகளைத் துவைத்துக் காயப்போட்டு விட்டுக் குளிப்பாள். கோழிகளைக் கோழிக் கொடப்பிலிருந்து திறந்துவிட்டு, ஆடுகளுக்குத் தழை ஒடித்துப் போடுவாள். இப்படி எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இவள் சமையல்கட்டுக்கு மட்டும் செல்ல மாட்டாள்.

எப்பொழுதும் மாலை ஆறுமணி ஆகிவிட்டால்போதும்.. சிவன் கோயில் ஆலமர மேடையில் அரட்டைக்கச்சேரி ஆரம்பம் ஆகிவிடும். அத்தெருவாசிகள் அனைவரும் வயதுவேறுபாடு இல்லாமல் அங்குக் கூடிவிடுவர். அங்குப் பிரதானமாக இருப்பது அஞ்சம்மாள்தான். ஏனெனில் அவளை அனைவரும் மாத்தி மாத்தி ஏதாவது கேட்டு வம்புசெய்வர். ஆனால் எதுக்கும் அவள் அசரமாட்டாள். எல்லோருக்கும் பதிலைத் தயாராக வைத்திருப்பாள். அப்படித்தான் குமார் அண்ணன், "ஏய் கருப்பாயி.. படிக்கிற வயசுல படிக்காம இங்க வந்து வெட்டியா இருக்குற, உனக்குப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்காதா?" என்று கேட்டதற்கு அஞ்சம்மாள் "அண்ண எங்க அக்காவ நான் பார்க்காம வேற யார் பார்ப்பாங்க? லட்டு மாதிரி அக்கா ஒரு குழந்தைய பெத்துட்டான்னா நான் கும்பகோணத்துக்குப் போயிடுவேன். மீண்டும் பள்ளிக்கூடம் போவேன்", என்றாள். "ஆமா நீ படிச்சிப் பெரிய கலக்கட்டர் ஆகப்போறப்பாரு", என்ற பாட்டியிடம் "ஏன் நான் கலக்ட்டர் ஆகமாட்டேனா? அஞ்சாவதுல நான்தான் முதல் மார்க்குத் தெரியுமா? அம்மா கெஞ்சுச்சேன்னுதான் அக்காவுக்குத் துணையா வந்தேன். அடுத்த வருசம் ஆறாவது சேந்துடுவேன்", என்றாள்.

"சரி ஏதோ நீ சொல்லுற நாங்கக் கேட்டுக்குறோம். கேக்காட்டி விடவாபோற" என்றார் குமார் அண்ணன்.

"ரேவதியக்கா.. என்னக்கா நீயும் சிரிக்கிற. நீயும் நான் சொல்லுறத நம்பலயா" என்றாள் தணிந்த குரலில். "இல்ல அஞ்சம்மா. நீ சொல்லுறத நான் நம்புறேன்'' என்றவுடன் "அக்கான்னா அக்காத்தான்'' என்று ரேவதியைக் கட்டிக் கொண்டாள். அப்படி சிரித்த அஞ்சம்மாள் இன்று தரையில் பாம்பு போல நெளிந்து கொண்டிருக்கிறாள். அவளை ரேவதியால் பார்க்க முடியவில்லை. தனக்கு நினைவில் வந்த தெய்வத்துக்கிட்டயெல்லாம் வேண்டிக் கொண்டாள். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. கதறி அழத்தொடங்கிவிட்டாள். பாட்டி அவளை ஆதரவாக அணைத்து, "அவளுக்கு ஒன்னும் ஆகாது. நீ அழுவாத தாயி" என்றார்.

"இல்ல பாட்டி.. அஞ்சு மணிக்கு அவளப் பாம்பு கடிச்சுதுன்னு சொன்னீங்க. மணி ஆறாகப் போவுது. இன்னும் டாக்டர்கிட்ட அவளை யாரும் அழைச்சிட்டுப் போகாம சுத்தி நின்னு வேடிக்கைப் பாக்குறாங்க. யாராவது அழைச்சிட்டுப் போகக் கூடாதா?"

"இல்லடா முருகப்பனபத்தி உனக்குத் தெரியாது. குணம் கெட்டவன். எல்லோரையும் எடுத்தெறிஞ்சிப் பேசுவான். யாரையும் மதிக்கமாட்டான். அதனாலதான் அஞ்சம்மாவ அழைச்சிட்டுப் போவ யோசிக்கிறாங்க".



"என்ன பாட்டி.. பிள்ள இங்கே துடிச்சிக்கிட்டு இருக்கா. அந்த ஆளு பாம்பு புத்துல பால ஊத்திக் கும்பிட்டுக்கிட்டு இருக்காரு".

"இரு வாரேன். ஏ.. முருகப்பா, என்னய்யா செய்யிற? சீக்கிறம் வாயா" என்றார் பாட்டி.

"இந்தல வந்துடவ்வ ஆத்தா'' என்றாள் அஞ்சம்மாவின் அக்கா கனகம் கண்களைத் துடைத்துக்கொண்டு. "அம்மா கனகம் செலவுக்குப் பணம் இருக்கா தாயி? இல்ல கொண்டுவரவா" என்றார் பாட்டி கரிசனையுடன்.

"இரண்டாயிரம் ரூவா இருக்குன்னொவ.. மெடிக்கலுக்குத்தான போறோம். தேவையின்னா வாங்கிக்குறேன்" என்றாள் கனகம்.

முருகப்பன் வேகமாக வந்து அஞ்சம்மாளைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடக்கத்தொடங்கினார். கனகம் பின்னாடி "அஞ்சம்மா என்ன தவிக்க விட்டுட்டுப்போயிடாதடி'' என்று அழுது புலம்பிக்கொண்டே சென்றாள். சிலர் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று "டாக்சி பிடிக்கலாம்பா" என்றனர். சிலர் "முருகப்பா நாங்க சொல்லுறத கேளு. பைக்கிலயாவது கூட்டிட்டுப் போகலாம்" என்றனர். யார் சொல்வதையும் கேட்காமல் முருகப்பன் பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடந்துகொண்டே இருந்தார்.

சிவன் கோயில் வாசலில் நின்ற பெண்கள் சிலர் பேசிக்கொண்டே கலைந்துசென்றனர். சிலர் அங்கேயே நின்று முருகப்பனைக் குறைகூறிக் கொண்டு இருந்தனர். ரேவதி அவ்விடத்தைவிட்டு நகர்ந்து பாட்டி வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்து யோசித்துக்கொண்டிருந்தாள். "இந்த முருகப்பனை அனைவரும் முரடன், கோவக்காரன், பிடிவாதக்காரன் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர் என்னதான் அப்படி செஞ்சாருன்னு பலதடவ பாட்டிக்கிட்ட கேட்டுட்டேன். ஆனா இப்பவரை சரியான பதில் கிடைச்சதே இல்ல. இந்த மனுசன் யாரிடமும் பேசுவதே இல்ல. தானுண்டு தன் வேலையுண்டுன்னு இருக்குறார். இவர் கதை மர்மமாகத்தான் இப்பவரை இருக்கு" என்று யோசித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது மணி ஏழு இருக்கும்.

ரேவதியின் அண்ணன் கபிலன் வந்தான். "என்ன பஸ் ஸ்டாப்புல ஒரே கூட்டம். நான்பாட்டுக்கு யாருக்கிட்டேயும் எதுவும் கேட்காம வந்துட்டேன். ஒரு அம்மா தலையில அடிச்சிக்கிட்டு அழுதுகிட்டு இருந்தாங்க'' என்றான்.

"என்ன இன்னும் அவள மருத்துவமனைக்கு அழைச்சிட்டுப் போகலையா? ஆவ அவ்வளவு தான் இனி. அவள நினைக்கவேண்டாம்" என்று ரேவதி அழுதாள். கபிலன் "என்ன என்ன சொல்லுற? யாருக்கு என்ன ஆச்சு?" என்றான் பரபரப்பாக. ரேவதி நடந்ததெல்லாம் சொன்னாள். "ஐயோ கருத்தம்மாவுக்கா இப்படியாச்சு. கள்ளம்கபடமில்லாம பேசுவாளே அந்தப் பொண்ணு. நான் போயிப் பார்த்துட்டு வர்றேன்"னு சொல்லிட்டுக் கபிலன் விரைந்து சென்றான்.

காட்டூர் திருவையாறிலிருந்து தஞ்சாவூர் செல்லும் வழியில் இருக்கும் சிறுகிராமம். இந்த வழித்தடத்தில் எப்பொழுதும் பேருந்து சென்றுகொண்டே இருக்கும். ஆனால் ரொம்பக் கூட்டமாகத்தான் இருக்கும். பேருந்து நிற்காது. நிறுத்தினாலும் ஏறவே முடியாது. அப்படிப்பட்ட வழித்தடத்தில் "பேருந்தில் அழைத்துச்செல்லலா முன்னு இவ்வளவு நேரம் காத்துட்டு இருந்துட்டு இப்பதான் ஒரு ஆட்டோவுல ஏத்திக்கிட்டுப் போறாங்க"ன்னு கபிலன் வந்து சொன்னான். வேதனையுடன் ரேவதி, கபிலன், பாட்டி மூவரும் இரவு பதினோரு மணிவரை வெளியிலே திண்ணையில் உட்கார்ந்து அவளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு அப்பதான் உள்ள போயிப் படுத்தார்கள்.

ஈரக்கொலையே நடுங்கும்படியாக அழுகைச் சத்தம் கேட்க ரேவதியும், கபிலனும் கதவைத் திறந்து பார்த்தார்கள். அஞ்சம்மாவுக்கு எல்லாம் முடிந்திருந்தது. அவளை ஆம்புலென்சிலிருந்து இறக்கினார்கள். முருகப்பன் தலையில் அடித்துக் கொண்டு அழுதார். "அடப்பாவி மனுசா அஞ்சுமணிக்கிப் பாம்பு கடிச்ச பிள்ளையை ஏழுமணிக்கு அழைச்சிட்டுப் போனியே. நேரத்தோட அழைச்சிட்டுப் போயிருந்தா அல்லது மத்தவங்க அழைச்சிட்டுப்போக அனுமதிச்சிருந்தா அவளக் காப்பாத்தியிருக்கலாமே" என்று முருகப்பனை மனதுக்குள் சபித்துக்கொண்டே அறியாமையால் ஒரு உயிரை அநியாயமாய்ப் பறிகொடுத்துவிட்டார்களே என்று ரேவதி கதறி அழுதாள்.

"அஞ்சம்மா உன்ன சீக்கிரமா அழைச்சிக்கத் தான் இவ்வளவு கருத்த உனக்கு ஆண்டவன் கொடுத்தானா?" என்று அவள் தாய் தரையில் புரண்டு அழுதாள். அந்த நடுநிசியில் அவர்கள் அழுத சத்தம் அருகில் இருந்த எந்தத் தெய்வத்துக்கும் ஏனோ கேட்கவில்லை.. ■

தொடர் 4

• சு.சுசித்ரா

# திரைப்பாடல்களில் இலக்கியம்



**ப**ட்சி ஒறங்கிருச்சு
பால் தயிரா தூங்கிருச்சு
இச்சி மரக்கிளையில்
எல கூடத் தூங்கிருச்சு

கடல் திரைப்படத்தின் 'நெஞ்சுக்குள்ள உம்ம நெனச்சுருக்கேன்..' பாடல் வரிகள் இவை.

இந்தப் பாடலைப் பாருங்கள். எல்லாரும் தூங்கிட்டாங்க, ஆனால் அந்தத் தலைவிக்கு மட்டும் தூக்கமே வரல.

இப்பொழுது இந்தக் குறுந்தொகைப் பாடலைப் பாருங்கள்.

எம் இல் அயலது ஏழில் உம்பர்
மயிலடி இலைய மாக் குரல் நொச்சி
அணி மிகு மென் கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடு நனி கேட்டே

"என் வீட்டுப் பக்கத்தில உள்ள ஏழில் மலையில (ஏழில் பாலை என்ற மரங்கள் அடர்ந்த மலை) மயிலுடைய கால்களைப் போல இலைகளைக் கொண்ட நொச்சி மரத்தோடு பூக்கள் உதிர்கிற சத்தத்தை இரவெல்லாம் கேட்டுக்கிட்டே இருந்தேன்" என்று தலைவனுக்காகக் காத்திருக்கும் தலைவி சொல்கிறாள்.

கவிஞர் வைரமுத்துவோ இந்தப் பாடல்ல அந்த நொச்சி கூட தூங்கிருச்சு.. ஆனால் இந்தத் தலைவிக்குத் தூக்கம் வரல என்கிற பொருள்ல பாடியிருக்கிறார்.

குறுந்தொகையோட நொச்சி வைரமுத்து பாடலில் இச்சியா வந்து ரசிக்க வச்சிருக்கு.

• • •

நெடுநாள் காண வராத தலைவனால் தலைவி படும் துன்பத்திற்கு ஆறுதலாய் நெய்தல் திணை தோழி உரைப்பதாகக் குறுந்தொகையின் கவின் மிகு பாடல்.

மாரி ஆம்ப லன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்
கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்
வாரா தமையினும் அமைக
சிறியவும் உளவீண்டு விலைஞர்கை வளையே

கரையொடு அலைமொழி கொஞ்சும் கடல்நிலத்தின் காட்சிகளை விவரித்த தோழி தலைவிக்குச் சொல்கிறாள்.. "கடற்கரை நிலத்தின் தலைவன் உன்னைக் காண வாராமல் இருந்தாலும் இருக்கட்டும். அத்துன்பத்தால் உன்னுடைய உடல் மெலிந்து நின் கைகள் முன்பு அணிந்த வளையல்களை இழப்பினும், பிறருக்கு அம்மெலிவு புலப்படாமல் காட்டிக்கொள்வதற்கு இங்கே, வளையல் விற்பவர்களிடம் சிறிய அளவுள்ள வளையல்களும் உள்ளன".

அடுக்கிய வளையல்பெட்டியோடு வளையல்காரர் நிற்பதாய்க் காட்சியமைக்கும் அக்கால ஒளிப்படப்பதிவாளராகக் குன்றியனார் இருந்திருக்க வேண்டும்.!

இதே பொருளில் மோதிரம், வளையல், ஒட்டியாணம் என அணிகலன்கள் பூண்டு செவிக்கின்பம் சேர்க்கும் 'சௌக்கியமா...' என்ற சங்கமம் திரைப்படப் பாடல் சொல்லும் தலைவியின் பசலைத் துன்பத்தை..

அன்பு நாதனே
அணிந்த மோதிரம்
வளையலாகவே
துரும்பென இளைத்தேன்

அந்த மோதிரம்
ஒட்டியாணமாய்
ஆகும் முன்னமே
அன்பே அழைத்தேன்..!

எனப் பாடிப் பார்த்துப் பரவசமடையுங்கள்.. பசலைத் துயர் சூழாமல் களித்திருங்கள். ■

# விரைவில்...

## தமிழக காவல்துறை

மற்றும்

## படைப்பு குழுமம்

இணைந்து நடத்தும்

# மதுவிலக்கு விழிப்புணர்வு மாபெரும் குறும்படப்போட்டி

திரு. ராஜேஷ் தாஸ் இ.கா.ப,
கூடுதல் காவல் துறை இயக்குநர்,
அமலாக்கம், சென்னை.

திரு. ச.மணி
காவல் கண்காணிப்பாளர்
அமலாக்கம், சென்னை.

www.padaippu.com

MARKETING PARTNER
UNIQUE ANGLE
GROUP OF COMPANY


ISSN : 2582-4015